# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 | கதிர் 348 ஐப்பசி 23ஆம் நாள் | வெள்ளிக்கிழமை 09 நவம்பர் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049




**வடமாகாண**
**மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*

பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றை கொண்டிருப்போம்.

பிராங்க் லோயிட் றைற்
(அமெரிக்கக் கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)



# வடக்கில் கன மழை: 1,754 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 9

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற கால நிலையால் இதுவரை 510 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 754 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 கிராம அலுவலர் பிரிவுகளில் 228 குடும்பங்களைச் சேர்ந்த 836 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் இரு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். >> 25

## நாளையுடன் மழை குறையும் சாத்தியம்

யாழ்ப்பாணம், நவ 9

இலங்கைக்குத் தென்மேற்கில் நிலை கொண்டிருந்த தாழ் காற்றமுத்தம் தற்போது இலங்கையை விட்டு >> 25

## கலவரத்தை ஏற்படுத்த முயற்சியாம்

கொழும்பு, நவ. 9

நாடாளுமன்றத்தின் அனைத்துநிலையியல் கட்டளைகள் மற்றும் அரசமைப்பை மீறியே சபாநாயகர் செயற்படுகிறார். அவரின் இந்த நடவடிக்கை மீண்டும் 83போன்றகலவரத்தை ஏற்படுத்தும் முயற்சியாகும்என்று >> 24

## சம்பந்தன், மைத்திரி பேச்சு

கொழும்பு, நவ. 9

தமிழ் அரசியல் கைதிகளின்விடுவிப்புத்தொடர்பில்அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு நடந்துள்ளது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான >> 25



## மைத்திரிவேடத்தில் மக்களுக்கு "அப்பம்"

கொழும்பு, நவ.9

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக நேற்றுக் கொழும்பில் பெரும் வாகனப் பேரணி நடத்தப்பட்டது. அதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போன்று வேடமணிந்தவர் மக்களுக்கு அப்பம் வழங்கினார். அரச தலைவரின் துரோகத்தை >> 25

# 'விளையாட வேண்டாம்'

### மைத்திரி கடும்தொனியில் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 9

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நாங்கள் நிரூபிப்போம். இதனை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. பல்வேறு வித்தைகளை காட்டி ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கிறார் ரணில். நான் அதற்குக் கடைசி வரை இடமளிக்கமாட்டேன். என்னிடம் பல அஸ்திரங்கள் கைவசம் >> 25

## மைத்திரிபாலவுடன் பணியாற்றத் தயார்

### சொல்கிறார் ரணில்

கொழும்பு, நவ. 9

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். >> 25

## நீதிமன்றுக்கு மைத்திரி பதில்கூற வேண்டிவரும்

### எச்சரிக்கின்றார் மங்கள

கொழும்பு, நவ.9

மக்கள் ஆணையை மீறிச் செயற்படும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றுக்கு மட்டுமல்ல மக்கள் நீதிமன்றுக்கும் பதில் கூற வேண்டி வரும். >> 22

## 1,199 ஏக்கர் காணிகளை விடுவிப்பது அசாத்தியம்

### இராணுவம் கூறுகின்றது

யாழ்ப்பாணம், நவ.9

குடாநாட்டில் கையகப்படுத்தியுள்ள காணிகளில் ஆயிரத்து 119 ஏக்கர் காணிகள் இராணுவத்தின் பயன்பாட்டுக்குத் தேவை. விடுவிக்கக் கோரும் காணிகளில் 216 ஏக்கர் காணிகளில் >> 24

# விக்கியின் மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

கொழும்பு, நவ. 9

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தால் நேற்று நிராகரிக்கப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை நான்கு தடவைகள் தவணையிடப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடைந்த பின்னரான சூழலில், வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு சுமார் 4 மணி நேரம் வாதத்தின் பின்னர் நிராகரிக்கப்பட்டது.

வடக்கு மாகாண >> 25

## இரத்தக் களறியை தடுப்பது அவசியம்

### உயன்கொட சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.9

எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றத்துக்கும், நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையே கடும் மோதல் >> 25

## ஊழல்வாதிகளை காத்தவர் மைத்திரி

### விஜேசூரிய சாட்டை

கொழும்பு, நவ.9

முன்னைய ஆட்சியின் ஊழல்வாதிகளுக்கு எதிராகவும் கொலைகாரர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்த போது மைத்திரிபால >> 25

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் குகேந்திரனுக்கு தடை

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம்மாநகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட வேலும்மயிலும் குகேந்திரன் இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ளதால் மாநகரசபை உறுப்பினராக >> 23

## 12 வயதுச் சிறுமிக்கு துன்புறுத்தல் பருத்தித்துறையில் ஒருவர் கைது

வடமராட்சி, நவ.9

வடமராட்சி, பருத்தித்துறையில் 12 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 19 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப் >> 24




# மைத்திரிக்கு மனநோய் அவரைப் பதவி நீக்க நடவடிக்கை எடுப்போம்

## கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 9

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகளை பார்த்தால் அவர் ஒரு மனநோயாளி போன்று செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 38ஆவது சரத்தின் 2ஆம் பிரிவின் பிரகாரம் அரச தலைவர் ஒருவர் மனநோயாளி போன்று செயற்பட்டால் அவரை நீக்குவதற்கான நடவடிக்கைகளை நாடாளுமன்றில் எடுக்க முடியும் என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றிய போது ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச தலைவர் ஒருவர் மனநோயாளி போன்று செயற்பாட்டால் அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான அதிகாரம் அரசமைப்பின் பிரகாரம் மக்களுக்கு உள்ளது. அரசமைப்பின் 38 ஆவது சரத்தின் 2ஆம் பிரிவின் அடிப்படையில் அரச தலைவர் மனநோயாளி போன்று செயற்பட்டால் அவரின் மனநிலை தொடர்பில் மருத்துவரிடம் பரிசோதிப்பதற்கான அதிகாரம் உள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் கருணா அம்மான் புலம்பெயர் தமிழர்களிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலைச் செய்யப் போகிறார், காணிகளை விடுவிக்கப் போகிறார் எனவே, மகிந்தவுக்கு ஆதரவளிக்குமாறு கோருகிறார்.

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் புதிய அரசுக்கு புலம்பெயர் புலி அமைப்புகளிடம் ஆதரவு கோருவது ஜனநாயகம், தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்துக்கான எமக்கு ஆதரவளிப்பது தேசத்துரோகமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (5,10)

# பதவியேற்றதும் சிறப்பு நீதிமன்றத்தில் கைவைக்கின்றார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, நவ. 9

மூவர் அடங்கிய சிறப்பு மேல்நீதிமன்றம் தொடர்பில் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக புதிய நீதியமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்ட சுசில் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மகிந்த ராஜபக்சவின் முன்னைய ஆட்சிக் காலத்தில் பெரும் நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் துரிதமாக விசாரணை நடத்துவதற்காக கூட்டு அரசின் காலத்தில் சிறப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. மகிந்த அணியினர் இந்த நீதிமன்றத்தை முழுமையாக எதிர்த்திருந்தனர். அரசியல் பழிவாங்கலுக்காகவே இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தினர்.

கடந்த 26ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசைக் கலைத்து மகிந்த தலைமையில் புதிய அரசை அரச தலைவர் மைத்திரிபால அமைத்தார். புதிய அரசின் நீதி அமைச்சராக சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது பதவியை ஏற்றவுடன், சிறப்பு மேல் நீதிமன்றம் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும், இன்னும் சில நாள்களில் அமைச்சரவை முழுமையாகப் பூர்த்தி செய்யபடுமெனவும், அதற்கமைய புதிய அரசு ஒரு ஆண்டுக்கு மேலாக நாட்டை ஆட்சி செய்யுமெனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (5)

# அதிர்ச்சித் தகவலுடன் ஆதாரங்களை வெளிப்படுத்தினார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு, நவ. 9

என்னைத் தாக்க வந்தவர்களை துப்பாக்கியால் சுடும் படி எவ்விதமான கட்டளைகளையும் நான் பிறப்பிக்கவில்லை. எனது மெய்ப் பாதுகாலவர்கள், எனது பாதுகாப்பு மற்றும் தங்களின் சுய பாதுகாப்பு கருதியே துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர். முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டே நகர சபை உறுப்பினர் குலதிஸ்ஸ திகனகே மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் கனியவளங்கள் கூட்டுத் தாபனத்துக்குள் பிரவேசித்தனர். அவர்களின் நோக்கமும் நிறைவேறியது. இவ்வாறு முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்ததார்.

ரேணுகா ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

கனியவள கூட்டுத்தாபனத்தில் கடந்த மாதம் 28ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக் காணொலி இதன் போது காட்சிப்படுத்தப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற தினத்தில் மாலை 4.23 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப கட்டிடத்தில் அமர்ந்துள்ளமை மறைகாணியில் (சி.சி.ரி.வி) பதிவாகியுள்ளது. நகர சபை உறுப்பினர் குலதிஸ்ஸ திகனகே அங்கு வந்து முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளார். அமைச்சரின் பாதுகாவலர்கள் அவரை அவ்விடத்திலிருந்து வெளியேற்றியதைத் தொடர்ந்து கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி பிரவேசித்த சிலர் பாதுகாவலர்களை தாக்கி பொருள்களை சேதப்படுத்தினர். இதற்கு முன்னரே அமைச்சரை மெய்பாதுகாவலர்கள் பாதுகாப்பு அறைக்குள் அனுப்பி வைத்துள்ளமை பதிவுகளின் ஊடாக காண முடிகின்றது. அங்கு விரைந்த சிலர் ஆயுதங்களை பயன்படுத்தி பிரச்சினைகளை தீவிரப் படுத்தினர்.

இந்தக் கூட்டத்துக்குள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க தலைவர் பந்துல ருவன் குமார மற்றும் உப தலைவர் பிரேமநாத் கமகே போன்றோர் பிரச்சினைகளை தோற்றுவித்தனர். முரண்பாடுகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அமைச்சரது மெய்பாதுகாவலர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டமை மறைகாணியில் பதிவாகியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்ததாவது.

நான் அமைச்சின் காரியாலயத்துக்குள் சென்று முக்கியமான ஆவணங்களை எடுத்துக் கொண்டிருந்ததாகவும் அவர் என்னிடம் வந்து தாங்கள் தான் தற்போது அமைச்சர் இல்லை என்று குறிப்பிட்டதாகவும் நான் அவரை கன்னத்தில் அறைந்ததாகவும் பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். இந்தப் பிரச்சினைகளுக்கு முழுப் பொறுப்பையும் அவரே ஏற்க வேண்டும். ஒரு அமைச்சரது பாதுகாப்பில் உள்ள மெய்ப்பாதுகாப்பாளரின் கடமைகளையே எனது பாதுகாப்பு அதிகாரிகள் செய்தனர். என்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை சட்ட ரீதியில் நிவர்த்தி செய்துக்கொள்ளும் ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. இவ்விடயத்தினை பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பல போராட்டங்களின் மத்தியில் உருவாக்கப்பட்ட ஜனநாயகம் இன்று அரசியல்வாதிகளுக்கு எதிராக செயற்படுகின்றமை வருந்தத்தக்கது - என்றார். (5)

# பொதுவாக்கெடுப்போ, பொதுத்தேர்தலோ இப்போதைக்கு இல்லை

## கூறுகிறார் எஸ்.பி.திசாநாயக்க

கொழும்பு, நவ. 9

நாடாளுமன்றத் தேர்தலுக்கோ அல்லது பொது வாக்கெடுப்புக்கோ நாங்கள் ஒரு போதும் செல்லமாட்டோம். பெரும்பான்மை உறுப்பினர்களுடனே எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் செல்வோம் என்று நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திர ஊடக மைய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை தற்போது நாங்கள் அமைத்திருக்கின்றோம். தேவையான நேரத்தில் அவர்களை நாங்கள் முன்னிலைப்படுத்த தயாராக இருக்கின்றோம். எதிர்பார்க்க முடியாத பல விடயங்கள் எதிர்வரும் சில தினங்களில் இடம்பெறும். தற்போது நாங்கள் 105 பேர் இருக்கின்றோம். ஐக்கிய தேசிய கட்சிக்கு 97 பேர் மாத்திரமே இருக்கின்றனர். நாங்கள் தான் பெரும்பான்மையாக இருக்கின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று தெரிவித்திருக்கின்றது.

தமிழ் த் தேசியக் கூட்டமைப்பு தற்போது 4 பிரிவுகளாக பிளவுபட்டிருக்கின்றது. அவர்களில் சிலரை எங்கள் பக்கம் திருப்பிக்கொள்ளலாம். அதேபோன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிசாத் பதியுதீனின் கட்சி எங்களுடன் கலந்துரையாடி வருகின்றது. அவர்களின் கட்சியில் இருந்து உறுப்பினர்களைத் தனித்தனியாக எடுக்கலாம். என்றாலும் கட்சிகளை பிளவுபடுத்துவது எமது நோக்கமல்ல. அவர்கள் கூட்டாகத் தீர்மானம் எடுக்க இருப்பதால் நாங்கள் அதில் கைவைக்கவில்லை. தேவை ஏற்படின் கைவைப்போம். அதுதொடர்பில் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் நன்கு அறிந்துவைத்திருக்கின்றனர் என்றார். (5)

# அரசின் பிரதம கொறடாவாக எஸ்.பி.திசாநாயக்க நியமனம்

கொழும்பு, நவ. 9

அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க அரசின் பிரதம கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை தமது பதவிகளை உத்தியோகப்பூர்வமாக பொறுப்பேற்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.பி.திசாநாயக்க நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சராக அரச தலைவர் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# முரளியின் கருத்தை வரவேற்கும் கோத்தபாய

கொழும்பு, நவ. 9

இலங்கை அரசியல் நெருக்கடி நிலைக்கு மத்தியில் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்த கருத்துக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டின் மக்கள் அரசியல்வாதிகளிடம் கேட்பது ஜனநாயகத்தையோ அல்லது உரிமைகளையோ இல்லை. மூன்றுவேளை உணவு உண்பதற்கும் தமது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப் பெற்றுத்தருவதற்குமான பொருளாதார அபிவிருத்தியையுமே கேட்கின்றனர்

வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளைக் கூட அரசியல்வாதிகள் பூர்த்தி செய்யவில்லை. தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களிற்கு அரசியல்த் தீர்வு அவசியம் என தெரிவித்து வருகின்றனர். எனினும் அவ்வாறான தீர்வொன்று தேவையா என்று முரளிதரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவர் வெளியிட்ட கருத்து தொடர்பில் தனது உத்தியோகப்பூர்வ கீச்சகத்தில் பதிவிட்டுள்ள கோத்தபாய, அனைத்து அரசியல் தலைவர்களும் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பாடுபட வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் விதத்தில் முரளிதரனின் கருத்து அமைந்துள்ளது. மேலும் அவரது கருத்து அனைவருக்கும் உத்வேகம் அளிக்கின்றது. என்றும் பதிவிட்டுள்ளார். (5)

# எரிபொருள் விலையை குறைக்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் பவித்ரா



கொழும்பு, நவ. 9

எதிர்காலத்தில் எரிபொருள் விலையை குறைப்பதற்குரிய முக்கிய திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக கனிய வளத்துறை இராஜாங்க அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சுப்பதவியை நேற்று வியாழக்கிழமை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டுக்கு 100 சதவீதம் மசகெண்ணெய்யை மாத்திரம் இறக்குமதி செய்து, அதனை சுத்திகரிப்பதன் மூலம், எரிபொருள்விலையை கணிசமாகக் குறைக்க முடியும். இதுதொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளேன் என்றார். (5)

# தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தவறாக்கி அரசியல் செய்யமாட்டோம்

## கோடிகளுக்காக கொள்கை மாறாது என்கிறார் வேலுகுமார்



"தமிழ் பேசும் மக்கள் வழங்கிய ஆணையை அடகு வைத்து அநாகரீக அரசியல் நடத்தும் கட்சி அல்ல எமது தமிழ் முற்போக்கு கூட்டணி. கொள்கை அரசியலை உயிர்நாடியாகக் கருதி நேர்வழியில் செல்லும் எமது அரசியல் பயணம்கோடிகளுக்காகத்திசை மாறாது." - இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

மலையகத்தை மையப்படுத்தி இயங்கும் அனைத்துக்கட்சிகளும் 'தவளை அரசியல்' நடத்தும் கட்சிகள் அல்ல என்பதையும், மக்களுக்கான அரசியல் என்றால் என்னவென்பதையும் தமிழ் முற்போக்கு கூட்டணி நிரூபித்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரினால் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் குறுக்கு வழியாக - ஜனநாயகத்துக்கு புறம்பாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரச தலைவரும், அவரின் சகாக்களும் முயற்சிக்கின்றனர். அரசமைப்புக்கு முரணான வகையில் புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையும் பொறுப்பேற்றுவருகின்றது. இவையெல்லாம் சட்டவிரோத நடவடிக்கைகளாகும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அவசியம் என்பதால் சிறுகட்சிகளை துண்டாடும் அரசியலும் நடந்தேறி வருகின்றது. அரசதலைவர் விடுத்த அழைப்பின் பிரகாரம், மரியாதை நிமிர்த்தமே தமிழ் முற்போக்கு கூட்டணியினர் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். புதிய அரசுக்கு ஆதரவு வழங்குமாறும் அரசியல் அவர் முன்னெடுப்பது ஜனநாயகத்துக்கு விழுந்த அடியாகும்.

அபிவிருத்தியும் எமது மக்களுக்கு வேண்டும். அதற்கு அப்பால் உரிமைக்காகவும், கொள்கைக்காகவும் மலையக மக்கள் எமக்கு வாக்களித்திருந்தனர். சலுகைகளுக்காக அந்த ஆணையை அடகுவைக்கமுடியாது. எமது தலைவர்கள் அவ்வாறு செய்யவும் மாட்டார்கள். ஆட்சிகள் மாறலாம், காட்சிகள் மாறலாம். பதவிகள் வரலாம், போகலாம். ஆனால், மக்கள் மனங்களை வெல்வதே சவால் மிக்க செயலாகும். அப்படியிருந்தும் எம்மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அதை தமிழ் முற்போக்கு கூட்டணி ஒருபோதும் தவிடுபொடியாக்காது" -என்றுள்ளது.

# முன்னாள் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு

முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்குஎதிராகப்பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அமைச்சர்களின் செயலர் சங்கத்தின் பிரதான செயலர் அஜித் ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரவையின் உறுப்பினர்கள் பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துவதாக குற்றம் சுமத்தியே இந்த முறைப்பாடு செய்யப்பட்டது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் அலரி மாளிகையில் தங்கியிருந்து பொது சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.


முன்னாள் அமைச்சர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள், வீடுகளை இதுவரை கையளிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புதிய அரசுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்க எப்போதும் தயார்

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, நவ.9

மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச ஆகியோரால் தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய அரசுக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்துக்கும் ஆதரவளிக்க தயார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.



புதிய அரசுக்கு எதிராகப் பல்வேறு தரப்பினரும் கடும் அழுத்தங்களையும், விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்ற நிலையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் அரசியல் சதித்திட்டத்தை தோற்கடிப்பதற்கான எந்தவொரு தீர்மானத்துக்கும் எமது கட்சி ஆதரவளிக்கும்.

தற்போதைய அரசின் செயற்பாடுகள் நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

அரசின் சதித் திட்டங்கள் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டும் வகையில் நாட்டின் நான்கு முக்கிய இடங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள் மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி இதுபோன்றதொரு தெளிவூட்டல் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் ஜனநாயகத்தை மதிக்கும் வகையில் நாடாளுமன்றம் உடனடியாக கூட்டப்பட வேண்டும் - என்றார்.

# நாடாளுமன்றில் கலவரம் ஏற்படுத்த மகிந்த தரப்பு முயற்சி

## ஐ.தே.க. பகீர் குற்றச்சாட்டு

கொழும்பு.நவ.9

எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்டதும் அன்றைய தினம் மைத்திரி - மகிந்த தரப்பு குழப்பத்தை, கலவரத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய உறுப்பினர் அஜித் பி பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்டதும், முதல் விடயமாக எந்த தரப்புக்கு பெரும்பான்மை உள்ளதென வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதை வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் மற்றும் அதிகாரங்களின் பிரகாரம் ஒழுங்குப் பத்திரத்தை சபாநாயகரே தயாரிப்பார். 14 ஆம் திகதி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளிவைத்துவிட்டுத்தான் வருவோம். எமது நாட்டில் யார் ஆட்சியாளர்கள் என மக்கள் குழப்பத்தில் உள்ளனர். சபாநாயகர் நீதிமன்றங்களுக்கோ நிறைவேற்று அதிகாரத்துக்கோ அடிப்பணியும் அவசியமில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் 14 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படாதென தெரிவித்துவரும் கருத்துகள் கலவரத்தை ஏற்படுத்தவும், மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கவும் எடுக்கப்படும் முயற்சிகளாகும்.

இதேவேளை, சட்டரீதியாக நாடாளுமன்றத்தை முடக்க முடியாது போயுள்ளதால் தற்போது கலைப்பதற்கான ஆலோசனைகளை நடத்திவருகின்றனர். அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நான்கரை வருடங்களின் பின்னர் தான் நாடாளுமன்றத்தை அரச தலைவர் கலைக்க முடியும் அல்லது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டமொன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா, அரச தலைவருக்கு நாடாளுமன்றத்தை கலைக்கக் கூடிய அதிகாரம் உள்ளதெனத் தெரிவித்துள்ளார். அவருக்கு பகிரங்க சவால் விடுக்கின்றோம்.

அரச தலைவருக்கு நாடாளுமன்றத்தை கலைக்கக் கூடிய சரத்தை தெளிவுபடுத்துங்கள்- என்றார். (10)

# மைத்திரிபால பெரும்பான்மையை நிரூபிக்கவே மாட்டார்

நாடாளுமன்றில் 113 என்ற பெரும்பான்மையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் உறுதிப்படுத்த முடியாதுபோயுள்ளதால், தற்போது நாடாளுமன்றை கலைப்பதற்கான சூழ்ச்சிகளையும் முன்னெக்க ஆரம்பித்துள்ளார். நாடாளுமன்றத்தை கலைக்கக் கூடிய அதிகாரம் அவருக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் கருணாரத்ன பரணவித்தான தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அரச தலைவர், 113 பெரும்பான்மை உறுதிப்படுத்தப்பட்டு விட்டதாக கூறினார். இன்று தமிழ், முஸ்லிம் தலைவர்களிடம் ஆதரவளிக்குமாறு மன்றாடி வருகிறார். அவரின் கருத்து முற்றிலும் பொய்யானது ஏன்பது நாட்டு மக்களுக்குத் தெளிவாகியுள்ளது.

அரசமைப்பை மீறி அமைச்சர்களையும், அமைச்சுகளுக்கான செயலாளர்களையும் நியமித்த அரச தலைவர், தற்போது நாடாளுமன்றத்தை கலைக்கும் முயற்சிகளை எடுத்துவருகிறார். மீண்டும் இந்த நாட்டை சர்வாதிகாரப் போக்குக்கு அழைத்துச் செல்லும் அரச தலைவரின் கீழ்த்தரமான செயலை முறியடிப்போம்.

நாடாளுமன்றம் என்பது நீதிமன்றத்துக்கோ நிறைவேற்று அதிகாரத்துகோ அடிப்பணிந்தது அல்ல. நிறைவேற்று அதிகாரத்தால் மைத்திரியால் நினைத்தது அனைத்தையும் செய்ய முடியாது -என்றார். (10)

# சுற்றுலாப் பயணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

அரச தலைவரின் ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடு காரணமாக எமது நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 8 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான அந்நிய வருமானத்தை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைக்குவரும் சுற்றுலாப்பயணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் 40 வீதமான சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலாவை கைவிட்டுள்ளனர். சுற்றுலாத்துறையில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள்வரை வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்திருந்தோம்.

'ஆனால், அரச தலைவரின் ஜனநாயக விரோதச் செயற்பாடு காரணமாக எமது நாட்டுக்கு எதிர்காலத்தில் வரவிருந்த 8 பில்லியன் பெறுமதியான அமெரிக்க டொலர்கள் வருமானத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது- என்றார். (10)

# எதிர்க்கட்சி வரிசையில் அமர்வேன்

## மகிந்தவுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ள குமார வெல்கம!


**கொழும்பு, நவ.9**
**நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுவேன். மகிந்த ராஜபக்ச பெரும்பான்மையை நிரூபித்தாலும் நான் அவரது அமைச்சரவையில் அமைச்சுப் பதவியை ஏற்கமாட்டேன் என்று தெரிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம.**

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மகிந்தவின் பெரும்பான்மைக்காக ஆதரவு கொடுத்து நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுவேன்.
பெரும்பான்மையை நிரூபித்தாலும் நான் அவரது அமைச்சில் அமைச்சர் பதவியை ஏற்கமாட்டேன். இதுவரை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்காமல் தவிர்த்து வந்தேன். ஆனாலும் தற்போதைய நிலையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.
இந்த நாட்டில் இப்போது இரண்டு தலைமை அமைச்சர்கள். ஒருவர் தலைமை அமைச்சு அலுவலகத்தில் இருக்கிறார். மற்றையவர் தலைமை அமைச்சரின் இல்லமான அலரி மாளிகையில் இருக்கிறார். இதனால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.
யார் இவர்களில் சரியான தலைமை அமைச்சர்? மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்தமைக்காக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நாடு முன்னேறிச்செல்ல வேண்டும் என்றால் முதலில் யார் தலைமை அமைச்சர் என்பதை முடிவு செய்ய வேண்டும்.
இந்த நாட்டில் அரசமைப்பு முறைமை ஒன்று இருக்கிறது. அந்த அரசமைப்புக்கு அமையவே நாம் செயற்படவேண்டும்.
நான் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவுவேன் என்று மக்கள் சொல்வார்கள். நான் ஒருபோதும், கட்சி தாவமாட்டேன்.
மகிந்தவுக்கு 113 உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறது. அதனைக் காண்பித்தால் பிரச்சினைத் தீர்ந்து விடும். நான் எடுக்கும் நிலைப்பாட்டை முன்னரே அறிவித்து விட்டேன்"- என்றார். (ஐ)

## அரச தலைவர் பணிக்குழுவின் புதிய பிரதானி நியமனம்



கொழும்பு, நவ. 9
அரச தலைவர் பணிக்குழுவின் பிரதானியாக மூத்த நிர்வாகத்துறை அதிகாரி எச்.எம்.பீ.ஹிட்டி சேகர நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவர் அலுவலகத்தில் வைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து அவர் நேற்றுமுன்தினம் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.
சுகாதாரம், போசணை, சுதேச மருத்துவத்துறை அமைச்சின் புதிய செயலராக மூத்த நிர்வாகத்துறை அதிகாரியான வசந்தா பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரச தலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)





## மேலும் ஒரு தொகுதி அமைச்சர்கள் பதவியேற்பு

கொழும்பு, நவ. 9
மேலும் ஒருதொகுதி அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள், அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுள்ளனர்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே புதிய அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.
பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நீதி அமைச்சராக சுசில் பிரேம்ஜயந்த,பன்னாட்டு வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராகப் பந்துல குணவர்தன, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சராக எஸ்.எம்.சந்திரசேன,பன்னாட்டு வணிகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் லஸ்மன் வசந்த பெரேரா,போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர் சாலிந்த திசநாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் பதவியேற்றனர். (ஐ)

## அமைச்சரவையில் இல்லாதவர் எப்படி அமைச்சரவைப் பேச்சாளரானார்?


*கேள்வி எழுப்பினார் ஊடகவியலாளர்*

கொழும்பு,நவ. 9
அமைச்சரவையில் இடம்பெறாத ஒருவர் எப்படி அமைச்சரவைப் பேச்சாளராக இருக்க முடியும் என்று, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் அமைச்சரவைப் பேச்சாளர்கள் தடுமாறினர்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சரான கெஹலிய ரம்புக்வெலவும், அமைச்சர் மகிந்த சமரசிங்கவும், கடந்த சனிக்கிழமை அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.
நேற்றுமுன்தினம் இவர்கள் இருவரும், இணைந்து வாராந்த செய்தியாளர் சந்திப்பை நடத்தினர்.
இராஜாங்க அமைச்சராக இருக்கும் கெஹலிய ரம்புக்வெல, எப்படி அமைச்சரவை இணைப் பேச்சாளராக இருக்க முடியும் என்று, ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.
அதற்கு, அமைச்சர் மகிந்த சமரசிங்க பதிலளிக்கையில், " ஊடகத்துறை அமைச்சுக்கு அரச தலைவர் பொறுப்பாக இருந்தாலும், ரம்புக்வெல இணை அமைச்சரவைப் பேச்சாளராகச் செயற்படுவார்" என்று மொட்டையாகப் பதிலளித்தார். (ஐ)



## அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நான் முட்டுக்கட்டை போடவில்லை!

கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க



**கொழும்பு, நவ.9**
**தமிழ் அரசியல் கைதிகளைக் கட்டம் கட்டமாக விடுவிக்கவே, கூட்டாட்சி அரசு தீர்மானித்திருந்தது. அதற்கு நான் ஒருபோதும் முட்டுக்கட்டையாக இருக்கவில்லை.**
இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"அரசியல் கைதிகளில் சிலரை விடுவிப்பதில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு உடன்பாடு இருக்கவில்லை. மாறாக, நீதிக்கு உட்பட்டு, அவர்களைக் கட்டம் கட்டமாக விடுவிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.
சட்டவிரோதமானதும் நெறிமுறையற்ற வகையிலும் செயற்பட்டு, இலங்கையின் அரசமைப்பை நெருக்கடிக்குள் தள்ள, ஒருபோதும் இடமளிக்கப் போவது இல்லை. நாடாளுமன்ற அதிகாரங்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.
நாட்டின் அடுத்த தலைமை அமைச்சராக நியமிப்பது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சஜித் பிரேமதாச மற்றும் கரு ஜயசூரியவுடன், கடந்த 8 மாதங்களாகப் பேசியதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.
அவருக்கு, நான் தலைமை அமைச்சர் பதவியில் இருப்பது பிரச்சினையென்றால், என்னிடம் பேசியிருக்கலாம். இந்த 8.மாத காலப்பகுதியில் தான் எனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பை மேற்கொள்ள வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே கோரிக்கை முன்வைத்துள்ளது. ஏனைய கட்சிகள், இதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.
இதேவேளை, மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இந்த அதிகாரங்கள், அளவானதாகவும் பிரச்சினைகள் ஏற்படாத வகையிலும் பகிரப்படும் பட்சத்திலேயே சமத்துவமானதும் சமாதானமானதுமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்" என்றார்.(ஐ)

# நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு அரச தலைவருக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, நவ. 9
இலங்கையின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹீதர் நவேர்ட் தமது அதிகாரபூர்வ கீச்சகப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:

"அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு, இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் கோருகின்றோம்.

நாடாளுமன்றத்தைக் கூட்டுவது மேலும் தாமதமடைவதால் இலங்கையில் நிச்சயமற்ற நிலை மேலும் தீவிரமடைவதுடன், கூட்டாட்சி உறுதித்தன்மை, பொருளாதாரவளர்ச்சி தொடர்பில் இலங்கை மக்களின் அபிலாசைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம்" என்றும் அந்தக் கீச்சகப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீனாவின் நீர்மூழ்கிகளுக்கு இலங்கையில் இடமில்லை



கொழும்பு, நவ. 9
சீனாவின் நீர்மூழ்கிகளுக்கு இலங்கையில் இடமளிக்கப்படாது என்று புதிய அயலுறவுத்துறை அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சீனாவிடமிருந்து இலங்கை கடன் பெறுகின்றது என்பதற்காகச் சீனாவின் மூலோபாய நலன்களை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கு இலங்கை அடிபணியாது. சீனாவின் எந்த நீர்மூழ்கியும் இலங்கைக் கடற்பரப்பில் தரித்து நிற்க முடியாது. இலங்கை தனது இறைமையைப் பாதுகாக்கும். இறைமையை விட்டுக்கொடுக்க முடியாது. சீனாவுடனான உறவுகள் வர்த்தக நோக்கங்களை அடிப்படையாக கொண்டவை" - என்றார். (ஐ)

## சபாநாயகர் கருவுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, நவ. 9
சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சங்கத்தினரால் நேற்றுமுன்தினம் இந்தமுறைப்பாடுபதிவுசெய்யப்பட்டுள்ளது. மகிந்தராஜபக்சவைத்தலைமை அமைச்சராக ஏற்றுக்கொண்டு சில தினங்களுக்குள் சபாநாயகர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமைக்கான காரணத்தை விளக்குமாறும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.


இதுதொடர்பில்சங்கத்தின்உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்ததாவது:

சபாநாயகர், அரசமைப்பு, சம்பிரதாயம், ஒழுக்கம் என்பவற்றுக்கு எதிராகவும் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துக்கு எதிராகவும்செயற்படுகிறார் - என்றார்.

இதேவேளை லஞ்சம் தொடர்பான சட்டத்துக்கு அமைய ரணில் விக்கிரமசிங்கவுக்கு பக்கச் சார்பாகச் செயற்பட்டுள்ளதன் மூலம் கரு ஜயசூரியவுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட கூடிய குற்றத்தைச் செய்துள்ளதாகத் திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்விப் பிரிவின் தலைவர் விரிவுரையாளர் ராஜா குணரத்ன தெரிவித்துள்ளார்.

## மகிந்தவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது

கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, நவ. 9
எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் மகிந்த ராஜபக்சவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியத் தொலைகாட்சி ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் ஒருவரே தலைமை அமைச்சுப் பதவியை ஏற்க முடியும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அதாவது 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய தலைமை அமைச்சர் ஒருவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதாயின் அதனை நாடாளுமன்றத்தால் மாத்திரமே செய்ய முடியும்.

சபாநாயகரின் கருத்துக்கு அமைய எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் மகிந்த ராஜபக்சவே தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். ஆனால் அவர்களால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதே எனது திடமான நம்பிக்கை"- என்றார். (ஐ)

## மைத்திரி–சஜித் சந்திப்பு எனக்கு தெரியும்

என்கிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு,நவ. 9
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த ஆண்டு தொடக்கத்தில் நடத்திய பேச்சுக்கள் தொடர்பில் எனக்குத் தெரியும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சு செயலக கடிதத் தலைப்புடன் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்குத் தெரியாமல், சஜித் பிரேமதாச, அரச தலைவரைச் சந்தித்தார் என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தச் செய்திகளில் எந்த அடிப்படையும் இல்லை. அரச தலைவருடனான சந்திப்புக்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதுபற்றி சஜித் பிரேமதாச, தெரியப்படுத்தியிருந்தார். சந்திப்புக்குப் பின்னரும், அதுபற்றி தெளிவுபடுத்தியிருந்தார்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## மைத்திரி–மகிந்த இணைந்த அரசை எவராலும் கவிழ்க்கவே முடியாது

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்ச இணைந்து அமைத்துள்ள அரசை யாராலும் கவிழ்க்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையை நிரூபிப்பது அநாவசியமானது என்று தேசிய நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். தேசிய நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சில் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரசு தொடர்பான எந்தவொரு தீர்மானத்தை எந்தவொரு கட்சியும் எடுக்க முடியாது. காரணம் நாடாளுமன்றம் அரசமைப்புக்கு இணங்கவும், அரசு அரச தலைவரின் அதிகாரத்துக்கு இணங்கவுமே செயற்படும்.

14 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வுக்கான ஒழுங்கு பத்திரம் தயாரிக்கப்படும். அதன்படியே அன்றைய அமர்வுகள் இடம்பெறும். இதனைச்சபாநாயகர் தீர்மானிப்பார்" என்றார். (ஐ)

## மகிந்தவுக்கு ஆதரவளிப்பது எமக்குப் பாதிப்பு – கூறுகின்றது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, நவ. 9
புதிய ஆட்சி மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதுவொரு சட்டவிரோதமான செயற்பாடு. மகிந்த ராஜபக்சவின் அரசுக்கு ஆதரவளிப்பது என்பது எமக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்

கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் நேற்றுமுன்தினம் இரவு உம்ரா கடமையை நிறைவேற்ற, புனித மக்காவை நோக்கிப் புறப்பட்டுச் செல்ல முன்னர் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அரசியல் நெருக்கடி தோன்றியுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க முயற்சிப்பவர்கள், இப்படியான கீழ்த்தரமான செயற்பாடுகளிலிருந்து தவிர்த்துக் கொண்டு, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். புதிய ஆட்சி மாற்றத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது சட்டவிரோதமான செயற்பாடு என்ற நிலைப்பாட்டிலேயே கட்சி தொடர்ந்து இருந்துவருகிறது. மகிந்த ராஜபக்சவின் அரசில் முன்னைய சந்தர்ப்பங்களில் இருந்துள்ள காரணத்தினால், அவருடன் மீண்டும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறுவது நியாயமற்றது. அது எமது கட்சிக்குப் பெரியளவு பாதிப்பை ஏற்படுத்தும். அதனை எங்களால் செய்ய முடியாது. அத்துடன் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கட்சித் தலைவரின் அனுமதியின்றி, வேறு எவருடனும் கூட்டுச் சேர்வதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் - என்றார். (ஐ)

# அரசுகளைப் பிரிட்டன் அங்கீகரிப்பதில்லை

பிரிட்டன் அயலுறவு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

பிரிட்டன், நாடுகளை அங்கீகரிக்குமே தவிர, அரசை அங்கீகரிப்பதில்லை என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரிட்டன் அயலுறவு இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக பிரிட்டனின் அயலுறவு அமைச்சர் எமிலி தோர்ன்பெரி, இலங்கையின் தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவையா? அல்லது ரணில் விக்கிரமசிங்கவையா? பிரிட்டன் ஏற்றுக் கொள்வது என்று கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த மார்க் பீல்ட், இலங்கையின் அரசியல் நிலவரங்கள் மிகவும் கவலையளிக்கின்றன. பிரிட்டன் நாடுகளை அங்கீகரிக்குமே தவிர, அரசுகளை அங்கீகரிப்பதில்லை. அரசமைப்பு மதிக்கப்படுவதையும், அரசியல் மற்றும் சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதையும் உறுதி செய்யுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். சபாநாயகருடன் கலந்துரையாடி, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, இலங்கை மக்களின் குரலை ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வெளிப்படுத்த வாய்ப்பளிக்குமாறு, கடந்த ஒக்ரோபர் 29ஆம் திகதி, இலங்கை அரச தலைவரைக்கோரும் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டேன்." என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)



## யாழ்ப்பாணநகரப்பகுதியில் தானியங்கி மின்விளக்குகள்

யாழ்ப்பாணம், நவ. 9

ஈ.கோ. நிறுவனத்தின் அனுசரணையில்யாழ்ப்பாணத்தில் தானியங்கி மின்விளக்குத் தொகுதியொன்று கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மின்சார நிலைய வீதியில் இந்தத் தொகுதி அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் 17 இடங்களில் மின்விளக்குத் தொகுதியை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ள நிலையில். இதன் ஆரம்பகட்டமாகவேயாழ்ப்பாணநகரில் மின்சார நிலைய வீதியில் (தனியார் பேருந்துச்சேவைகள் இடம்பெறும் இடத்தில்) இந்தத் தானியங்கி மின்விளக்குத் தொகுதி அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநாகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் மற்றும் ஈ.கோ. நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோர் இணைந்து இந்தத் தொகுதியைத் திறந்து வைத்தனர். (ம)

# ராணுவம் - தமிழர் இடையில் பிரச்சினைகள் இல்லையாம்

## யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சி கண்டுபிடித்தார்

**யாழ்ப்பாணம், நவ. 9**

**இராணுவத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆயுதத்தால் பேச முயற்சித்தவர்களுக்கும், இராணுவத்துக்கும் இடையிலேயே பிரச்சினைகள் இருந்தன என்று தெரிவித்தார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சி.**



ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஒழுங்கமைப்பில் வாழ்வாதாரரீதியாக பாதிக்கப்பட்டமக்களுக்கு தீபாவளிப் பண்டிகைக்கான புடைவை கள் வழங்கும்நிகழ்வுபலாலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதத்தால் பேச முனைந்தவர்களுடனேயே இராணுவம் போராட்டம் நடத்தியது. அதுதமிழ்மக்களுக்குஎதிரானபோராட்டம் அல்ல. போர்க் காலத்திலும், போருக்குப் பின்னரும் தமிழ் மக்களுடன்இராணுவத்துக்குஎந்தவொருபிரச்சினையும் இல்லை. போர்க் காலத்தில் தமிழ் மக்கள் இன்னல்களைச் சந்தித்தார்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். 30 வருடகால போரில் பல அழிவுகள்இடம்பெற்றதும்தெரியும். அவற்றை 9 வருடங்களில் மீட்டெடுக்க முடியாது. ஆனால் முடிந்தளவு மீட்டுக் கொடுப்பதற்கு இராணுவம் முயற்சிக்கும். குறிப்பாகஇராணுவம்வீடுகளைஅமைத்துக் கொடுக்கிறது, மலசலகூடங்களைஅமைத்துக்கொடுக்கிறது. வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இதற்கும்மேலாக இராணுவத்தின் வசம் உள்ள காணி களில் கூட அந்த காணிகளுக்கு சொந்தமானமக்களுடையஎதிர்காலத்தைக்கருத்தில்கொண்டு தென்னை மரங்களையும், பனை மரங்களையும் இராணுவம் நட்டிருக்கிறது. யாழ். மாவட்டமக்கள்நின்மதியாக வாழும் நாளை நாங்கள்எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் -என்றார்.

இராணுவத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சிக்குதேசாபிமானி, தேசபந்து, லங்காபுத்திர, மானகீத்தவாதி ஆகிய மதிப்புறு பட்டங்களும் வழங்கப்பட்டன. அவின்கடந்தகாலபதிவுகள், சேவைகளைப்பாராட்டியே அவருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டனவாம். (ம)

நல்லூர் பிரதேச சபை

## வடிகாலமைப்பு ஆண்டை அறிவிப்பதுதொடர்பில்ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 9

நல்லூர்பிரதேசசபைக்குஉட்பட்டபகுதியில்அடுத்தவருடத்தில்கூடுதலானவடிகால்களைஅமைப்பதற்குஏற்றநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக அடுத்த வருடத்தை"வடிகாலமைப்புஆண்டு"என்றுஅறிவிக்கவும்சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சபைக்கு உட்பட்ட பன்னிரண்டுவட்டாரங்கள் ரீதியாக, வடிகால்கள் தேவைப்படும் இடங்கள் குறித்த மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏற்கனவேஅமைக்கப்பட்டுள்ள வடிகால்கள்தொடர்பில்கவனம்செலுத்தப்பட்டுஅவற்றைப் பராமரிக்கவும்நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவுள்ளன என்றும்தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## தண்டம்

சாவகச்சேரி, நவ. 9

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரசசாராயம்விற்பனைசெய்தவர்களுக்கும் சட்ட விரோதமாகக் கசிப்பு வைத்திருந்த நபருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுத் தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் அனுமதிப்பத்திரமின்றி அரசசாராயம் விற்பனை செய்த மிருசுவில் பழைய வாய்க்கால், தவசிகுளம், மிருசுவில் வடக்கு ஆகிய பிரிவுகளைச்சேர்ந்தவர்களுக்குஎதிராகத்தாக்கல்செய்தவழக்குகளைவிசாரித்தபதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை முறையே 15 ஆயிரம் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

மிருசுவில் தவசிகுளம் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கை விசாரித்தபதில்நீதிவான்அவருக்கு10ஆயிரம்ரூபாதண்டம் விதித்தார். (ம-9,159)



நல்லைக்கந்தன்தண்ணீர்ப்பந்தல்உதவும்கரங்கள்அமைப்பால்யாழ்ப்பாணம் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும்மாணவரொருவனுக்கு அண்மையில் ஈருருளியொன்று அன்பளிப்புச்செய்யப்பட்டது. நல்லூர்வேலவன்மிக்சர்கடைஉரிமையாளரின் பங்களிப்புடன் இந்த ஈருருளி கொள்வனவு செய்யப்பட்டது. (ம)

## கச்சாய் பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு நாள்

கொடிகாமம், நவ. 9

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் பிரதேச சபை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக கொடிகாமம் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.மோகனச்செல்வன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சே.ஜெகதீசன், கொடிகாமம் திருநாவுக் கரசு ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9,159)



தீபாவளித் தினத்தை முன்னிட்டு இராணுவத்தால் பரவலாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. காங்கேசன்துறைப் பகுதியில் இன்னிசை இரவு நிழ்ச்சியும் அலங்கார ஒளிவிளக்குகளின் காட்சியும் அவ்வாறு நடத்தப்பட்டன. (ம)



மருதங்கேணிகோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட மாணவர்கள்மதிப்பளிப்புநிகழ்வு. யாழ்ப்பாணம் அம்பன் அரசினர் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா தலைமையில் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-70)

## திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் கழிவுகளைச்சேகரிக்க தனியாக வாளிகள்

யாழ்ப்பாணம், நவ. 9

திருநெல்வேலி மரக்கறிச் சந்தை வளாகத்தில்உள்ளவர்த்தகநிலையங்களில்கழிவுகளைக் கொட்டுவதற்கு கழிவு சேகரிப்பு வாளிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச சபையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வாளிகளில் சேரும் குப்பைகளை பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றும் பிரிவினர் அப்புறப்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

வலி. கிழக்குப் பிரதேச சபையின்

## மாநாட்டு மண்டபத்துக்கென இலத்திரனியல் சாதனங்கள்

அச்சுவேலி, நவ. 9
வலி. கிழக்குப் பிரதேச சபையின் கூட்டம் நடைபெறும் மாநாட்டு மண்டபத்தில் உறுப்பினர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு 14 லட்சம் ரூபா செலவில் இலத்திரனில் சாதனங்கள் (ஒலி வாங்கி, ஒலி பெருக்கி) இணைப்புச் செய்யப்பட்டுள்ளன.
“முக்கிய விவாதங்கள் நடைபெறும் போது ஒலி வாங்கி, ஒலி பெருக்கிச் சாதனங்கள் இல்லாமல் கூட்டத்தை நடத்துவது பெரும் சிரமமாக இருந்தது. இதனால் உறுப்பினர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு இருக்கைகள் ஒவ்வொன்றிலும் ஒலி வாங்கி, ஒலி பெருக்கிச் சாதனங்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளன” என்று வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ் தெரிவித்தார். (ம-11)

## ஆசிரியர் மாநாடு

யாழ்ப்பாணம், நவ. 9
இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண ஆசிரியர் மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.
கல்லூரி அதிபர் கே.கிருஸ்ணபிள்ளையின் தலைமையில் கல்லூரியின் அருணாசலம் அரங்கில் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம மேலதிக மாவட்டச் செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## தேசோதயத்தின் தேசியமகாநாடு

யாழ்ப்பாணம், நவ. 9
தேசோதயத்தின் தேசிய மாநாடானது யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த மாநாட்டில் முதன்மை விருந்தினர்களாக சர்வோதயத்தின் தலைவர் ஆரியரட்ணா, மருத்துவர் வின்னியா ஆரியரட்ணா, ரவீந்திரகந்தகே ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

வலி. தென்மேற்குப் பிரதேச சபையில்

# வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதில் இழுபறி

வலி.தென்மேற்கு, நவ. 9

**வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு முன்னோடியாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம், உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்து எந்தவிதத் தீர்வுமின்றி ஒத்திவைக்கப்பட்டது.**

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்கு அடுத்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
இது தொடர்பாக உறுப்பினர்களின் கருத்துக்களை அறிவதற்கான முன்னோடிக் கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சபை மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஏழு கட்சிகளைச் சேர்ந்த 28 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.
வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பது சம்பந்தமாக தவிசாளர் தனது கருத்தை முதலில் தெரிவித்தார். “இருபத்தெட்டு கிராம அலுவலர் பிரிவுகளினூடாகச் சேர்த்து சபையின் நிதி வளத்தையும் தேவைப்பாடுகளையும் கருத்தில் கொண்டு உறுப்பினர்கள் தமது கருத்துக்களையும் திட்டங்களையும் முன்வைக்க வேண்டும்” என்று தவிசாளர் கேட்டுக்கொண்டார். எனினும் சில உறுப்பினர்கள் கிராம அலு வலர் பிரிவுகளினூடாக அல்லாமல் வட்டாரரீதியாக நிதி ஒதுக்கப்பட்டு வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், வேறுசிலர் உறுப்பினர்களினூடாக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படாததை அடுத்து எந்தத் தீர்வுமின்றிக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (ம-115)



யாழ்ப்பாணம், செந்தில் கதிர்வேலாயுத ஆலயத்தில், கந்த சஷ்டியை முன்னிட்டு நேற்றுச் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. (ம-17)



திருவண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கேதாரகௌரி வழிபாடுகள் இடம்பெற்றன. (ம)



வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் இந்த வருடத்துக்கான தனது குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்த சில விளையாட்டு உபகரணங்களை யாழ்ப்பாணம் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்துக்கு நேற்றுமுன்தினம் வழங்கினார். (ம)

வலி. கிழக்குப் பிரதேச சபைப் பகுதியில்

## பாடசாலைகள், ஆலயங்களுக்கு அருகில் போதைப் பொருள்களை விற்பதற்குத் தடை

அச்சுவேலி, நவ. 9
வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஆலயங்களின் சுற்றுச் சூழலில் போதைப் பொருள்கள் மற்றும் புகைப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தடை விதித்து அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது.
ஆலயங்கள், பாடசாலைகள் அமைவு பெற்றிருக்கும் இடத்தில் இருந்து 500 மீற்றர் சதுரஅடி பரப்பளவு வரையிலான பகுதிகளில் இந்தப் பொருள்களின் விற்பனைகள் தடை செய்யப்பட்டுள்ளன.
இந்தத் தடையை மீறி விற்பனை செய்யும் வியாபார நிலையங்களின் உரிமங்கள் பறிக்கப்படும் என்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் இ.ஜங்கரனால் இந்தத் தீர்மான வரைவு கொண்டு வரப்பட்டது. (ம-11)

## கலைவிழாவும் மாணவர் மதிப்பளிப்பும்

யாழ்ப்பாணம், நவ. 9
இணுவில் ‘சில்றன்ஸ் வேல்ட்’ பாலர் பாடசாலையின் கலைவிழாவும் மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.
சமாதான நீதவான் கி.சதீஸ்குமாரின் தலைமையில் மருதனார்மடம் வடஇலங்கை சங்கீத சபையின் மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் பா.சரஸ்வதி, உடுவில் பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நி.சந்திரா, இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் இ.மோகேந்திரம், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரவு ஆசிரியை ந.யான்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
மதிப்புறு விருந்தினர்களாக, புத்தூர் வேம்பாப்புலஞான வைரவர் ஆலய போசகர் ஆ.தங்கராசா, புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் அ.கமலாகரன், மல்லாகம் விற்றில் மாஸ்டர்ஸ் மொண்டிசூரியின் தலைமை ஆசிரியை நே.தயானுசா, மாவிட்டபுரம் விற்றில் மாஸ்டர்ஸ் மொண்டிசூரியின் தலைமை ஆசிரியை சி.புஸ்பலீலா, மல்லாகம் விற்றில் மாஸ்டர்ஸ் மொண்டிசூரியின் ஆசிரியை கு.யதுசாங்கி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

# வெள்ளத்தில் மூழ்கியது கிளிநொச்சி மாவட்டம்



கிளிநொச்சி,நவ.9

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக கிளிநொச்சி நகரின் இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு கிராமங்களின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் வான் பாய்ந்து வருவதால், கிளிநாச்சி ஆனந்தபுரம் கிழக்கு, இரத்தினபுரம் ஆகிய கிராமங்களின் சில பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற பொது மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 77 பேரும் இரத்தினபுரம் கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் நேற்றுமுன்தினம் இரவு முதல்பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சீரான வடிகாலமைப்பு வசதிகள் இன்மையால் வெள்ள நீர் வழிந்தோட முடியாததால் இவ்வாறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 11 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேருக்கான உடனடி உணவுகளைக் கிளிநொச்சியில், உள்ள படையினர் வழங்கியுள்ளனர். 200 குடும்பங்களுக்கான உணவு மற்றும் குடிநீர், பிஸ்கட் போன்றவற்றை கரைச்சிப் பிரதேச சபையின் கிளிநொச்சி நகர சுயேச்சைக் குழு உறுப்பினர் தா.ரஜினிகாந் வழங்கியுள்ளார். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலயத்தினர் நிலமைகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (214)



## கொள்ளளவை நெருங்கும் கிளிநொச்சிக் குளங்கள்

கிளிநொச்சி,நவ.9

கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை காரணமாக கிளிநொச்சிக் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று மாலை வரையில் குளங்களின் நீர்மட்ட வாசிப்பு வருமாறு:

இரணைமடுக்குளம் 26 அடியாகவும், அக்கராயன் குளம் 19 அடி 4 அங்குலமாகவும், கல்மடுக் குளம் 23 அடி 4 அங்குலமாகவும், கரியாலை நாகபடுவான் குளம் 4 அடி 1 அங்குலமாகவும், முறிப்புக் குளம் 15 அடி 5 அங்குலமாகவும், பிரமந்தனாறுக் குளம் 11 அடியாகவும், குடமுருட்டிக் குளம் 5அடி 1 அங்குலமாகவும், வன்னேரிக்குளம் 10 அடியாகவும்



நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இரணைமடு குளத்தின் நீர்மட்டம் நேற்று 19.8 அங்குலமாக இருந்த நிலையில் நேற்று வெகுவாக அதிகரித்துள்ளது. (6)

## புதுக்குடியிருப்பில் வறட்சி உதவி வழங்கல்



முல்லைத்தீவு, நவ.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இடர் முகாமைத்துவ மைய நிலையத்தினால் வறட்சி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் படி பாதிக்கப்பட்ட மக்களைப் பயன்படுத்திக் கடந்த ஐந்து நாள்கள் கிராமத்தைத் துப்பரவு செய்து அவர்களுக்கான உணவுப்பொதிகள் கடந்த 7 ஆம் திகதிமுதல் வழங்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 28 ஆயிரத்து 834 குடும்பங்களுக்கு இந்த உணவுப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன. ஒட்டுசுட்டான்பிரதேசத்தில் இந்த வறட்சி நிவாரணம் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டம் முழுவதற்கும் வழங்கி முடிக்கவேண்டும் என இடர் முகாமைத்துவ மைய நிலைய . முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மூன்றுக்கு குறைவான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதியும், மூன்று அங்கத்தவர்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதியும் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, பருப்பு, சீனி, மிள காய்த்தூள், மா, உருளைக்கிழங்கு, முட்டை உள்ளிட்ட உணவுப் பொருள்களே பொதியிடப்பட்டு வழங்கப்படுகின்றன. (ரி.3)

## அபிவிருத்தி வேலைகளுக்கான ஆவணங்கள் கையளிக்கப்பட்டன

மன்னார், நவ.9

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனால் மன்னார் மாவட்டத்தில் கிராம எழுச்சித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் நேற்றுமுன்தினம் மாலை வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக மன்னார் வீதிகள், கொன்னையன் குடியிருப்பு, பிலிப்புநேரியார் ஆலயம், தாழ்வுபாடு ஆலயவீதி, கீரி சிறிமுருகன் ஆலயம், கீரி கர்த்தர் ஆலயம், பட்டித்தோட்டம் சரஸ்வதி வீதி, செல்வநகர் உள்ளக வீதி, ஆகிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான உறுதிப்படுத்திய படிவங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அமைப்பின் மன்னார் மாவட்ட அமைப்



மாவட்டத்தில் வசந்தபுரம் சிறி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், நடுக்குடா வேளாங்கன்னி ஆலயம், பாவிலு பட்டங்கட்டி குடியிருப்பு, குழந்தையேசு ஆலயம், பருத்திப்பண்ணை தோமையார் ஆலயம், பூலார் குடியிருப்பு, சின்னப்பர் ஆலயம், தலைமன்னார் பியர் சிறிதேவி முத்துமாரி அம்மன் ஆலயம், தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயம், ஜோசப்வாஸ்நகர் உள்ளக பாளரும், மன்னார் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில், மன்னார் நகர சபைத் தலைவர் ஞ.அன்ரனி டேவிட்சன், ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலர் கணேசலிங்கம், மன்னார் நகர சபை உறுப்பினர் ஜங்கர சர்மா, உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று உரியவர்களிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (56)

## வவுனியாவில் 10 அடி நீளமான முதலை மீட்பு

வவுனியா, நவ.9

வவுனியா நாகர் இலுப்பைக்குளத்தில் 10 அடி நீளமான முதலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஆறு மணியளவில் நாகர்இலுப்பைக்குள வீதியில் இந்த முதலை காணப்பட்டுள்ளது. அந்தப்பகுதியில் நின்ற மாடுகளை குறிவைத்த முதலையை அவதானித்த வயோதிபர் ஒருவர் ஏனையோருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனை அடுத்து ஒன்று சேர்ந்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் முதலையைப் பிடிப்பதற்கு முற்பட்டனர். முயற்சி பயனளிக்காமையால் பொலிஸாருக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்துவந்த மன்னார், மடு வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் கடும்சிரமத்திற்கு மத்தியில் முதலையைப் பிடித்தனர். பிடிக்கப்பட்ட முதலை பாதுகாப்பான பகுதிக்குள் விடப்படவுள்ளது. (110)



# மழை தொடர்ந்தால் மன்னாரில் சில குளங்களில் நீர் மேவிப்பாயும்

## எதிர்வு கூறுகிறது மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு

**மன்னார், நவ.9**

**மன்னார் மாவட்டத்தில் மழை தொடர்ந்து நீடித்தால் குளங்களிலிருந்து நீர் மேவிப்பாயும் அல்லது அந்தக் குளங்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர்.**

நாட்டில் கடந்தசிலநாள்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. வடக்கு மாகாணத்தில், வன்னியிலும் கன மழைபெய்து வருகிறது. மன்னாரில் கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழையால் தாழ் நிலப் பிரதேசங்களான சாந்திபுரம், ஜிம்றோன் நகர், எமில் நகர், உப்புக்குளம், எழுத்தூர், இருதயபுரம் போன்ற பகுதிகளில் வெள்ளம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. வீடுகள், வீதிகள், மைதானங்கள் பேன்றவற்றில் அதிகளவில் நீர் சூழ்ந்துள்ளதால் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். வெள்ளம் வடிந்து செல்ல முடியாத நிலையில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இந்த நிலமைகள் தொடர்பாக மன்னார் இடர் முகாமைத்துவப்பிரிவினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது.

"மன்னார் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் இதுவரை எமக்கு அறிவிக்கப்படவில்லை. எனினும் மன்னாரிலுள்ள சிறிய குளங்களில் நீர் நிரம்பியுள்ளது. தொடர்ந்தும் மழை பெய்யுமாக இருந்தால் அந்தக் குளங்களிலிருந்து நீர் மேவிப் பாயும் என்று எதிர்வு கூறப்படுகிறது. மன்னார் மாவட்டத்தின் மடுப்பிரதேசத்தில் உள்ள சில குளங்கள் உடைப்பெடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. தற்போது இங்குள்ள அனைத்து துருசுகளையும் திறந்துவிடுமாறு கூறியுள்ளோம். வெள்ளநீரை உடனுக்குடன் வெளியேற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளது. நீர் நிரம்பியுள்ள குளங்களை அண்டியுள்ள மக்களுக்கு இது தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் பாதிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று மாவட்ட இடர்முகாமைத்துவப்பிரிவினர்தெரிவித்தனர். (21)

# 28 அடியை எட்டியது இரணைமடுக் குளம்

## பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவிப்பு



கிளிநொச்சி, நவ.9

கடந்த இரண்டு வருடங்களின் பின் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் நீர் அதன் கொள்ளளவை அடைந்து வருகிறது என, கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் ந. சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணிநேரத்தில் பெய்த 150 மில்லி மீற்றர் மழை காரணமாக கிளிநொச்சியில் உள்ள குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. குறிப்பாக இரணைமடுக் குளத்தின் நீரேந்து பகுதிகளில் அதிகளவு மழை காரணமாக நேற்றுக் குளத்தின் நீர் மட்டம் 28 அடியாக உயர்ந்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாங்குளம், கனகராயன்குளம், சேமமடுக்குளம் போன்ற குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. அந்தக் குளங்கள் வான்பாய்கின்ற போதும் இரணைமடு குளத்திற்கான நீர் வரத்து மேலும் அதிகரிக்கும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த இரண்டு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வந்த நிலையிலும் பருவ மழை போதுமானதாக இல்லாததன் காரணமாக கடந்த வருடங்களில் நீர் மட்டம் அதன் கொள்ளளவை அடையவில்லை. 2016 ஆம் ஆண்டு நீர் மட்டம் 20 அடியாகவும், 2017 ஆம் 18 அடியாகவும் காணப்பட்டது.

இரணைமடுக்குளம் இதுவரை காலமும் 34 அடியாக காணப்பட்டது. அபிவிருத்திக்கு பின் 36 அடியாக காணப்படுகிறது. இதுவரை காலமும் ஒரு இலட்சத்து ஆறாயிரத்து 500 ஏக்கர் அடியாக (131 எம்.சி.எம்) காணப்பட்ட நீர் கொள்ளளவு தற்போது ஒரு இலட்சத்து 19ஆயிரத்து 500 ஏக்கர் அடியாக(147 எம்.சி.எம்) அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் குளத்தின் நீர் மட்டம் 36 அடியாக உயரும் போது குளம் இந்த கொள்ளளவை அடையும்.

இன்னமும் வட கீழ் பருவபெயர்ச்சி மழை ஆரம்பிக்கப்படவில்லை. தற்போது இடையீட்டுப் பருவப் பெயர்ச்சி மழையே பெய்து வருகிறது. நவம்பர் மாதம் அதிக மழையும், டிசெம்பர் மாதம் குறைவான மழையும் பெய்யும் வாய்ப்புள்ளதாக, வானிலை தகவல்களும் தெரிவிக்கின்றன. இரணைமடுக்குளம் இவ்வருடம் 36 அடி நீரை எட்டும் என்ற மகிழ்ச்சியான நம்பிக்கையுண்டு.

அவ்வாறு 36 அடிக்கு நீர் வந்தால் இதுவரை காலமும் இரணைமடுக்குளத்தின் கீழ் சராசரி 8ஆயிரத்து 500 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுபோக நெற்செய்கை 12ஆயிரத்து 500 ஏக்கராக மாற்றப்படும் - என்றார்.

(105.214)

# முல்லைத்தீவில் உடைப்பெடுத்த குளங்கள் பெருகும் வெள்ளத்தால் மக்கள் அவலம்

முல்லைத்தீவு,நவ.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக பெய்துவந்த கடும் மழை காரணமாக நித்தகை குளம் உள்ளிட்ட 6 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 202 குடும்பங்களைச் சேர்ந்த 647 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்றில் ஆறு குடும்பங்களை சேர்ந்த 26 பேரும்,ஒட்டுசுட்டான்பிரதேசத்தில்179குடும்பங்களைச் சேர்ந்த 566 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 15 குடும்பங்களை சேர்ந்த 48 பேரும்,வெலிஓயாவில் 2 குடும்பங்களை சேர்ந்த 7 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாவட்டத்தில் பல சிறு குளங்கள் நீர் நிரம்பியுள்ளதுடன் நித்தகை குளம் உள்ளிட்ட 6 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

முல்லைத்தீவுமாவட்டத்தில் இடரிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக 64 ஆவது படைப்பிரிவு இணைக்கப்பட்டுள்ளதுடன், முப்படையினரும் இணைந்து மக்களை காக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அதேவேளை மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 5 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களுடைய வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

பண்டாரவன்னியன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 50 குடும்பங்களைச் சேர்ந்த 172 பேரும், பேராறு கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும், இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 32 அங்கத்தவர்களும், அம்பகாமம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21அங்கத்தவர்களுமாக 72 குடும்பங்களைச் சேர்ந்த 251 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒட்டுசுட்டான் பிரதேச இடர்முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர்.

மக்கள் இடம்பெயரும் நிலையும் ஏற்படும். அப்படி இடம்பெயரும் மக்கள் பொது மண்டபங்கள் அல்லது பாடசாலைகளில் தங்கவைக்கப்படுவார்கள். அவர்களுக்குத் தேவையான உணவுகள் வழங்கப்படும் என்றும் இடர் முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர். துணுக்காயில் உள்ள கோட்டைகட்டிய குளம், தென்னியங்குளம், மருதங்குளம், தேறாங்கண்டல்குளம், கோட்டாளங்குளம், ஐயன்குளம் என்பவற்றில் இருந்து கலிங்கு பாய்கிறது. இதில் கோட்டை கட்டியகுளம் சிறிதாக உடைப்பெடுத்து தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. கோட்டாளங்குளம் நேற்று முன்தினம் இரவு உடைபெடுத்து குடியிருப்புக்குள் வெள்ளம் புகுந்தது எனினும் அந்தக் குளமும் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. பெரிய பாதிப்புக்கள் இடம்பெறவில்லை. எனினும் மழை தொடர்ந்தால் மக்கள் இடம் பெயர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று துணுக்காய்ப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(21.ரி 3)

# காலநிலைச் சீர்கேட்டால் வவுனியாவும் பாதிக்கப்பட்டது

வவுனியா, நவ.9

வவுனியாவில் பெய்துவரும் கன மழை காரணமாக நெடுங்கேணி பிரதேச் செயலகத்துக்குட் பட்ட மாறாயிலுப்பை பகுதியில் நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வெள்ளநீர் வீட்டுக்குள் உட்புகுந்துள்ளது. நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிப்படைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட வீடுகள் தற்காலிக கொட்டில்களாக காணப்படுகின்ற நிலமையில், மழையினால் மேலும் பாதிப்படைத்துள்ளன. வெள்ளப்பாதிப்புகள் தொடர்பாக மதிப்பீடு செய்யபட்டு அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த சிலநாள்களாக பரவலாகப் பெய்துவரும் மழைகாரணமாக சிறிய குளங்கள் நிறைந்துள்ள நிலையில் தாழ்நிலப் பகுதிகளில் நீர் தேங்கிநிற்கின்றது. கடந்த இருபத்து நான்கு மணி நேரத்தில் வவுனியாவில் 46.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதுடன், 48 மணிநேரத்தில் 90.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (110)





முல்லைத்தீவு நித்தகைக் குளம்

## வெடுக்குநாரி மலை சிவன் கோவிலில்

# பொலிஸாரின் இடையூறுகள் அரசமைப்பை மீறும் செயல்!

### உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஆளுநருக்கு சி.வி.கே. இரண்டாவது கடிதம்

**யாழ்ப்பாணம், நவ. 9**

வவுனியா வடக்கு வெடுக்குநாரி மலையிலுள்ள ஆதிசிவன் கோவிலில் பக்தர்களுக்குப் பொலிஸார் இடையூறு ஏற்படுத்துகின்றனர். இது அரசமைப்பிலுள்ள சமய உரிமைகளை மீறும் செயல் என்பதால் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு ஆளுநரிடம் இரண்டாவது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.


கடந்த ஒக்ரோபர் 19 ஆம் திகதி முதலாவது கடிதம் அரசதலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி அதன் பிரதி வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு உரிய அவதானத்தைக் கோருவதாகக்கூறி கடந்த முதலாம் திகதி இரண்டாவது கடிதம் ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது.

கோயிலுக்குச் செல்வதற்கான ஏணி சேதமடைந்துள்ளது. புதிய ஏணி அமைப்பதை நெடுங்கேணிப் பொலிஸார் மூலமாக தொல்பொருள் திணைக்களத்தினர் ஏன் தடை செய்கின்றார்கள்? அதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மலை உச்சியில் உள்ள சிவனைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்கள் ஒரு கயிற்றையே பாவிக்கின்றார்கள். கோவில் அர்ச்சகர் உள்ளிட்ட அனைவருக்குமே இது ஆபத்தான முயற்சியாக வுள்ளது.

கோவிலினதும் பக்தர்களினதும் தேவைக்காக ஆழ்துளைக் கிணறு அமைக்க முற்பட்டபோதும் நெடுங்கேணிப் பொலிஸார் தடை விதித்துள்ளனர். இவை இரண்டும் இந்த நாட்டின் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சமய உரிமைகளை மீறும் செயல்கள். கோவிலின் செயற்பாடுகளிலும் மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்களிலும் குறிப்பாக நெடுங்கேணிப் பொலிஸார் தலையிடுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

(4)



பதுளையிலிருந்து திருகோணமலைக்கு நேற்று முன்தினமிரவு பயணித்த அரச பேருந்து மூதூர் இருதயபுரத்தில் மழை காரணமாகத் தடம் மாறி வயலுக்குள் சென்றுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (222)

# போர் முடிந்து 9 வருடங்களாகியும் இழப்பீடு வழங்கி முடியவில்லை!

### கவனத்தில் கொள்கிறோம் என்கிறார் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான்

வவுனியா. நவ. 9

போர் நிறைவடைந்து பல ஆண்டுகள் கழிந்தபோதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடு வழங்கும் பணிகள் முடிவடையவில்லை. அவற்றை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு பணியாற்றுகிறோம்.

இவ்வாறு கூறுகிறார் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மறுவாழ்வு, மீள்குடியேற்றம் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான்.

மறுவாழ்வு அமைச்சில் நேற்று முந்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியதாகத் தெரிவித்து மஸ்தான் அனுப்பிய செய்திக் குறிப் பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இழப்பீடுகளை வழங்கும் திட்ட வரைபுகளைத் தயாரித்து அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளோம்.

25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக உடனடியாக சுமார் 15 ஆயிரம் வீடுகளை அமைக்கவுள்ளோம்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், நலன்புரி நிலையங்களில் வாழ்வோர், மறுவாழ்வு அளிக்கப்பட்டோர், பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆகியோரை உள்வாங்கி பயனாளிகளைத் தெரிவுசெய்து வீடுகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம் - என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)



## ஹெரோயின் பொதிகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, நவ. 9

வவுனியாவில் ஹெரோயின் போதைப் பைக்கற்றுகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.,

பொலிஸாருக்கு நேற்றுக் காலை கிடைத்த தகவலின்படி வவுனியா தேக்கவத்தையில் நடத்திய சோதனையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் தனது உடலில் 8 ஹெரோயின் பெதாதிகளை மறைத்து வைத்திருந்தார் என்றும் அவரின் கட்டுப்பாட்டிலிருந்த முச்சக்கரவண்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் அவர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,110)

# பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளை நீதிமன்ற அனுமதியுடன் அகற்றத் திட்டம்!

### *யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாணத்தில் 5 இடங்களில் சட்டத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகள் நீதிமன்றின் அனுமதியோடு அகற்றப்படவேண்டும் என்று யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ணஜெயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வீதிப்போக்குவரத்து நடைமுறை தொடர்பான மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய கேட்போர்கூடத்தில் வர்ணஜெயசுந்தர தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் 5 இடங்களில் பொதுமக்களால் சட்டவிரோதமாகத் தொடருந்துக் கடவைகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை உடனடியாக அகற்றுவதற்கு, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து, நீதிமன்றின் உத்தரவுடன் சட்டவிரோத கடவைகள் ஐந்தையும் அகற்றுமாறு தனக்குக் கீழ் நிலையிலுள்ள பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுதவிர, யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட சுமார் 30 இடங்களில் வீதிச் சமிக்ஞைகள், கோடுகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்படவேண்டும். அதன் மூலமாக வீதிவிபத்துகளைக் குறைக்கமுடியும். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விபத்துகள் அனைத்தும் முதன்மை வீதிக்கும், முதன்மை வீதிகளை இணைக்கும் இணைப்புவீதிகளுக்கும் அண்மையிலேயே இடம்பெறுகின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், விபத்துகளைத் தடுக்கும் முகமாக உடனடியாக வீதி சமிஞ்ஞைக் கோடுகள் அமைக்கும் பணிகளைச் செயற்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

யாழ்ப்பாண நகரின், ஸ்ரான்லி வீதி, மற்றும் மின்சார நிலைய வீதிகளில் நெரிசல்களைக் கட்டுப்படுத்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் யாழ்ப்பாண மாநகரசபை யாழ்ப்பாணப் பொலிஸாரும் இணைந்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதாகவும் நேற்று முடிவெடுக் கப்பட்டது.

சனநெரிசலான வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் நாளை தொடக்கம் (இன்று) கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று தெரிவித்தார்.

30 வருடகாலமாகப் போர் நடைபெற்ற இடம் என்பதால் தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாகன பாவனை அதிகரித்து வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடப்பற்றாக் குறை நிலவுகின்றது. யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் 27 போக்குவரத்துப் பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மருதனார்மடம், மானிப்பாய் பகுதிகளில் வீதி சமிஞ்ஞை விளக்குளைப் பொருத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வர்த்தக சங்க பிரதிநிதிகள், தனியார், அரச பேருந்து சங்கப் பிரதிநிதிகள், முச்சக்கர வண்டிச் சங்கத்தினர், இலங்கை மின்சாரசபையினர், வீதிஅபிவிருத்தி அதிகார சபையினர், யாழ்ப்பாண மாநகரசபையின் பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்தியத்துக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களின் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# எதிர்வரும் 15, 16 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு

தென்மராட்சி, நவ. 9

அரசியல் குழப்பம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் நடத்துமாறு சுகாதாரத் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள் ளது.

கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர்.

கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பிபட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது. அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

தற்போது நாடு முழுவதும் மழைபெய்து வருவதால் டெங்கு நடவடிக்கையை மேற்கொண்டு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையைப் பிரதேச செயலகத்தினர், பொலிஸார், படையினர், உள்ளூராட்சி சபையினர், டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவினர் மற்றும் பொது அமைப்புகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில், எதிர்வரும் 15 ஆம் திகதி சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிலும் மறுநாள் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மட்டுவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவிலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரிவுகளைச்சேர்ந்த குடியிருப்பாளர்கள், காணி பராமரிப்பாளர்கள் தமது குடியிருப்பு மற்றும் காணிகளில் காணப்படும் நீரேந்து பொருள்களை அப்புறப்படுத்தி டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்கும் பணியில் ஈடுபடுமாறும் அறிவித்துள்ளனர். (4,9)

### மைத்திரி, கோத்தா கொலைச் சதி

# "ட்ரோன் கமரா" பொருத்திய வாகனத்தை நாலக ஏன் ரகசியமாக வைத்திருந்தார்?

## நீதிமன்றில் பல தகவல்களை அம்பலப்படுத்தியது சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, நவ. 9

கொலைச் சதியில் மாட்டியுள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா, ட்ரோன் கமரா உள்ளிட்ட அதி சிறப்பு வசதிகளைக் கொண்ட வாகனத்தைப் பெற்று இரகசியமாகப் பயன்படுத்தியுள்ளார் என்று நீதிமன்றுக்கு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ் இது உள்ளிட்ட விடயங்களை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

கொலைச் சதி விவகாரத்தில் பணி இடைநிறுத்தப்பட்டே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் நாலக சில்வா வைக்கப்பட்டுள்ளார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச, சிவில் பாதுகாப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவே குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இதனை அறிவித்தார். இது குறித்து மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் அவர் கூறினார்.

2 ஆவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா அதிரடிப் படை, சிறைச்சாலை அதிகாரிகளின் சிறப்புப் பாதுகாப்புடன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். மேலதிக விசாரணை அறிக்கையைப் பொலிஸார் முன்வைத்தனர்.

நாலக சில்வா சார்பில் முற்பட்ட மூத்த சட்டத்தரணி அஜித் பத்திரண, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நாலக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை சட்ட விரோதம் என்று வாதாடினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 6,7 ஆம் அத்தியாயங்களைச் சுட்டிக்காட்டி அவர் இந்த வாதங்களை முன்வைத்தார். சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளவே முடியாத சாட்சிகளை மையப்படுத்தியே கைது செய்யப்பட்டுள்ளார். கொலைச் சதி குறித்து அந்தச் சாட்சிகளில் எந்த வெளிப்படுத்தல்களும் இல்லை எனவும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, இந்தச் சதி எப்போது செய்யப்பட்டது என்பது குறித்த கால எல்லைகூட விசாரணையாளர்களுக்குத் தெரியாது. எவருடைய தேவைக்காக அவசரமாக நாலக சில்வாவைக் கைது செய்தனர் என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பதில் தர்க்கத்தை முன்வைத்தார்.

"நாம் ஒரு போதும் நாலகவைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யவில்லை. அவரைக் கைதுசெய்த பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிட்ட நபர் ஒருவருக்கு எதிராகப் புரியும் குற்றம் தொடர்பில் காரணிகள் வெளிப்படுத்தப்பட்டன. அதன்படியே அந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது.

நாலக சில்வாவிடம் 46 மணி நேரமும் 20 நிமிடங்களும் விசாரணைகளை முன்னெடுத்த பின்னரே கைது செய்தோம்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸ் கொலை தொடர்பில் தெளிவான சாட்சியங்கள் உள்ளன. மைத்திரி, கோத்தா கொலைச் சதி தொடர்பில் சாட்சிகள் தற்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலதிக விசாரணைகளைக் கருத்திற்கொண்டு அவற்றை வெளிப்படுத்த முடியாது" என்றார்.

நாலக சில்வாவைப் பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணி கோரினார். இந்த வழக்குக்குப் பிணை வழங்கும் அதிகாரம் இந்த நீதிமன்றுக்கு உள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இரு தரப்பினரும் எழுத்து மூல சமர்ப்பணங்களை மன்றில் முன்வையுங்கள் என்று நீதிவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டு நாலகவுக்கு எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்தார்.

மேலதிக விசாரணைகளில் வெளிப்பட்ட விடயங்களை பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றில் முன்வைத்தார்.

"பிரான்சில் உள்ள துஷார என்பவர் ஆயுதங்களை நாட்டுக்கு அனுப்பி கொலைத் திட்டங்களை அரங்கேற்றவுள்ளார் என்று 2018.09.21இல் நாமல் குமார பொலிஸ்மா அதிபர் பூஜித்தைச் சந்தித்துக் கூறியுள்ளார். அதன் பின்னரே நாமல் குமாரவுக்கு பொலிஸ்மா அதிபர் ஊடாக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு பிரதானியான நாலக சில்வாவின் தொடர்பு கிடைத்துள்ளது.

இந்த தகவல் தொடர்பில் அவர் எந்த முறைப்பாடுகளையும்பதிவுசெய்துவிசாரணைகளை ஆரம்பிக்கவில்லை என்பது இதுவரையிலான விசாரணைகளில் தெளிவாகிறது. பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் கீழ் 3 தனி விசாரணை அமைப்புகள் உள்ளன. 150க்கும் அதிகமான அதிகாரிகள் உள்ளனர். அவர்களில் எவருக்கும் இந்த விடயம் பற்றித் தெரியவில்லை. எனினும் டேன் பிரசாத்துக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாமல் குமாரவின் குரல் பதிவை போட்டுக்காட்டியதாகக் கூறி கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முறுகலின் எதிரொலியாகவே சதி குறித்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி கொழும்பில் மக்கள் பேரணி இடம்பெற்ற வேளை இரு எல்.எம்.ஜி. துப்பாக்கிகள் உரிய பதிவுகளின்றி11 பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த வகையான ஆயுதங்கள் நிமிடத்தில் பல ஆயிரம் தோட்டாக்களை வெளிப்படுத்த வல்லவை. 200 மீற்றருக்கு அப்பால் உள்ள இலக்கையும் தாக்கும். எனவே சன நெரிசல் மிக்க இடத்தில் அதனை எதற்காகக் கொண்டு சென்றனர் என்பது சந்தேகத்துக்குரிய பெரு விடயம்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக, தனக்குக் கீழ் செயற்பட்ட பொலிஸ் அலுவலர்களைப் பயன்படுத்தி சிம் அட்டைகளைப் பெற்று, போலி முகநூல் கணக்கை ஆரம்பித்த விடயங்கள் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபர் செய்யும் விடயங்கள் அல்ல. அவர் சிறப்பு வசதிகளைக் கொண்ட ஒரு வாகனத்தைப் பெற்றுக்கொண்டு பயன்படுத்தியுள்ளார்.

அதில் ட்ரோன் கமரா உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன. இரகசியமாக அதனை எதற்காகப் பயன்படுத்தினார் என்பது குறித்து விசாரணை தொடர்கின்றது" என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் மன்றுக்கு விளக்கினார். (4)

---

# அரச தலைவர் மைத்திரியை ஐ.தே.கவினர் உதாசீனப்படுத்தியதன் விளைவுதான் இது!

## மகிந்த தலைமை அமைச்சரானது பற்றி சு.கவின் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்

அரசதலைவரின் பொறுமையை ஐக்கிய தேசியக் கட்சி உதாசீனப்படுத்தியதால்தான் மகிந்தராஜபக்ச தலைமை அமைச்சராக் நியமிக்கப்பட்டார். கூட்டரசை வீழ்த்தியதும், ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்ததும் கூட்டாட்சியில் செய்த துரோகமாகக் கருத வேண்டாம். கூட்டு அரசை ஆதரித்த மக்களுக்காக எடுக்கப்பட்ட தீர்மானமே இது. இவ்வாறு அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் மேற்படி கருத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடும், மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த ராஜபக்சவும் பிளவுபடுவார்கள் என்று கூறப்பட்டு வந்தபோதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்துவிட்டது.

பெரும்பான்மை உறுப்பினர்களை உருவாக்கிவிட்டோம். கட்சியை இணைப்பது கட்சியின் ஆரோக்கியம் மட்டுமல்லாது நாட்டின் தேவைக்காகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். அவசியமான நேரத்தில் இவ்வாறான மாற்றம் வேண்டும் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்டுள்ளது. வாழ்வாதார நிலமைகள் மோசமாகிவிட்டது. மத்திய வங்கி ஊழல் இந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவில் வீழ்த்திவிட்டது. அதையும் தாண்டி நாட்டின் அரசதலைவரையே கொலைசெய்து அந்த இடத்தை அடைய ஐக்கிய தேசியக் கட்சி செய்த சூழ்ச்சிகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இவ்வாறான நிலையில் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது நாட்டை மேலும் மோசமான நிலைக்குக் கொண்டுசெல்லும். ஆகவேதான் அரசதலைவர் உரிய நேரத்தில் சரியான தீர்மானம் எடுத்தார் - என்றார். (4)

---

# விருப்பு வாக்கு முறையில் மாகாண சபைத் தேர்தல்!

## தேர்தல்கள் ஆணையாளருடன் மைத்திரியும், மகிந்தவும் பேச்சு

கொழும்பு, நவ. 9

விருப்புவாக்கு முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ளது. இதுதொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் அரச தலைவரும் தலைமை அமைச்சரும் பேச்சு நடத்தியுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தலைமை அமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைத் தேர்தலை இந்தமுறை மாத்திரம் விருப்பு வாக்குமுறையில் நடத்தி மக்கள் எதிர்பார்த்திருக்கும் தேர்தலைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. எந்த முறையிலாவது விரைவில் தேர்தலை நடத்த வேண்டும். அதன் மூலமாக அரசதலைவரின் நடவடிக்கைக்கு மக்களின் ஆதரவு இருக்கின்றதா இல்லையா என்பதை அறிந்துகொள்ளலாம் - என்றார். (4)

---

# சமபாலுறவு சமூகத்தினரை இழிவுபடுத்திய மைத்திரி!

## அவர்களின் உரிமையைக் காக்கும் அமைப்பினர் கடும் கண்டனம்

கொழும்பு, நவ. 9

சமபாலுறவு சமூகத்தினரை இழிவுபடுத்தும் விதமாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகக் கருத்துரைத்துள்ளமைக்கு, சமபாலுறவினரது உரிமையைப் பாதுகாக்கும் அமைப்பினர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். அந்தக் கருத்துத் தொடர்பில் அவர் மன்னிப்பு கோர வேண்டும். அல்லது பதவி விலக வேண்டும் என்று கோரியுள்ளதோடு, அரசியல் நாகரிகமற்ற முறையில் அரசதலைவர் செயற்பட்டுள்ளார் என்றும் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் நாகரிகமற்ற முறையில் அரசதலைவர் செயற்பட்டுள்ளார். அதனை அவர் திருத்திக்கொள்ள வேண்டும்.

நாட்டில் அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி தனது தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல்களைத் தீர்த்துக்கொள்ள ஒரு தரப்பினரைப் பகடைக்காயாகப் பயன்படுத்துவது மிகப் பாரதூரமானது.

அரசு தற்போது அடைந்துள்ள அரசியல் நெருக்கடியை நிவர்த்தி செய்துகொள்வதற்காகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சர் மகிந்த தலைமையில் கடந்த 5ஆம் திகதி 'மக்கள் பலம்' என்ற பெயரில் ஏபாதுக் கூட்டம் இடம்பெற்றது. அங்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அரசியல் நாகரிகமற்ற முறையில் கருத்துரைத்தமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த காலங்களில் வண்ணாத்துப் பூச்சிகளுடன் செயற்பட்டதால் அரசியல் ரீதியில் முறையான தீர்மானங்களை மேற்கொள்ள முடியவில்லை என்று குறிப்பிட்டார். 2015 ஆம் ஆண்டிலிருந்து அவர்தானே அரசதலைவராகச் செயற்பட்டுள்ளார். தற்போது குறிப்பிடும் குற்றச்சாட்டு களை அவர் ஏன் கடந்த காலங்களில் பகிரங்கப்படுத்தவில்லை? சமபாலுறவினர் பொருத்தமற்றவர்கள் அவர்களுடன் இணைந்தால் பெரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அவரே குறிப்பிடுவது அந்தப் பிரிவினரின் மனித உரிமையை மீறும் செயல் - என்று தெரிவித்தனர். (4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தொடரும் குழப்பத்தை விரைவில் தீருங்கள்!

கொழும்பு அரசியல் களத்தில் மையம் கொண்டிருக்கக்கூடிய புயல் அடுத்த வாரத்திலும் தணியும் போன்று தெரியவில்லை.

மகிந்தவுக்குஎதிரானநம்பிக்கையில்லாத்தீர்மானத்தை எதிர்ப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும், தமிழ் முற்போக்குக் கூட்டணியும் முஸ்லிம் கட்சிகளும் உறுதியாகத் தீர்மானித்த நிலையில், மகிந்ததரப்பு இனிமேல் வெல்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது அனேகமாக உறுதியாகிவிட்டதுஎன்கின்றதுகொழும்புஅரசியல். ஆனால், காலையில் ஐ.தே.கவுடன் இருந்துவிட்டு மாலையில் அமைச்சர்களாகப் பதவியேற்பவர்கள் இருக்கும் வரையில் இறுதி நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்பது ஒருபுறமிருக்க, எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது மகிந்தவை எதிர்க்காமலாவது இருக்கும்படி நாடாளுமன்றஉறுப்பினர்களைக்கொண்டுள்ளதமிழ், ம்ஸ்லிம் கட்சிகள் அனைத்திடமும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை முன்வைத்திருப்பதுமகிந்தபெரும்பான்மையைப்பெறமாட்டார் என்கிற நம்பிக்கையையே வளர்க்கின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும்போது அரச தலைவரின் உரையைத் தொடர்ந்துமகிந்தவுக்கு எதிரானநம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று ஐ.தே.கவும் அதற்கு அனுமதிக்கப்படாது என்று சு.கவும் இப்போதே அடிபடத் தொடங்கியுள்ளன. எனவே 14ஆம் திகதியும் பிரச்சினை பெரிதாகவே இருக்கும்என்றுஉறுதியாகஎதிர்பார்க்கலாம்.

இதற்கிடையில், ஒருவேளை பெரும்பான்மைப் பலத்தைநாடாளுமன்றத்தில்நிரூபிக்கத்தவறிமகிந்த தோற்றுப் போனால், அடுத்து ஆட்சியைத் தனித்துப் பொறுப்பேற்கவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அமைச்சராக ரணில் பதவிக்கு வருவதைத் தவிர்க்க உதவுங்கள் என்று தமிழ், முஸ்லிம் கட்சிகளிடம்பேசும்போதுமைத்திரிகேட்டிருக்கிறார். முன்னதாக, மகிந்த தோற்று ரணில் வெற்றிபெற்றால் அடுத்த ஒரு மணி நேரத்தில் தான் பதவி விலகிவிடுவேன் என்று சுதந்திரக் கட்சியினர் முன்னால் வீரவேசப் பேச்சுப் பேசியிருந்தவர் மைத்திரி. இப்போது அவர் ரணிலுடன் பணியாற்ற முடியாது என்பதால் அவரைத் தவிர்த்து வேறு ஒரு தலைமை அமைச்சரை நியமிக்கப் பாருங்கள் என்பதன் மூலம் பதவியிலிருந்து விலகும் எண்ணம் தனக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தி யிருக்கிறார். பதிலுக்கு மைத்திரியுடன் தொடர்ந்தும் பணியாற்று வதில் தனக்கு இடைஞ்சல்கள், இடர்பாடுகள் எதுவும் இல்லை என்று ரணில் தெரி வித்திருக்கிறார். இதன் மூலம் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து தானும் அகன்று போகப்போவதில்லை என்று அவரும் மறைமுகமாகச் சுட்டுகிறார்.


இப்படியேஇருவரும்தத்தமதுபதவிகளில்தொங்கிக் கொண்டுஅதிகாரப்போட்டியிலேயேஈடுபடப்போகிறார்கள் என்றால், எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் பிரச்சினை ஒரு முடிவுக்கு வராது என்பது நிச்சயம்.அரசியல்உறுதிப்பாடற்றநிலைமைதொடர்ந்து வந்தால் நாட்டின் நிலை மேலும் அதளபாதாளத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது.

நல்லாட்சிஎன்றுகூறிக்கொண்டுஆட்சிக்குவந்தவர்களின் நிலமை நாறிப்போன ஆட்சி என்பதாக முடிந்திருப்பது இலங்கையின்சாபக்கேடு. விரைவில் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்றால், அமெரிக்கா எச்சரித்திருப்பதைப் போன்று உலகில்இலங்கைதனித்துவிடப்படுவதுமட்டுமன்றி, மக்களும் அரசியல்வாதிகள் மீதும் முழு விரக்தியடையும் நிலையும் ஏற்படும்.


# இந்து மதத் தலைவர்களும் அரசியலுக்குள் நுழைகின்றனரா?

ஏரம்பு பரஞ்சோதி


இலங்கை அரசியலில் பௌத்த மதத்தின் செல்வாக்கு மன்னர் காலத்திலிருந்து இன்றுவரை அதிகரித்தே காணப்படுகின்றது. சிங்கள மக்களின் மிக முக்கிய தலைவரான அல்லது சிங்களம் மட்டுமே என்ற விடயத்தை முன்வைத்தவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவைச் சுட்டுக்கொல்லும் அளவுக்கு ஒரு பௌத்த துறவியான புத்தர பித்தர தேரர் காணப்பட்டார். பொதுபலசேன அமைப்பின் செயலாளரான அத்தே ஞானசார தேரர் அரசியல் விடயங்களில் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிப்பதிலும், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டுவதிலும் முன்னிலை வகிப்பவர். அவர் தற்போது சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.



மோடி



சம்பந்தன்



சுமந்திரன்

**மதத் தலைமீட்டால் மக்கள் படும் அவதிக்கு பெரும்பான்மை மதத் தலைமீடுகள் முன்னுதாரணம்**

பெரும்பான்மை மதத்தினரின் அரசியல் தலையீட்டால் நாட்டின் சிறுபான்மையினர் அனுபவித்து வருகின்ற இன்னல்கள் சொல்லில் அடங்காதவை. எத்தனை அரசமைப்புக்களைக் கொண்டுவரினும். நாடாளுமன்றம் மூலம் ஜனநாயக வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பினும் அவை எல்லாமே இறுதியில் பெரும்பான்மை மதத் தலைவர்களின் கால்களிலேயே போய் மண்டியிட்டுக் கொள்கின்றன. இதனால் ஏனைய சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் அரசியல் உரிமைகளற்றவர்களாக ஒடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். பௌத்த மதத் தலைவர்களின் செல்வாக்கு அரசியலில் உள்ளதுபோல இந்து மத்தினரின் செல்வாக்கு இதுவரை இருக்கவில்லை.

இந்த நிலையில் சிவசேனா இந்து அமைப்பின் தலைவரான மறவன்புலவு சச்சிதானந்தன் வெளிப்படையாகவே அரசியலில் இறங்கியிருப்பது தெரிகிறது.



இலங்கை சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன்

**இந்துக்கள் -இந்தியா - சிவசேனா**

இந்திய அரசுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பது சிவசேனா அமைப்பு. சாவகச்சேரியில் நடைபெற்ற கண்டனப் போராட்டம் ஒன்றின்போது 'சிங்களவரும் தமிழருமே இலங்கைத் தீவின் பூர்வீக மக்கள்' என அந்த அமைப்பின் தலைவர் குறிப்பிட்டிருந்த விடயம் பல தரப்பினரின் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தது. பௌத்த அமைப்புக்களுடனும், அவர்கள் சார்ந்த அரசியலுடனும் ஒத்துப்போகும் தன்மை சிவசேனா அமைப்பிடம் காணப்படுவதை இதன் மூலம் உணர முடிந்தது. நிலமை இவ்வாறிருக்கும்போது அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஒருமையில் விளித்துப் பேசியிருந்தார். இதைக் கண்டிக்கின்ற மறவன்புலவு சச்சிதானந்தம், அவ்வாறு தமிழ்த் தலைவர்கள் கீழ்த்தரமாக உரையாற்றக்கூடாது எனவும் உடனடியாகச் சுமந்திரனை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் தமழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவுக்குக் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

**கண்டனத்துக்குரியதே ஆனால், கண்டனம் தெரிவிப்பவர் கவனம் பெறுகிறார்**

எந்தவொரு நபரையும் ஒருமையில் விளித்துப் பேசுவதானது கண்டனத்துக்குரியதே. ஆனால். குறித்த அரசியல் கட்சியாலும். அதன் நிர்வாகத்தாலும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய அதன் உறுப்பினர் ஒருவரை ஓர் இந்து அமைப்பு கட்டுப்படுத்த முனைவதே இந்த விடயத்தில் மக்கள் மத்தியில் இங்கு கவனம் பெறுகின்றது. கிறிஸ்தவரான சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எக்குமாறு ஓர் இந்து அமைப்புக் கேட்டிருப்பதும் கவனம் பெறுகிறது. இது சமூகங்களில் பல சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கலாம்.

இது விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி எடுக்கப் போகும் நடவடிக்கை தொடர்பில் சாதகமாக அல்லது பாதகமாக இந்து அமைப்புக்கள் குரல் கொடுக்க வாய்ப்புண்டு. இத்தகைய அறிவிப்பின் மூலம் காவி உடை தரித்த இந்து அமைப்புக்களும் பௌத்த அமைப்புக்களைப்போல அரசியலில் குதித்து விட்டனவோ? என எண்ணத் தோன்றுகின்றது.

எதிர்காலத்தில் இந்த அமைப்புக்கள் ஓர் அழுத்தக் குழுக்களாகச்செயற்படவும், நேரடியாக அரசியலில் ஈடுபடவும் வாய்ப்புக்கள் இல்லை என்று கூறுவதற்கில்லை.


# ரணிலின் மாஸ்ரர் பிளானும் ம.அணியின் மதி நுட்பமும்

நவரத்தினம் தனுஜா

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவின் திடீர் முடிவால் இலங்கை அரசியல் குழம்பிப் போயுள்ளது. இதன் இறுதித் தன்மை நாடாளுமன்ற அமர்வில் தங்கியுள்ளது. அந்த அமர்வும் தள்ளாட்ட நிலையிலேயே இருக்கிறது.

இதற்கான கால இழுத்தடிப்பின் பின்னணியில் பணத்துக்கான பேரம் பேசல்களும், கட்சி தாவும் செயற்பாடுகளுமாக, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் இருட்டுலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் பலத்தை - பெரும்பான்மையை நிரூபிப்பவரே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படவிருக்கின்ற இந்தச் சூழலில் ஐக்கியதேசியக் கட்சி - சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு முக்கிய கட்சிகளின் திசைகளிலும் காற்று மாறி மாறி வீசுவது தெரிகிறது.





**ரணிலின் துடுப்பாட்டத்துக்கே நாடாளுமன்ற மைதானம் வாய்ப்பானது**

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் திறன் பற்றி மெய்ச்சுகின்ற பலரும் 'ரணிலின் மாஸ்ரர் பிளான்' என்பதாக அவரைச் சுற்றிய ஒளிவட்டமாகக் கருதி அதை அதிகம் உச்சரிக்கின்றனர். "மேற்குலக நாடுகளின் நடை, உடை, பாவனைகளை மாத்திரமன்றி மேற்குலக அரசியல் சட்ட நுணுக்கங்களில் கைதேர்ந்தவர் ரணில்" என்று ரணிலை மெய்ச்சுகின்றனர். அரசியல் சட்டதிட்டங்கள் அவருக்கு அத்துப்படி என்பதால் அவற்றுக்குட்பட்டு, அவற்றைத் தனக்குச் சாதகமாகக் கையாண்டு, காய் நகர்த்தி நாடாளுமன்ற மைதானத்தில் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடக்கூடியவர் ரணில் என்பது அநேகரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இதனால் நாடாளுமன்று மூலம் தீர்க்கப்பட விருக்கின்ற தலைமை அமைச்சர் யார்? என்கின்ற விடயத்தில் ரணில் இலகுவாக வெற்றி கொள்வார் என்பது இந்தத் தரப்பாரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ரணிலிடமுள்ள இன்னொரு சிறப்பம்சம் நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றிய தெளிவாகும்.

**தனது பலத்தை நிரூபிப்பதற்கு ரணில் உத்வேகம்**

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் ரணில் விக்கிரமசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்டு, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பதவியேற்புச் செய்யப்பட்ட நாளன்று நிகழ்ந்த சம்பவத்தை இந்த வேளையில் நினைவு கூர்வது பொருத்தமானது. காலியில் ஒரு நிகழ்வில் பங்கேற்றுவிட்டுக் கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இடி விழுந்தது போன்று சென்றடைந்த செய்தி அது. அவரைப் பதவியிலிருந்து நீக்கியிருப்பதான மைத்திரியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு அவருடைய காதுகளைச் சென்றடைந்திருந்தது. ஆனால், அவர் உடைந்துபோய்விடவில்லை. கொழும்பைத் தான் சென்றடைவதற்கிடையில் தனது கட்சிக்காரர்களை அலரிமாளிகைக்கு வருமாறு உத்தரவிட்ட ரணில், தானே தலைமை அமைச்சர் என்பதைக் கொழும்புக்கு வந்து கொண்டிருக்கும் போதே ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார். நாட்டு மக்களுக்குச் சிறப்பு அறிவிப்பை விடுக்கும் பத்திரிகையாளர் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

அலரிமாளிகைக்கு அவர் வந்ததும் அவருடைய தலைமையில் கூட்டம் நடந்தது. அதன் பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பு. பத்திரிகையாளர் சந்திப்பில் தானே நாட்டின் தலைமை அமைச்சர் என்பதையும், சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தான் அந்தப் பதவியில் தொடர்வதாகவும் கூறினார். அன்று மாத்திரமல்ல இந்த இழுபறி தொடர்ந்து கொண்டிருக்கும் இன்று வரையும் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டித் தீர்வைக் காணுமாறு ரணில் தரப்பு அழுத்தங்களைக் கொடுத்தபடிதான் இருக்கிறது. காரணம் நாடாளுமன்ற மைதானத்தில் ரணிலே ஆட்டநாயகனாவார் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. அதில் ரணில் தரப்புக்கு அதீத நம்பிக்கை இருக்கிறது. சபாநாயகர் கருஜெயசூரிய உள்ளிட்ட தரப்பினர் ரணில் இந்த அரசியல் சதுரங்கத்தை இலகுவாக வெற்றி கொள்வார் என்பதாலேயோ அல்லது ஐக்கியதேசியக் கட்சியைப் பின்னணியாகக் கொண்டதாலேயோ என்னவோ நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி ரணிலைக் களமிறக்கி அவரது அதிரடி ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ஆவல் கொண்டு இருக்கின்றனர் என்பதும் புரிகிறது.

**மறுபக்கம் மகிந்த - மைத்திரி தரப்பினரின் எதிராட்டம்**

நாடாளுமன்ற மைதானத்தில் களமிறங்குவதற்குப் பின்னடிக்கின்ற அல்லது தயங்குகின்ற அணி என்று மைத்திரி - மகிந்த அணியைச் சொன்னால் அதை நிராகரிப்பதற்கு எவரும் முன்வரப்போவதில்லை. இந்தவிடயம் உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால், கால இழுத்தடிப்பு என்று சொல்லப்படுவதன் பின்னணியில் நடக்கின்ற 'பினாமி' விடயங்களிலும் சூழ்ச்சியிலும் கைதேர்ந்தது இந்த அணி. இதுவும் நெல்லிக்கனி தான். இந்த இழுத்தடிப்புக்குப் பின்னாலுள்ள இருட்டுலகத்துக்குள் நடந்து கொண்டிருக்கும் பணப் பரிமாற்றங்கள், மற்றும் பதவி வழங்கல்கள் உட்பட்ட பல விடயங்களில் மகிந்த - மைத்திரி அணியினரின் மதிநுட்பம் அலாதியானது என்கின்ற செய்திகள் அடிபடுகின்றன. இந்த இருட்டுலகம் நாடாளுமன்றத்தில் வெளிச்சத்துக்கு வரும் பட்சத்தில் தான் எந்த உறுப்பினர் எந்தப் பக்கமிருக்கின்றார் என்று தெரியவரும். ரணிலின் மூளைப் பலத்தைப் பயன்படுத்திச் சட்ட ரீதியான விடயங்களில் வெற்றி பெற முயற்சித்தாலும் நேரடியான மக்கள் செல்வாக்கைப்பெறும் அளவுக்கு அவரிடம் காணப்படும் 'துரைத்தனமான' அணுகுமுறை தடையானதே. ஆனால், மகிந்த அணி சகல தரப்பு மக்கள் மத்தியிலும் இறங்கி வேலை செய்யக்கூடியது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதனால் இவ்வகைக் கெட்டித்தனத்தை - மதிநுட்பத்தை உடைய மகிந்த - மைத்திரி அணியினரும் எதிரணியிலுள்ள ரணிலுக்குச் சளைத்தவர்கள் அல்ல. அவருடைய 'மாஸ்ரர் பிளானை' உடைக்கக் கூடிய உத்திகளைக் கைவசம் வைத்திருக்கின்ற பலமான எதிர்த்தரப்பினர்தான். ஆகவே இவர்களின் இருட்டுலக ஈர்ப்புக்கள் எப்படியிருக்கப்போகின்றன என்பதையும் அதற்கு ரணிலில் பதிலாட்டம் எப்படியிருக்கப்போகின்றது என்பதையும், இத்தகைய அரசியல் தலைமைகளை உருவாக்கி வைத்திருக்கின்ற மக்கட் பாவிகளாகிய நாம் கண்டுணர்வதற்குச் சில காலம் வரைப் பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# முஸ்லிம்களும் தமிழரும் உழைப்பில் போட்டி போட வேண்டும்

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலுள்ள தமிழர்கள், "முஸ்லிம்கள் தொடர்ந்தும் முன்னேறுகிறார்கள். எமது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்" என்று குற்றம் சாட்டுவது வழமையாகிவிட்டது.


முஸ்லிம்கள் முன்னேறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

அதிகாலை நான்கு முப்பது மணிக்கு எழுந்து தொழுதுவிட்டுத் தமது முயற்சிகளில் இறங்குவது. மதத் தலைவரான மௌலவியின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து ஒழுகுவது.

பாடசாலைக் கால்வி தொடக்கம் பல்கலைக் கழகக் கல்வி வரை பள்ளிகளுக்கூடாகப் பணம் சேர்த்து மாணவர்களுக்கு வழங்குவது. தொழில் இல்லாதிருப்பவர்களுக்குப் பள்ளிகளுக்குகூடாக உதவுவது, மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளில் முஸ்லிம் அரசியல்வதிகள் முழு மூச்சுடன் ஈடுபடுவது, சிங்கள மொழியைப் படிப்பதில் ஆர்வம் காட்டி அரச துறைகளில் பதவிகளைப்பெறுவது. வருடம் முழுதும் வருமானம் தரக்கூடிய தொழில்களைக் கண்டு பிடிப்பது, பல தொழில்நுட்பக் கல்லூரிகளில் இலவசமாக வழங்கப்படுகின்ற பயிற்சி நெறிகளை ஒழுங்காகக் கற்றுத் தொழில் தேர்ச்சி பெறுவது, எந்தத் தொழிலையும் வெட்கமின்றிச் செய்வது, பெரியவன், சிறியவன் என்ற ஏற்றத் தாழ்வின்றி அனைவரும் அல்லாவுக்குக் கீழ்ப் பட்டவர்கள் என மதித்து நடப்பது. இவ்வாறு பல காரணங்களால் முஸ்லிம்கள் முன்னேறிக்கொண்டிருக்கும்போது கோவில்களைக் கட்டுவதாலும், மதுபானக் கடைகளை நாடுவதாலும் தமிழர்கள் எதையும் அடைந்துவிட முடியாது. கடின உழைப்பும் ஒழுங்கமைப்பும் ஓர் இனம் முன்னேறுவதற்கு அவசியம் தேவைப்படுகின்றன. அதையே தமிழர்கள் செய்ய வேண்டும்.

உழைப்பைக்கூட்டிச் சேமிப்பை அதிகரித்தால் ஒரு சமூகம் முன்னேறுவது மிகவும் இலகுவானது. மதமானது மனிதனை முன்னேற்றுவதற்கு உதவுவது முஸ்லிம்களின் விடயத்தில் தாராளமாகக் காணப்படுவதையும் கவனித்தாக வேண்டும்.

*சு.தில்லையம்பலம், யாழ்ப்பாணம்.*



# அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் முதல் அகதிப் பெண் உறுப்பினர்!

நியூயோர்க்.நவ.9
அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் முதல் முறையாக ஆப்கானிலிருந்து அமெரிக்காவுக்குள் குடியேறிய (அகதி) பெண் ஒருவர் இடம்பெற இருக்கிறார். அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது. அமெரிக்க நாடாளுமன்றத்தில் உள்ள செனட் (100 உறுப்பினர்கள்) மற்றும் பிரதிநிதிகள் சபைக்கு (435 உறுப்பினர்கள்) தேர்தல் நடந்தது. பதவிக்காலம் முடிவடைந்த பிரதிநிதிகள் சபைக்கும், செனட்டின் 435 உறுப்பினர்கள் பதவிக்கும், 36 ஆளுநர் பதவிகளுக்கும் தேர்தல் நடந்து முடிந்தது. இதில் பிரதிநிதிகள் சபையை ஜனநாயகக் கட்சி கைப்பற்றியது. இந்த நிலையில் பிரதிநிதி சபைக்கான தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர், டென்னிஸ்ஸைத் தோறகடித்து வெற்றி பெற்றிருக்கிறார் சபியா யாசிர். இவர் ஆப்கானிஸ்தனைப் பூர்வீகமாகக் கொண்டு அமெரிக்காவில் குடியேறிய முஸ்லிம் பெண். (சபியா யாசிரின் குடும்பம் ஆப்கனில் தீவிரவாதிகளால் மிகுந்த துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருந்தது குறிப்பி டத்தக்கது). 27 வயதான சபியா யாசிர் பிரநிதிகள் சபையில் இடம் பெறும் முதல் அகதி என்ற பெருமைக்கு உரியவராகி இருக்கிறார். அமெரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிப் பெற்றோர்களுக்கப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு இனி அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்படாது என்று தற்போதைய அதிபர் ட்ரம்ப் கூறிவருவதும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

# மத அவமதிப்பு வழக்கு விவகாரம் அசியா பீபி நெதர்லாந்து சென்றார்

இஸ்லாமபாத்.நவ.9
பாகிஸ்தானில் மத நம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசியதற்காக சாவுத்தண்டனை அளிக்கப்பட்டுப் பின்னர் அந்தத் தண்டனை நீக்கப்பட்ட அசியா பீபி விடுதலை செய்யப்பட்டிருந்தார். கிறிஸ்தவரான அசியா தனது சக பணியாளர்களுக்குத் தண்ணீர் கொடுக்கும்போது, அவர்கள் கிறிஸ்தவரான அசியாவிடமிருந்து தண்ணீர் வாங்க மறுத்ததுடன், அவரை முஸ்லிம் மதத்துக்கு மாறும்படியும் வற்புறுத்தியுள்ளனர். இதைத் தொடர்ந்து அசியா அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் இதில் அவர் முகமது நபியை அவமானப்படுத்தி விட்டார் என்று அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. இதில் அவருக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அசியா தரப்பு மறுத்து வந்தது. இந்த வழக்குத் தொடர்பாக அசியா தொடுத்த மேற்முறையீட்டில், அவரது சாவுத் தண்டனையை நீக்கம் செய்து பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதைத் தொடர்ந்து 8 ஆண்டுகள் தனிமைச் சிறையில் இருந்த அசியா விடுதலை செய்யப்பட்டிருந்தார்.
இதன் பின்னர் பாகிஸ்தான் ஊடகங்கள் 'முல்தான் சிறை யிலிருந்து புதன்கிழமை இரவு விடுவிக்கப்பட்ட அசியா ராவல் பிண்டி விமான நிலையத்திலிருந்து நெதர்லாந்துக்குச் சென்றிருக்கிறார்' என்று செய்தி வெளியிட்டுள்ளன. அசியா உயிருக்கு ஆபத்து இருப்பதாலே அவர் நெதர்லாந்து சென்றிருக்கிறார் என்றும் உள்ளூர் ஊடகங்கள் கூறுகின்றன.
அசியாவின் விடுதலையை எதிர்த்துப் பாகிஸ்தானின் இஸ்லாமியர்கள் பலர், அவருக்குச் சாவுத் தண்டனை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டதும், இதன் காரணமாகப் பாகிஸ்தானில் பல இடங்களில் வன்முறை வெடித்ததும், தலைமை அமைச்சர் வன்முறையாளர்களை எச்சரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சிம்பாவேயில் பேருந்துகள் மோதியதில் 47பேர் சாவு


ஹராரே.நவ.9
சிம்பாவே நாட்டில் நடந்த வீதி விபத்தில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 47பேர் சாவடைந்ததாகப் பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சிம்பாவேயின் மாணிக்லேண்டு மாகாணத்தில் இந்த விபத்து நடந்துள்ளது. நாட்டின் தலைநகர் ஹராரேவிலிருந்து 156கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ருஸ்பே நகரின் அருகே வீதியில் சென்றுகொண்டிருந்த இரண்டு பேருந்துகள் நேருக்கு நேராக மோதிக்கொண்டன.



இதில் இரண்டு குழந்தைகள் உட்பட 45 பேர் சாவடைந்தனர். விபத்துக்குள்ளான போல்ட் கட்டர் மற்றும் ஸ்மார்ட் எக்ஸ்பிரஸ் ஆகிய இரண்டு பேருந்துகளும் உள்ளூரிலிருந்து நீண்டதூரம் செல்லக்கூடிய உள்ளூர் பேருந்து நிறுவனங்களைச் சேர்ந்தவைகளாகும். இந்த விபத்தில் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

# தீபாவளி பல நாடுகளி... அமெரிக்கா...

வோஷிங்டன், நவ.09
இந்துக்கள் வருடம்தோறும் கொண்டாடி வருகின்ற தீ... பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டிருக்கிறது. இந்து... யாக வாழும் இடங்களில் மட்டுமல்லாது சிறுதொகையினர... நாடுகளிலும் கொண்டாடப்பட்டிருக்கிறது.



ஐ.நா. சபையால் தீபாவளித் தினம் குறித்த சிறப்புத் தபால் தலையும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. ஆனால், தீபாவளிப் பண்டிகையை அமெரிக்க அதிபர் நிராகரித் துள்ளார்.



**பாகிஸ்தானில் தீபாவளி**
இந்துக்கள் அதிகம் வாழ்கின்ற இந்தியாவில் கோலகலமாகத் தீபத் திருநாள் கொண்டாடப்பட்டிருப்பினும் இந்தியாவின் அயல் நாடும், எதிரி நாடுமாகிய பாகிஸ்தானிலும் தீபாவளி கொண்டாடப்பட்டிருக்கிறது. அங்கு வாழ்கின்ற சிறுதொகை இந்துக்களுக்குப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்

# பூட்டானுக்குப் புதிய தலைமை அமைச்சர் லோட்டே ஷெரிங் நேற்றுப் பதவியேற்றார்

திம்பு.நவ.9
பூட்டான் நாட்டின் புதிய தலைமை அமைச்சராக லோட்டே ஷெரிங் பதவியேற்றார். அவருக்கு அந்த நாட்டின் மன்னர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பூட்டானில் கடந்த செப்ரெம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் ஷெரிங் தோபே தலைமையிலான ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சி, டி.என்.டி. மற்றும் டி.பி.டி. ஆகிய கட்சிகள் மோதின. டி.என்.டி. கட்சி 92ஆயிரத்து 722 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. அதற்கு அடுத்தபடியாக டி.பி.டி. கட்சி 2ஆவது இடம் பிடித்துள்ளது. முன்னைய தலைமை அமைச்சரான தோபேவின் ஆளும் பி.டி.பி. (மக்கள் ஜனநாயகக் கட்சி) படுதோல்வி அடைந்து 3ஆவது இடத்தைப் பிடித்தது.
பூட்டான் அரசியல் சட்டப்படி முதல் சுற்றுத் தேர்தலில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் கட்சிகளுக்கு இடையே 2ஆவது சுற்றுப் போட்டி நடைபெறும். அதில் வெற்றி பெறும் கட்சியே ஆட்சி அமைக்கும். அதன்படி ஒக்ரோபர் 18ஆம் திகதி 2ஆவது சுற்றுத் தேர்தல் நடந்தது. இதில் டி.என்.டி. மற்றும் டி.பி.டி. கட்சிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் எல்லாமாக 47 தொகுதிகளில் 30 தொகுதிகளை டி.என்.டி. கட்சி கைப்பற்றியது. இதையடுத்து அந்தக் கட்சியின் தலைமை அமைச்சர் வேட்பாளர் லோட்டே ஷெரிங் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். அவருக்கு பூட்டான் மன்னர் ஜிக்மே கேஷர் நாம்கியேல் வாங்சக் பாரம்பரிய முறைப்படி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

# வெ...

வோசிங்டன்...
அமெரிக்கா...
துள்ளது. தே...
பட்ட பத்திரி...
'சி.என்.என்.'...




# ...ிப் பண்டிகை ...ல் கொண்டாட்டம் ...ாவில் நிராகரிப்பு

...தீபத் திருநாள் உலகின் ...ந்துக்கள் பெரும்பான்மை ...ளராக வாழ்ந்து வருகின்ற




திருக்கிறார். பாகிஸ்தானில் கிட்டத்தட்ட 75இலட்சம் இந்துக்கள் வாழ்வதாகக் கருதப்படுகின்றது. அவர்களுக்கு அந்த நாட்டின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தனது தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.



**லண்டனில் தீபாவளி**

லண்டன் விமான நிலையத்தில் தீபாவளியை ஆடிப்பாடிக் கொண்டாடியிருக்கின்றனர். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு லண்டனில் உள்ள வானூர்தி நிலையம் ஒன்றிலேயே ஆடிப்பாடி. கோலாகலமாக பயணிகள் தீபாவளியைக் கொண்டாடியுள்ளனர். லண்டன் நகரில் உள்ள ஹெத்ரோ விமான நிலையத்தில் பயணிகள் மற்றும் ஊழியர்கள் தீபாவளியை ஆனந்தமாக ஆடிப்பாடிக் கொண்டாடியுள்ளனர். இந்தக் காணொலிக் காட்சி இணையத் தளத்தில் பரவிவருகிறது.



இப்படியாகப் பல தரப்பினராலும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்ற சூழலில் அமெரிக்க அதிபரின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் தீபாவளிக் கொண்டாட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுகளாக வெள்ளைமாளிகையில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வந்தன. இந்த ஆண்டே அது நிராக ரிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு தீபாவளி கொண்டாட்டங்கள் நடத்தப்படாததற்கு, நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தல், பரப்புரை, வாக்கு எண்ணிக்கை போன்றவை காரணமாகக் கூறப் படுகின்றன. இந்தத் தேர்தலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் கட்சி தோல்வியடைந்திருந்ததும் குறிப்பி டத்தக்கது.



# இராணுவத்தினரின் வன்புணர்வுகளுக்கு மன்னிப்புக் கோரியது தென் கொரியா

செயோல்.நவ.9

தென் கொரியாவில் 38வருடங்களுக்கு முன்னர் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தை ஒடுக்குவதற்கு அனுப்பப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் அங்கிருந்த பெண்களை வன்புணர்வுக்குள்ளாக்கியிருந்தனர். இந்தச் சம்பவத்துக்கு அந்த நாட்டின் தற்போதைய அரசு மன்னிப்பு கோரியுள்ளது. 1980ஆம் ஆண்டு அங்குள்ள குவாங்ஜு நகரத்தைச் சேர்ந்த அப்பாவிப் பெண்களின் மீது இராணுவத்தினர் தொடுத்த 'விவரிக்க முடியாத வலி நிறைந்த தாக்குதலுக்கு' மன்னிப்புப் கோருவதாக அந்த நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அண்மையில் நடந்த அது பற்றிய விசாரணையின் மூலம் இளம்பெண்கள் மற்றும் ஒரு கர்ப்பிணி உட்பட 17பெண்கள் மீது நடத்தப்பட்ட பாலியல் ரீதியான தாக்குதல் உறுதிசெய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், வெறும் மன்னிப்பு மட்டும் போதாது என்று பாதிக்கப்பட்டவர்களில் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதைத் தவிர்த்து 'மில்லியன் கணக்கில் மன்னிப்பு' கோரினாலும் அதற்குப் பலனில்லை என்று பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் ஒருவரான கிம் சன்ஓக் கூறுகிறார்.

# ட்ரம்ப்–பத்திரிகையாளர் வாக்குவாதம் ...வெள்ளை மாளிகைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுப்பு

...ன்.நவ.9

...காவில் இடைத் தேர்தல் நடந்து முடிந் ... தேர்தல் முடிவுகளை அடுத்து நடத்தப் ...ரிகையாளர் சந்திப்பின்போது ட்ரம்ப்பும் ...ன்.' செய்திச் சேவையின் செய்தியாளர் ஒருவரும் வாக்குவாதப்பட்டனர். இதனால் அந்தப் பத்திரிகையாளருக்கான அனுமதி அட்டை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகைப் பெண் உதவியாளரிடம் அநாகரிகமாக நடந்துகொண்டதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத் தேர்தல் நடந்து முடிந்தது. இதில் பிரதிநிதிக்களுக்கான இடைத் தேர்தலில் ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சி சரிவைச் சந்தித்தது. இதைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்தார் ட்ரம்ப். அப்போது 'சி.என்.என்.' செய்தியாளர் அகோஸ்டா. இலத்தீன் அமெரிக்காவில் இருந்து தெற்கு அமெரிக்க எல்லைக்கு இடம்பெயரும் அகதிகள் குறித்துக் கேள்வி எழுப்பினார். அதைத் தொடர்ந்து மற்றொரு கேள்வியைக் கேட்ட அகோஸ்டாவிடம். "இத்தோடு போதும்" என்று ட்ரம்ப் இடைமறித்தார். உடனே வெள்ளை மாளிகையில் இருந்த பெண் உதவியாளர் அகோஸ்டாவிடம் இருந்து ஒலிவாங்கியைப் பறிக்க முயன்றார். ஆனால் ஒலிவாங்கியை வழங்காது அவரைத் தடுத்தார் அகோஸ்டா. அப்போது அகோஸ்டாவின் கை, பெண்ணின் முழங்கையில் பட்டது. அப்போது, "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் மம்" என்று தெரிவித்தார் அகோஸ்டா. இதைத் தொடர்ந்து 'என்.பி.சி' செய்தியாளர் பீற்றர் அலெக்ஸாண்டர், அகோஸ்டாவுக்கு ஆதரவாகப் பேச முயன்றார். அவரையும் இடைமறித்த ட்ரம்ப், "நீங்கள் முரட்டுத்தனமான, கொடூரமான நபர்" என்று சாடினார்.



"பத்திரிகைகளே இப்படித்தான். நான் மக்களுக்கு நன்மைகளைச் செய்தால்கூட, அதை நல்ல விதமாகக் காட்ட மாட்டார்கள்" என்றார். இதைத் தொடர்ந்து அகோஸ்டாவின் பத்திரிகையாளர் அனுமதி அட்டை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், "இளம் பெண்களுக்கு இழைக்கப்பட்ட மூர்க்கத்தனமான அவமதிப்பு இது" என்றுள்ளார். இதனிடையே 'சி.என்.என்.' நிர்வாகம், "சம்பந்தப்பட்ட செய்தியாளர் அகோஸ்டாவுக்கு முழு ஆதரவு அளிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளது. ட்ரம்ப்பின் செயலுக்கு பத்திரிகையாளரும் இணையப் பயனாளிகள் பலரும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.




**மேடம்:** எதிர்கால நலனில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றம் பின்பற்றுவீர்கள். இலாபம் உயரும்.

**இடபம்:** திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார அபிவிருத்தியால் புதிய சாதனை உருவாகும்.

**மிதுனம்:** உங்களின் கருத்தை குடும்பத்தினர் ஏற்கத் தயங்குவர். தொழிலில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** பகைமைக் குணம் உள்ளவர் அவமதித்துப் பேசுவர். பெருந்தன்மையுடன் விலகிச் செல்வீர்கள்; தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**சிங்கம்:** இளமைக்கால இனிய நிகழ்வுகளை பேசி மகிழ்வீர்கள். நேர்த்தியுடன் பணிபுரிந்து தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். உபரி பணவரவு சேமிப்பாகும்.

**கன்னி:** அவசரப் பணி உருவாகி சிரமம் தரலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பிள்ளைகளின் வழியில் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** சிந்தனை செயலில் புதிய மாற்றம் உருவாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** சமூக நிகழ்வுகள் இனிதாக அமைந்திடும். மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை உயர்வால் இலாபம் கூடும்.

**தனுசு:** சமூக நிகழ்வுகள் இனிதாக அமைந்திடும். மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை உயர்வால் லாபம் கூடும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி வந்து சேரும்.

**மகரம்:** வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்புக் கிடைக்கும். உறவினர் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள்.

**கும்பம்:** மனதில் சங்கடம் ஏற்பட்டு மறையும். சொந்த பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை ஓரளவுக்கு இருக்கும்.

**மீனம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் அவகாசம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.


# காலா, பாகுபலியை மிஞ்சிய சர்க்கார்



விஜய் நடிப்பில் தற்போது வெளியாகி இருக்கும் படம் 'சர்க்கார்'. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படம் அரசியல் சூழ்நிலையை பற்றியும், கள்ள ஓட்டுப் பற்றியும் இந்தப் படத்தைச் சமூக அக்கறையோடு உருவாக்கி இருக்கிறார் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ்.


இரசிகர்களிடையே மிகவும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்திய இந்தப் படம் தீபாவளி அன்று வெளியானது. இந்தப் படத்தின் முதல் நாள் வசூல் தற்போது வெளியாகி இருக்கிறது. சென்னையில் 2.37 லட்சம் ரூபாக்களை முதல் நாள் வசூலித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த வசூல் ரஜினியின் காலா, பிரம்மாண்ட படமான பாகுபலி ஆகியவற்றை முறிய டித்ததாகக் கூறப்படுகிறது. மேலும் விஜய் நடித்த தெறி, மெர்சல் படங்களின் வசூலையும் மிஞ்சியிருக்கிறது. சர்கார் படத்தில் விஜய்க்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். வரலட்சுமி, பழ கருப்பையா, ராதாரவி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள்.

## வருவாய் மகிந்தா....!



கோடிகள் குவிந்தாலே
கோவணத்தையும் நான் மறப்பேன்!
துரோகிகள் புடை சூழ
அமைச்சராய் நான் வலம் வருவேன்!
அஞ்சுதல் நிலைமாறி கெஞ்சுதல் உருவாக
ஏழ் பிறப்பிலும் இனத்தைக் காட்டிக் கொடுப்பேன்!
மகிந்த எனும் திருமகனே அழகிய பெருமகனே!
காண்பதெல்லாம் உனது முகம்
காலமெல்லாம் எனது மனம் உருகும்
பனி எது! மழை எது! கடல் எது!
அனைத்தும் உன் கருணையால் கிடைப்பது
வருவாய் மகிந்தா! எட்டப்பனாய் நானிருக்கத்
தருவாய் மனம் உவந்து கோடிகள் பல!

Tharu Jan
14 hrs



நாடாளுமன்றம் இன்று இரவு அரசதலைவரால் கலைக்கப்படும் - செய்தி
ஆளு பாக்க தான் மென்மையாய் இருப்பாரு பாக்கிற வேலை முழுக்க சர்வாதிகாரம்

Like Comment Share




இனிமேல் எந்த முகத்தை வச்சுக் கொண்டு மக்களிட்ட போய் வாக்கு கேக்கிறது

Like Comment Share

புத்தூர்-சுன்னாகம் வீதி மிகவும் மோசமானது




இங்கு பெரிய பள்ளத்தாக்குகள் காணப்படுகின்றன



## அழகு என்பது நிறத்தில் இல்லை

"எலுமிச்சை நிறமாகவும், வெள்ளை நிறமாகவும் இருந்தால்தான் அழகு. கறுப்பு என்பது அழகல்ல" என்று கறுப்பு நிறத்தை கேலிக்குள்ளாக்கி, ஏராளமான முகப்பொலிவுக் கிரீம் விளம்பரங்களை அன்றாடம் தொலைக்காட்சிகளில் காட்டுகிறார்கள்.

தோலின் கறுப்பு நிறத்தைக் காரணம் காட்டி கல்லூரிகளில், வேலை செய்யும் இடத்தில், எல்லா இடமும் கறுப்பு நிறம் விமர்சிக்கப்பட்டு கிறது. இப்படிக் கறுப்பு நிறம் மீது தவறான கண்ணோட்டத்தில் இருப்பவரை, அழகு சார்ந்த போலியான விளம்பரங்கள் அவர்களை இன்னும் விமர்சிப்பதற்குத் தூண்டுகிறது. அத்தோடு சினிமாவும் ஒரு காரணமாகி விடுகிறது.

முகப் பொலிவுக் கிறீம் சார்ந்த போலியான விளம்ப ரங்கள் அனைத்தையும் ஒளிபரப்புவதை தடை செய்ய வேண்டும். இந்தப் போலி விளம்பரங்களால் கறுப்பு நிறமான பெண்கள் பல எதிர்மறையான கருத்துக்களை இந்த சமூகத்தில் சந்திக்க நேரிடுகிறது. கறுப்பு நிறத் தோற்றமுடைய பெண்கள் மத்தியில் மன உளைச்சல், கேலிப்பேச்சு, தாழ்வுமனப்பான்மை இல்லாத சமூகம் ஒன்று உருவாகவேண்டுமெனில் கருமையும் அழகானது. நிறத்துக்கு அப்பாற்பட்டது அழகு எனக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

# வழிகாட்டி



பாட்டி ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். அதைப் பேரன் பார்த்துக் கொண்டிருந்தான். "பாட்டி கதை எழுதுகிறீர்களா? அப்படியானால் அது என்னைப் பற்றியதாகத்தான் இருக்கும் இல்லையா?" எனப் பேரன் கேட்டான். பாட்டி எழுதுவதை நிறுத்திவிட்டு தன் பேரனைப் பார்த்து, "ஆமாம் உன்னைப் பற்றித்தான் எழுதுகிறேன். நீயும் பெரியவனான பின்பு நான் கதை எழுதும் இந்தப் பென்சிலைப் போல இருப்பாய் என நம்புகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட பேரன் ஆர்வமும் விருப்பமுமாக பேரன் இதைக் கேட்டு ஆர்வமும் விருப்பமும் கொண்டு அந்தப் பென்சிலைப் பார்த்தான். அது ஒன்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகத் தெரியவில்லை. "இந்தப் பென்சிலில் என்ன சிறப்பு உள்ளது? நான் பார்த்த மற்றப் பென்சில்களைப் போலத்தானே உள்ளது" என்றான் பேரன்.

"பார்க்கும் பார்வையைப் பொறுத்தே பார்க்கும் பொருள்களின் முக்கியத்துவமும் இருக்கிறது. ஒரு பென்சிலுக்குள் ஐந்து பண்புகள் உள்ளன. அவற்றை நீயும் உன்னுள் வளர்த்துக் கொண்டால் இந்த உலகில் நீயும் சிறப்பாக வாழலாம்" என்றார் பாட்டி. தொடர்ந்து "பேரா! நீ பல திறமைகளை உடையவனாக இருப்பினும் உன்னை வழி நடத்திச் செல்வதற்கு பலர் உள்ளனர். அவர்கள் உன் தாய், தந்தை, ஆசிரியர்கள், பெரியோர்கள் மற்றும் நல்ல புத்தகங்கள். நல்ல பென்சிலும் எழுதுபவரின் சிந்தனைக்கு உட்பட்டு அவர் நினைக்கும் வழி செல்கிறது. அதுபோல உன்னை வழி நடத்துபவரின் சொற்களைக் கேட்டு நீயும் நடக்க வேண்டும். இது முதல் பண்பு. நான் பென்சிலின் கூர்மை மழுங்கும் போதெல்லாம் அதைத் தீட்டிக் கூர்மைப்படுத்துவேன்.

அதனால் பென்சில் துன்பத்துக்கு உட்படுகிறது. ஆனால் அந்தத் துன்பத்தைத் தாங்கி கூர்மையாக்கப்பட்டு திறம்படச் செயலாற்ற தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறது. அதுபோல நீயும் சில தோல்விகள் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளக் கற்றுக் கொண்டால் நன்கு பக்குவப்பட்டு சிறந்தவனாய் திகழ்வாய் இது இரண்டாவது பண்பு.

ஏதேனும் தவறுதலாக பென்சிலால் எழுதிவிட்டால் அழிப்பான் கொண்டே அழிக்கின்றோம். அதற்குப் பென்சில் அனுமதிக்கிறது. தவறுகளைத் திருத்திக் கொள்வதுஒரு குறையன்று. நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டத் தவறுகளைத் திருத்திக் கொள்வது தேவையாகின்றது. இது மூன்றாவது பண்பு. மரத்தினால் ஆன பல்வேறு வர்ணங்கள் பூசப்பட்ட பென்சில்களின் வெளித்தோற்றத்தை விட அதன் உள்ளே உள்ள கரிமம், காரியம் (கிராபைட்) முக்கியமானது. அதுபோல நீயும் உன் மனதுள் என்ன நிகழ்கின்றது என்பதை கவனிப்பதில் சிந்தையைச் செலுத்த வேண்டும். இது நான்காவது பண்பு.

பென்சில் தான் எழுதும் தாளில் தன்னுடைய சுவட்டை முத்திரையாகப் பதித்து விட்டுச் செல்கிறது. அதுபோல உன் வாழ்வில் நீ செய்யும் ஒவ்வொரு செயலும் உன் தனித்தன்மையையும் முத்திரையையும் பதித்து மற்றவர்கள் உன் பெயரைப் பெருமையாகச் சொல்லும்படி இருக்க வேண்டும். ஆகவே உன்னுடைய ஒவ்வொரு செயலையும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும். இது ஐந்தாவது பண்பு" என்று விளக்கமளித்தார் பாட்டி"பாட்டி நான் இப்போது பென்சிலின் பண்புகளை மட்டுமல்ல சிறுவனாகிய நான் எப்படி வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன்" என்றான் பேரன்


**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்!**

என் விரல் பிடித்து
'அம்மா' என்று
எழுதக் கற்றுக் கொடுத்த
ஆசிரியர் மகத்தானவர்

பத்துமாதம் என்னைச்
சுமந்து பெற்றெடுத்த என்
தாய்க்கு இணையானவர்.
ஆம், தாய்மொழியை
எனக்குள் விதைத்தவரென்ப
தால் போற்றுதற்குரியவர்.







# வெள்ளை மாளிகை

ஐக்கிய அமெரிக்க அரச தலைவரின் உத்தியோபூர்வ இல்லமே வெள்ளை மாளிகையாகும்

அமெரிக்காவின் முதல் அரச தேலைவரான ஜார்ஜ் வோஷிங்கடன் இதைக் கட்டுவித்தார்.

இந்த வெள்ளை மாளிகையை அமெரிக்க அரச தலைவராக விளங்கும் ஒருவர் தன் வாசஸ்தலமாகக் கொண்டு குடியேற வேண்டும். அரச தலைவர் பதவிக்காலம் முடிந்த பின்பு அவர் அதிலிருந்து வெளியேறி விட வேண்டும்.

வெள்ளை மாளிகையில் வசிக்காத ஒரேயொரு அமெரிக்க அரச தலைவர் வோஷிங்கடன் மட்டுமே. மாளிகையின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைவதற்கு முன்பாகவே அவர் காலமாகிவிட்டார்.

அயர்லாந்து நாட்டில் பிறந்தவரான ஜேம்ஸ் ஹோவின் இந்த மாளியை வடிவமைத்தார்.

1792ஆம் ஆண்டு ஆரம்பமான இதன் கட்டுமானப் பணிகள் 1800 ஆம் ஆண்டிலேயே நிறைவுற்றன.

இந்த மாளிகையைக் கட்ட முழுமையாக பளிங்குக் கற்கள் பயன்படுத்தப்பட்டன.

6மாடிகள் கொண்ட இந்த மாளிகையில் 132 அறைகள், 35 குளியலறைகள், 412 கதவுகள், 147 ஜன்னல்கள் உள்ளன.

அமெரிக்க அரச தலைவரின் அதிகாரம் எல்லையற்றது. ஆனால் எந்த அரச தலைவராலும் இந்த மாளிகையின் நிறத்திலோ, வடிவமைப்பிலோ மாற்றங்களைச் செய்ய முடியாது.

இந்த மாளிகையுள் முதன் முதலாக குடியமர்ந்த அரச தலைவர் ஜோன் அடம்ஸ் ஆவர்.

1814 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி அமெரிக்காவைக் கைப்பற்றிய பிரித்தானியர் இந்த மாளிகைக்குத் தீ வைத்தனர்.

அமெரிக்காவின் 26ஆவது அரச தலைவரான ரூஸ் வெல்ட் இதற்கு வெள்ளை மாளிகையெனப் பெயரிட்டார்

அச்சுறுத்தல் நிலவும் காலம் தவிர ஏனைய அனைத்து நாள்களிலும் இந்த மாளிகையைப் பொதுமக்கள் பார்வையிட முடியும்.

வருடாந்தம் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெள்ளை மாளிகையைப் பார்வையிடுகின்றனர்.



## எமது உடலுக்குச் சேவை செய்யும் அமைச்சர்கள்




| | |
|---|---|
| மூளை | – தலைமை அமைச்சர் |
| தண்டுவடம் | – இணை அமைச்சர் |
| நரம்பு மண்டலம் | – ஊடகத்துறை அமைச்சர்கள் |
| தலை | – கல்வி அமைச்சர் |
| தோல் | – மனித வள மேம்பாட்டு அமைச்சர் |
| எலும்பு | – பாதுகாப்பு அமைச்சர் |
| கண் | – அயலுறவுத்துறை அமைச்சர் |
| காது | – தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் |
| மூக்கு | – சுகாதாரத்துறை அமைச்சர் |
| பல் | – கிராமியத்துறை அமைச்சர் |
| இதயம் | – உள்நாட்டு விவகாரத்துறை மற்றும் கை– தொழிற்றுறை அமைச்சர் |
| வயிறு | – உணவுத்துறை அமைச்சர் |
| கால் | – போக்குவரத்துக் துறை அமைச்சர். |

## சிந்தனை

கவலைப்படுவதால்
எந்தக் கவலையும்
சரியாகப்போவதில்லை.
மாறாக, அது இன்றைய
மகிழ்ச்சியைக்
காணாமல்போகச்
செய்துவிடும். எனவே,
நாளையைப் பற்றிய
கவலையை நாளை
ப்ார்த்துக் கொள்வதென
முடிவெடுங்கள்.



# வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்



# சித்தி தருவது நீறு!



க.அரவிந்த்

விபூதி என்பது மேலான செல்வம் என்ற பொருளுடையது. உலகிலுள்ள அனைத்துச் செல்வங்களும் இறைவனின் அருளாகிய செல்வத்தால் ஆனவை. எனவே அந்த அருட்செல்வமே மேலான செல்வமாகும். அந்த மேலான செல்வத்தைக் குறிப்பது விபூதி. விபூதிக்கு இன்னொரு பெயர் திருநீறு.

நீற்றப்பட்டது நீறு. அது அழிவதில்லை. அது வேறு பொருளாக மாறுவதுமில்லை. தோன்றிய உலகமெல்லாம் அழியும் போது, அழிவில்லாததும், மாற்றமில்லாததுமான நிலையை அது அடையும். இதுவே விபூதியின் தத்துவம்.

### திருநீறு - சிறப்புகள்

தீவினைகளை நீறு படுத்துவதால் 'திருநீறு' எனவும், அழியாத செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி (வி-மேலான, பூதி-செல்வம், மேலான செல்வம் என்பது பொருள்) எனவும், ஆன்மாக்களிடம் உள்ள மலமாசைக் கழுவுவதால் 'சாரம்' என்றும், அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் 'பசிதம்' என்றும் பெயர் வந்தது. திருநீறு அணிபவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுக்கும். ஐந்தெழுத்தை ஓதி உணர்ந்து திருநீறு பூசிக் கொள்ள வேண்டும்.

### திருநீறு குறித்த பாடல்கள்

*கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமல் பூச மகிழ்வாரே யாமாகில்*
*தங்கா வினைகளும் சாரும் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே!*
(திருமந்திரம்)

*முக்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு*
*சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு*
*பத்தி த்ருவது நீறு பரவ இனியது நீறு*
*சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே!*
(திருஞானசம்பந்தர்)

*கருவாய்க் கிடந்து உன் கழலே*
*நினையும் கருத்துடையேன்*
*உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்*
*பயின்றேன் உனதருளால்*
*வருவாய் பொலியச் சிவாய*
*நமவென்று நீறணிந்தேன்*
*தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர் அரனே!*
(திருநாவுக்கரசர்)

*பாடற்கு இனிய வாக்களிக்கும்*
*பாலும் சோறும் பரிந்தளிக்கும்*
*கூடற்கு இனிய அடியவர்தம்*
*கூட்டம் அளிக்கும் குணம் அளிக்கும்*
*ஆடற்கு இனிய நெஞ்சே நீ*
*அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்*
*தேடற்கு இனிய சீர் அளிக்கும்*
*'சிவாயநம' என்று இடுநீறே*
*பிணிகொள் வனபவம் நீக்கும் வெண்ணீறு!*
(திருவருட்பா)

### திருநீறு எங்கெல்லாம் பூசலாம்?

சைவ சமய நெறியைப் பின்பற்றுபவர்கள் திருநீறு பூசிக் கொள்கிறோமே தவிர, எங்கெல்லாம் பூசிக்கொள்ள வேண்டும்? எப்படிப் பூசிக் கொள்ள வேண்டும்? என்று தெரியாமலிருக்கிறோம்.

*கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளும் சாரும் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே!*

என்று திருநீறு பூசுவதன் சிறப்பை எடுத்துச் சொல்கிறார் திருமூல நாயனார்.

திருநீற்றை வெறுமனே சாம்பல் என்று எண்ணாமல், அது ஒரு மாபெரும் கவசம் என்ற நினைவுடன் பயபக்தியோடு பதினெட்டு இடங்களில் அதற்குரிய வரிசையில் திருநீறு அணிதல் சிறப்பு என ஆன்றோர்கள் குறிப்பிடுகின்றனர். அவை வருமாறு,

•சிரசு மத்தி
•நெற்றி
•மார்பு
•தொப்புளுக்கு சற்று மேலே
•இடது புஜம்
•வலது புஜம்
•இடது கை நடுவில்
•வலது கை நடுவில்
•இடது கை மணிக்கட்டு
•வலது கை மணிக்கட்டு
•இடது இடுப்பு
•வலது இடுப்பு
•இடது கால் நடுவில்
•வலது கால் நடுவில்
•முதுகுக்குக் கீழே
•கண்டத்தைச் சுற்றி - கழுத்து முழுவதும் முன்பக்கமும், பின்பக்கமும்
•இடது காதில் ஒரு பொட்டு
•வலது காதில் ஒரு பொட்டு

### ஏழு வகையான தீட்சை


•மீன் தனது முட்டைகளைப் பார்வையால் பொரிக்கச் செய்து, அவற்றின் பசியையும் போக்குவது போல, குருநாதர் சீடனை அருள்ப் பார்வையால் ஞானமீந்து அருளல் 'சட்சு' தீட்சை அல்லது 'நயன' தீட்சை எனப்படுகிறது.

•பறவை தனது முட்டையைச் சிறகால் அணைத்து வெப்பமூட்டி, குஞ்சு வெளிப்பட செய்வது போல, குருவானவர் தனது சீடனைத் தன் திருக்கரத்தால் பரிசிப்பது 'பரிச' தீட்சையாகும்.

•பட்டாடை போட்டு மறைத்துச் சீடனின் வலக்காதில் திருவைந்தெழுத்தை உபதேசிப்பது 'வாசக' தீட்சையாகும்.

•ஆமை கரையிலிருந்தவாறே தனது முட்டையைத் தனது மனத்தில் நினைக்க, ஆமைக்குஞ்சு வெளிப்படுவது போல, குருவானவர் சீடனை அருள் உருவாய் பாவிப்பது 'மானச' தீட்சையாகும்.

•பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளின் உண்மைத் தன்மையையும், இயல்பையும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கி முக்திப் பேறடைய சிவாகமங்கள் வழியில் நின்று தெளியப் போதிப்பது 'சாத்திர'த் தீட்சையாகும்.



•சிவயோகம் பயில உபதேசிப்பது 'யோக' தீட்சையாகும்.

•குண்டமண்டலமிட்டு அக்நிகாரியம் செய்து, பாசத்தைப் போக்குவது 'அவுத்திரி' தீட்சையாகும்.

### விபூதியின் மகத்துவம்

ஸ்ரீ ராமர் அகத்திய முனிவரிடம், "விபூதி அணிவதால் என்ன நன்மை?" என்று கேட்டார்.
அதற்கு அகத்திய முனிவர், "பகை, தீராத வியாதி, மனநலப் பாதிப்பு, தீவினைகளால் பாதிப்பு இப்படி எதுவாக இருந்தாலும் தொடர்ந்து விபூதியை அணிந்து வந்தால் அந்தப் பிரச்சனைகள் விலகும்" என்று ஸ்ரீ ராமருக்கு உபதேசம் செய்தார்.

ஸ்ரீமகாலஷ்மிக்கு உகந்ததும் விபூதி. அதை விரும்பி விபூதி கலந்த நீரில் தினமும் அவள் நீராடுகிறாள். 'திரு' என்றால் மகாலஷ்மி. அதனால்தான் விபூதியைத் திருநீறு என அழைக்கிறோம்.

### விபூதி தோன்றிய கதை


பர்னாதன் என்பவன் உணவையும், தண்ணீரையும் மறந்தவனாக சிவனை நினைத்துக் கடும் தவம் புரிந்தான். ஒரு நாள் அவனுக்குக் கடுமையான பசி ஏற்பட்டது. தவம் கலைந்தது. கண்ணை திறந்தான். அப்போது அவனைச் சுற்றிலுமாக சிங்கங்களும், புலிகளும், பறவைகளும் என பல வன உயிரினங்கள் காவலுக்கு இருந்தன. பசியால் முகம் வாடி இருந்தவனைக் கண்ட பறவைகள் பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து பர்னாதன் முன் வைத்தன.

பர்னாதன் ஆச்சரியமடைந்தான். இது ஈசனின் கருணையே என்று எண்ணி மகிழ்ந்து பசி தீரக் கனிகளைச் உண்டான்.
மீண்டும் தவத்தை தொடர்ந்தான். இப்படியே பல வருடங்கள் கடந்தோடின. தவத்தை முடித்துக் கொண்டு சிவ வழிபாட்டைத் தொடங்கினான். ஒருநாள் தர்பைப்புல்லை அறுக்கும் போது அவன் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டு குருதி பெருக்கெடுத்தது. ஆனாலும் பர்னாதன் எந்த பதற்றமும் இன்றி செயலாற்றிக் கொண்டிருந்தான்.

இருப்பினும், அவன் முன்பு சிவபெருமான் வேடன் உருவில் தோன்றினார். பர்னாதன் கையைப் பிடித்துப் பார்த்தார். காயம் ஏற்பட்ட இடத்தில் விபூதி கொட்ட ஆரம்பித்தது. வந்தது இறைவன் என்பதை பர்னாதன் அறிந்தான்.

"குருதி வெளியேற்றத்தை நிறுத்திச் சாம்பலைக் கொட்ட செய்த தாங்கள் நான் வணங்கும் இறைவன் சிவபெருமான் என்பதை அறிவேன். இந்த அடியேனுக்குத் தங்கள் சுயஉருவத்தை காணும் பாக்கியம் இல்லையா?" என வேண்டி நின்றான் பர்னாதன். அதுவிதமே மெய்யடியார்களின் வேண்டுதலை எப்போதும் ஏற்றிருக்கின்ற ஈசன் தன் சுயரூபத்தில் காட்சி கொடுத்தார்.

"உனக்காகவே இந்தச் சாம்பலை உருவாக்கினேன். அதனால் இந்தச் சாம்பல் இன்று முதல் 'விபூதி' என்று அழைக்கப்படும். நீ மேற்கொண்ட நற் தவத்தால் விபூதி உருவானது. அக்னியை எதுவும் நெருங்க முடியாததைப் போல, விபூதியை அணிந்து கொள்பவர்களின் அருகிலும் துஷ்டசக்திகள் எதுவும் நெருங்காது. விபூதி என் ரூபம். அதற்கு நீயும் துணையாக இருந்து வா!" என்று ஆசி வழங்கினார் சிவபெருமான்.



# மணிவிழா வாழ்த்துக்கள்

## திருமதி கலாநிதி ஜெயராஜபாலா

கலைமாணி யாழ். பல்கலைக்கழகம் பட்டப்பின்
கல்வியியல் டிப்ளோமா
**ஆசிரியர்**
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**
**09.11.2018**



எமது பாடசாலையில் கடமையாற்றி சேவையில் ஓய்வுபெறும்
ஆசிரியரை ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்


**சேவை விவரம்:**

| | | |
|---|---|---|
| களு / அல்ஹு°மைஸரா மத்திய கல்லூரி | - 04.06.1988 | - 31.12.1993 |
| யா / கோப்பாய் நாவலர் வித்தியாலயம் | - 01.01.1994 | - 31.12.1997 |
| யா/ நல்லூர் சி.சி.த.க. பாடசாலை | - 01.01.1998 | - 10.01.1998 |
| யா/ நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி | - 11.01.1998 | - 13.06.2010 |
| யா/ கொழும்புத்துறை துரையப்பா வித். | - 14.06.2010 | - 08.11.2018 |

**ஆசிரியர் சேவையில் - 30 வருடங்கள் - 05 மாதங்கள்**

**வாழ்த்துவோர்:** ஆசிரியர் நலன்புரிக்கழகம்
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்.**

# மணிவிழா நாயகனின் சேவை நலன் பாராட்டு



## திரு. செல்லத்துரை திருச்செல்வநாதன்

**B.A (Hons), M.Phil (Edu)**

சேவை விவரம்

| | | |
|---|---|---|
| 01.03.1990 | - 31.12.1993 | வ/செட்டிக்குளம் மகா வித்தியாலயம் |
| 01.01 .1994 | - 31.12.1995 | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 01.01.1996 | - 25.07.2010 | யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் |
| 26.07.2010 | - 03.07.2012 | யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் |
| 04.07.2012 | - 31.12.2017 | GIZ/ESC செயற்றிட்டம் வடமாகாணம் |
| 01.01.2018 | - 09.11.2018 | யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் |

எமது பாடசாலையில் 8 வருடங்கள் வரலாறு பாட ஆசிரியராகவும். ஆசிரிய சேவையில் 28 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து ஓய்வு நிலை காணும் மணிவிழா நாயகனை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.**

(CS/21067)(4x17)

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

**யாழ்.கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட**

## திருமதி சரோஜினிதேவி சிவஸ்கந்தா

**(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் - ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புத் திணைக்களம்)**



திதி:- பூர்வபக்க துதியை (09.11.2018)

தோற்றம்
14.09.1941



மறைவு
28.10.2011

ஏங்க எமைவிட்டுத் தூங்கிவிட்டீர்
தாங்க முடியவில்லை துயரம்
வாங்க முடியுமா தாயை
பொங்கியழவிட்டு தங்கிவிட்டீர்
விண்ணிலே
தங்க இடமொன்று அமையும்
அங்க வந்து குடியேற
நீங்கா நினைவுகளுடன் நீங்கிவிட்டீர்
எமைவிட்டு
ஓங்கி ஒலிக்கும் குரல் ஓய்ந்துதான்
போனதுவோ?
இங்க நாங்க வந்து இங்கிதமாய்
இருந்தாலும்
உங்க குரல் கேட்காமல் உயர்ந்துதான்
போவோமோ?
சங்கத் தமிழ் சொல்லி சங்கீதப்
பாடல்பாடி
வேங்கையாய் எமை வளர்த்த
பங்குனித்திங்கள் அம்மா

அங்கங்கள் தேய பங்கங்கள் வந்திடாமல்
தங்கமாய் எமை வளர்த்த
தங்கத் தாம்பாளம் அம்மா
தூங்காமல் நீரிருந்து தூங்க எமைவிட்டு
ஏங்காமல் நாங்கள் பாங்காய் இருந்திட

தாங்கிவிட்டீர் உம் தோளினிலே
வங்கக் கடல் கூட ஆர்ப்பரிக்கும் -
எங்கள் அம்மாவின் மறைவினிலே
மங்களமாய் வாழ்ந்து மறைந்து விட்டீர்
அங்காள அம்மனின் திருவடிக்கு

எண்ணிய மனதுடன் நாம் வாழ
திண்ணிய கருமமாற்றி விண்ணிலே
போய்விட்டீர்
பண்புடன் வாழ பல கதைகள் சொல்லி
அன்புடன் எமை தென்புடன்
வளர்த்த அம்மா
வண்ணமயமான வாழ்வு தந்து
கண்ணிலே நீர் கசியச் சென்றுவிட்டீர்.

**குடும்பத்தினர்.**

(CS/21085)(11)

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

(CS 1878 I/15/17)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், கனடா PR, 21.10.1988, சதயநட்சத்திரம், கும்பராசி, கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்), உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணம் உடைய அழகிய படித்த மணமகள் தேவை. (மணமகன் கொழும்பு வந்துள்ளார்)

**077 978 0205 (தந்தை)**


ஜீவிதத்தை பரிதவிக்கவைத்த

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## சிவதாசன் லோகேஸ்வரி

மலர்வில் 07.12.1958 உதிர்வில் 21.10.2017

திதி: பூர்வபட்ச துதியை (09.11.2018)



இல்வாழ்வில் கரம் பிடித்து
துணையான என் அருமருந்தே
குலயம் போற்றிடும்
குதூகல வாழ்விலே
அருமையாய் ஆண் மகவை
- பெற்றெடுத்து
இனிய மனைவியாய்
அன்பு நல்ல தாயாய்
வாழ்ந்து மகிழ்ந்திட்ட என்னவளே
காரணம் இல்லாமல்
காலன் கவர்ந்ததனால்
உனைப்பிரிந்து கலங்கி - நாம்
வாடுகின்றோம்
இறைவன் திருப்பாதம் சென்ற
என்னவளே நாம் தேறிடவே
ஆசி பல தந்து அருள் புரிவாய்
**என்றும் உன்னோடு**
**- வாழ்ந்திடும்**

இல.368, ஒஸ்மானியா கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

சிவதாசன் - கணவர்,
நிலக்ஷன்- மகன்.

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு**

**2017 / 2018 (வெளிவாரி)**

**Bachelor of Business Management (Online) Degree Programme – 2017/2018 (External)**

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2017

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ்மொழி மூலமான மூன்று வருட கால இணைவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை - 2016 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

அல்லது

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

- பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1 ஆம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவ மாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியம்.

**முக்கிய குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப் படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை www.codl,jfn.ac.lk எனும் இணைய முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு"** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 07.12.2018 (விண்ணப்ப முடிவுதிகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாட்டாது)**

மேலதிக விவரங்களும்: 021 222 1106, 021 222 3610, 021 222 3612 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**07.11.2018**

(in.8275)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 05 . 1949



உதிர்வு 09 . 11 . 2017

## சிவஸ்கந்தராஜா சுந்தராம்பிகை


அடிமுடி தேடினாலும்
அகராதியை புரட்டினாலும்
முழுமையாக அர்த்தம் அறிய முடியாத
ஓவியம் முடிந்து போனாலும்
முடிவில்லாது வாழ்வாய் அம்மா

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**குடும்பத்தினர்.**

# பதினோராம் ஆண்டு நீங்காத நினைவுகள்

அன்னை மடியில் 20 . 07 . 1982



ஆண்டவன் பிடியில் 11 . 11 . 2007

## அமரர் பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

திதி:- துதியை (09.11.2018)

அன்பு மகனே ஜெயா!
எம் ஆருயிர் தெய்வமே ஜெயா
பத்து மாதம் சுமந்து பெற்ற தாயை
பதினொரு வருடமாகத் தவிக்க
வைத்தாயே ஜெயா!
தீபாவளி திருநாள் வந்ததுமே
திகைக்க வைக்கிறாயே ஜெயா!
அண்ணன் என்ற சொல்லுக்கு
அகிலத்தையும் பெற்றவனே ஜெயா!
அத்தான் என்ற சொல்லுக்கு
ஆருயிராய் நின்றவனே ஜெயா!
தம்பி என்ற சொல்லுக்கு தங்கமாய்
திகழ்ந்தவனே ஜெயா!
பார்தனில் நீ பாசத்துக்கு அடித்தளமாய்
இருந்தவனே ஜெயா!

நொடிப்பொழுதில் உன்னைக் காலனவன்
கணக்கிட்டுக் கூட்டிச் சென்றனே ஜெயா
நீ எம்முடன் இருந்து செய்ய நினைத்தவை
யாவையும்
சொர்க்கத்தில் இருந்து செய்கிறாயே ஜெயா!
கந்தஷஷ்டி திருநாள் வந்ததுமே –உன்னை
மறந்தவர்கள் யாவரையும்
நினைக்க வைக்கிறாயே ஜெயா!
ஆண்டுகள் பதினொன்று ஆனாலும்
ஆறாதையா எம் துயரம்–
காலனவன் உன்னைப் பறித்தாலும்
காவியமாய் என்றும் எம் மனதில்
இருப்பாய் ஜெயா!!
**என்றும் உன் ஆத்மா சாந்தியடையப்**
**பிரார்த்திக்கின்றோம்**
**உன் நினைவால் துயருறும்**

தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

(AVA/412)(01)

**குடும்பத்தினர்.**

## University of Jaffna, Sri Lanka
## Faculty Of Medicine
### Academic Programme

The Academic Programme for the New Batch (2017 A/L) Of Medical Students will commence on Monday, 3rd of December 20108. An Inauguration Programme will be held on 4 th of December 2018 at 8.30 am in the Hoover Auditorium, Faculty of Medicine.
It is appreciated that the Parents of each student attend this Inauguration Programme.

**Registrar,**
**University of Jaffna.**

(IN/8276)(11)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 07 - 1941

மறைவு 01 - 11 - 2016



### கந்தையா இராசேந்திரம்
(முன்னாள் பிஸ்கால் உத்தியோகத்தர்)


திதி : துதியை (09.11.2018)

கண்கள் பல உமைத்தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ!
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும் மறைந்ததேனோ!
கண்களெல்லாம் கடலாய் பொங்க
கலங்கி விட்டு எங்கு சென்றீர் அமைதியாய் மரணத் திரையில்
மௌனமாய் மறைந்ததேனோ?


கலைமாமணி வீதி, கட்டப்பிராய். குடும்பத்தினர்.

---

MAJESTIC CINEPLEX




| Jaffna Platinum | Jaffna Silver |
| --- | --- |
| 10.00AM \| 1.00PM<br>4.15PM \| 7.30PM<br>10.30PM (Fri/Sat) | 10.45AM \| 1.45PM<br>4.45PM \| 7.45PM<br>10.30PM (Fri/Sat) |




Tamil Version — Jaffna Bronze: 10.30AM | 1.30PM 4.30PM 7.30PM | 10.30PM (Fri/Sat)

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் 011 5 999 999


CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

---

## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 10 . 1978

உதிர்வு 07 . 11 . 2018



### செல்லத்துரை மயூரதன்
*(உரிமையாளர்_ சிவசக்தி அரைக்கும் ஆலை, பல்பொருள் வாணிபம்)*

சிவன்கோவில் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மயூரதன் (உரிமையாளர் - சிவசக்தி அரைக்கும் ஆலை, பல்பொருள் வாணிபம்) கடந்த (07.11.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் கந்தசாமி - பாலசரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரசாந்தியின் அன்புக் கணவரும் மதுசனின் (மாணவன் - தரம் 4C, யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) அன்புத் தந்தையும் யசோதரன், சுகந்தி, சுதாகரன், சுதர்சினி, சுரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரூபிகா, சிவசொரூபன், ரூபி, சத்தியவண்ணன், சிந்துஜா ஆகியோரின் மைத்துனரும் ஆர்த்திகா, ஹரிஸ், விபூசா, நீருயா ஆகியோரின் மாமனாரும் பிருந்தன், பிருந்தா, கிருஷன், அருநிசா, கபின், கீர்த்தீஸ் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.106, டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 175 1360**

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லையா ஜெயசேகரம்
(ஓய்வுநிலை அஞ்சலதிபர்)

தோற்றம் 10.03.1948

மறைவு 13.11.2015

திதி: வளர்பிறை துதியை (09.11.2018)



மூன்றாண்டுகள் கடந்தும் பிரிவுத்துயருடனும்
அழியா நினைவுகளுடனும் தங்கள்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பெரியநாவலடி,
கொடிகாமம். (in.5427) (13.17) **மனைவி, மகன்.**

---

## விண்ணக வாழ்வின் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 . 08 . 1946

விண்ணில் 09 . 11 . 2014



### அமரர்
### யோசவ் பிரான்சீஸ் சேவியர்

*" உயிர்ப்பும் உயிரும் நானே ;*
*என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் "*

நினைவிலும் கனவிலுமாய்
உள்ளத்தில் உறைந்துள்ள அப்பாவே !

நான்கு ஆண்டுகள் நொடிப்பொழுதாய் மறைந்தாலும்
நீங்கள் எம்மோடு வாழ்ந்த காலங்களின்
இனிமை இன்று போல் தெரிகிறதே !
கண்ணீர் சொரிந்து அழுது நிற்கிறோம்
இறை சந்நிதியில் இன்புற்று வாழ
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

27/18, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

(CS 21065) (14.17)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கார்த்திகேசு நவரட்ணம்

மலர்வு 17.04.1944

உதிர்வு 21.10.2017

திதி:
09ஆம் திகதி கார்த்திகை மாதம் 2018 ஆம் ஆண்டு

யாழ். வல்வெட்டி இராஜசிங்கம் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் கார்த்திகேசு நவரட்ணம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று ஆகும்.

ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறிடுமோ உங்கள் நினைவலைகள்
அப்பா! கண்ணின் மணிபோல் எம்மைக் காத்த அன்புத் தெய்வமே!
ஆறிடுமோ எங்கள் துயரம்
நீங்கள் பிரிந்து ஒரு வருடம் ஓடிப்போனது
இன்னமும் நம்பவே முடியாமல், நாங்கள் இங்கே தவிக்கின்றோம்
ஆண்டுகள் பலசென்றாலும் நீங்காது
உங்கள் நினைவுகளும்! நிகழ்வுகளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைவனடிசேர
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தினமும்
உங்கள் பாதம் பணிகின்றோம்

இராசசிங்கம் வீதி,
வல்வெட்டி.

உங்கள் பிரிவால் வாடும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

தகவல்: குடும்பத்தினர்.

(CS.17314) (13.17)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 428
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.11.08
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 67,413,980/-
வெற்றி இலக்கங்கள்
17 34 38 43 U

## நீதிமன்றுக்கு...

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர.

கொழும்பில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியால் வாகனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே மங்கள இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பெரும்பான்மையை நிரூபித்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கைப்பற்றுவோம். சபாநாயகரின் அதிகாரத்தின் கீழ் எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டப்படவுள்ள நாடாளுமன்றத்தில் யார் எந்தக் குழறுபடியைச் செய்ய நினைத்தாலும் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அரசமைப்பை மீறித் தலைமை அமைச்சர் ஒருவரை அரச தலைவர் நியமித்துள்ளார். நாடாளுமன்றைக் கலைக்க அவர் நீதிமன்றை நாடுவது மீண்டும் ஒருமுறை அரசமைப்புக்கு எதிராகச் செயற்பட அவர் எத்தனிப்பதைக் காட்டுகின்றது.

மக்கள் ஆணையை அரச தலைவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவரை அரச தலைவராக நியமித்த கடமையைவிட்டு அவர் வேறு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். நாம் மக்களுடன் கரம் கோர்த்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கைப்பற்றுவோம்.

சட்டத்துக்கு முரணாகப் பறிக்கப்பட்ட தலைமை அமைச்சர் பதவியை மீண்டும் அரசமைப்புக்குட்பட்டுப் பெற்றுக்கொள்வோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் அந்தக் கதிரையில் அமர வைத்தே எமது போராட்டத்தை நிறைவு செய்வோம். என்றார்.

(ந)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் புவேந்திரா இராஜக்கோன்

(அரசாங்க மருந்தாளர்)

மலர்வு 01.09.1941 உதிர்வு 09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே !
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்.

தபாற்கந்தோர் முன்பாக,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(J 5882)
(14,17,18)


குடும்பத்தினர்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1516
சீட்டிழுப்பு திகதி 08.11.2018
வெற்றி இலக்கங்கள்
05 32 43 51 U
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 21, 103, 128/=

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 193
சீட்டிழுப்பு திகதி 08.11.2018 நீலம்
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 24 27 40
விதி எண் 06
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.15, 433, 712 /=
2018.11.10 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா ஜெயசிங்கம்



இராமநாதபுரம், வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஜெயசிங்கம் நேற்று (08.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - லீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும் லோகாம்பாளின் கணவரும் ஜெயரஞ்சினி (ரஞ்சினி), ஜெயகலா (கலா), ஜெயமதி (ஜெயா), ஜெயநிதி (கோமதி), ஜெயதீஷ் (தீசன்), ஜெயதீபா (தீபா - ஆசிரியர், யா/ புனித திருக்குடும்ப கன்னியர்மடம்), ஜெயதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வெள்ளச்சாமி, அருணகிரிநாதர் (கிரி), சந்திரகுமார் (கட்டார்), ரமேஷ், சுகன்யா (பிரான்ஸ்), சஞ்ஜீவன், நிமல்ராஜ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 368 9517

262/4, இராசவீதி, கல்வியங்காடு.

# 30ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



## செல்வி றஜிவிதா ஸ்ரீரங்கநாதன்

(திசானி)

மலர்வு 09.11.1988 உதிர்வு 23.01.2009

நீ நாட்டி வைத்த பூமரங்கள்
மலர் பதாதை விரித்து
நீ சென்ற பாதை பார்த்துக்
காத்திருக்கின்றன
கல்யாணக் கனவுகளுடன்


உன் நினைவுடன் வாழும்
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை

தற்காலிக முகவரி:-
இல.96, குடிமத்தி, உருத்திரபுரம், கிளிநொச்சி.

நிரந்தர முகவரி:-
இல.60, சந்தனமாதா கோயில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல் :- செ.ஸ்ரீரங்கநாதன்

தோற்றம் 02 . 02 . 1958



மறைவு 08 . 11 . 2018

## கந்தசாமி குகன்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் ESSEN, ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குகன் நேற்று (08.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) திலகவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை தனலட்சுமி தம்பதிகளின் மருமகனும்அகல்யாவின்அன்புக்கணவரும்வினோத், அஜித்தா, சவிதாஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஷின் மாமனாரும் மாலதி (ஓய்வுபெற்ற உபதபாலதிபர் ஏழாலை), சபேசன், உஷாநிதி, காலஞ்சென்ற உதயபானு ஆகியோரின் மூத்த சகோதரனும் கிருஸ்ணதாசன், நந்தினி, மகாதேவன், சுதர்சினி, வசிகரன், திருமதி குணதேவி முருகையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
021 205 9406, 077 466 1237

தகவல்:
தந்தை கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர்)
மைத்துனன் கிருஸ்ணதாசன் (வாணி ரெக்ஸ்)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணசாமி தெய்வேந்திரன் (பத்தர்)



பிறப்பு 11.01.1961 இறப்பு 08.11.2018

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி தெய்வேந்திரன் நேற்று (08.11.2018) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் தமிழ்ச்செல்வி, மகேந்திரன், விஜயன், கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற சரோஜினிதேவி, வசந்தாதேவி, விமலாதேவி, பாலச்சந்திரன், சியாமளாதேவி, சிவபாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இராமகிருஷ்ணா ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமகிருஷ்ணா ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
075 530 2676/ 077 648 1921

## ஈ.பி.டி.பி...

அங்கம் வகிக்க முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் வே.குகேந்திரன் (ஜெகன்) இரட்டைக் குடியுரிமை கொண்டவர். அந்த அடிப்படையில் அவர் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க முடியாது. அதனால் குகேந்திரனின் மாநகர சபை உறுப்புரிமை செல்லுபடியற்றது என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் ஒருவரால் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் விசாரணைக் எடுக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், நிரான் அங்கிற்றல் ஆகியோர் முன்னிலையாகினர்.

இருதரப்பு வாதமும் நிறைவு செய்யப்பட்ட நிலையில் எழுத்துமூலமான சமர்ப்பணத்துக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஒக்ரோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூல சமர்ப்பணத்தை முன்வைக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் தமது எழுத்துமூல சமர்ப்பணத்தைச் சமர்ப்பித்த நிலையில் எதிர் மனுதாரர் எழுத்துமூல சமர்ப்பணத்தை முன்வைக்கவில்லை.

வழக்கை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று வழக்கின் தீர்ப்பை அறிவித்தது. குறித்த மாநாகர சபை உறுப்பினர் பிறநாடு ஒன்றுக்கு விசுவாசமாக இருப்பது எண்பிக்கப்பட்ட நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட விதிக் கோவை 9இன் பிரகாரம் வேலும் மயிலும் குகேந்திரன் மாநகர சபை உறுப்பினராக இருப்பதற்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தடையை உறுதி செய்து அந்த நபர் உறுப்பினராகத் தொடர முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்று தீர்ப்பளித்தது. (ற-105)

**வீடு / அறைகள் நாளாந்த வாடகைக்கு**

நல்லூருக்கு அண்மையில் வீடு/அறைகள் நாளாந்த வாடகைக்கு மட்டும் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும். மேலும் போக்குவரத்திற்குரிய வசதிகளும் செய்து கொடுக்கப்படும். - 077 165 9984 / 077 769 9212

**நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற நோய்களுக்கு**

**நிரந்தர தீர்வு**

பிரபல ஹோமியோபதி நிபுணரின் சேவை மக்களுக்காக

யாழ்ப்பாணத்தில் 10.11.2018 (நாளை)

பரந்தனில் 17.11.2018

தொடர்பு - 077 444 1082

## பணியாளர் வேண்டுகை

**திருக்கேதீச்சரம் சிவன் அருள் இல்லம்**

**பதிவு இல :- NP/24/1/CH/02**

மாதோட்ட நன்னகர் திருக்கேதீச்சர சிவாலயச் சூழலில் அமைந்து விளங்கும் சிவன் அருள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு சிறுவர் நேயம்மிக்க பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

**தகுதி**

சைவசமய வாழ்வியல் பழக்கமும் மதுபோதைப் பாவனையற்ற தேகாரோக்கியமும். நல்லொழுக்கமும். நற்பண்பும். நன்னடத்தையுடன் சிறுவர் நிலையத்தில் தங்கியிருந்து சமய விழுமியங்களுடன் சுகாதார ஆரோக்கியப் பழக்கங்களை அன்பாகவும் ஆதரவுடனும் பயிற்றுவித்து வழிநடத்தக் கூடியவராக இருத்தல்.

**கல்வித் தகுதி**

- G.C.E (O/L), (A/L), கணினி தகைமைச் சான்றிதழ்.
- சிறுவர் சம்பந்தமான சான்றிதழ் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்திருத்தல்

**மேலதிக தகுதி**

- கணினி மற்றும் பாடசாலை பாடங்களைக் கற்பித்தல் அனுபவம். சாரதி அனுமதிப்பத்திரம்.

**சலுகைகள்**

- தங்குமிடமும். ஆரோக்கியமான மரக்கறி உணவும் வழங்கப்படும்.
- மாதாந்தம் நான்கு நாள்கள் மட்டுமே விடுமுறை வழங்கப்படும். (வருடம் 48 நாள்கள்)
- நிலையான கொடுப்பனவுடன் மேலதிக சேவைக்கான படிகள். ஊக்குவிப்புப் படிகள் வழங்கப்படும்.

**வயதெல்லை**

25 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்கள்.

**பணி வெற்றிடங்கள்**

- நிலையப் பொறுப்பாளர் (ஆண்/ பெண்) (ஓய்வுபெற்ற விடைய அறிவுடைய உத்தியோகத்தர் விண்ணப்பிக்கலாம். க.பொ.த. உ/த)
- நிர்வாக உத்தியோகத்தர் (பெண்)
- சிறுவர் பராமரிப்பாளர்கள் (ஆண்/ பெண்) (விடய அறிவு. க.பொ.த.சா/த)
- காவலாளி (பெண்)

**குறிப்பு**

பணிநிலை மற்றும் கல்வி தொழில்தகுதியுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்பியவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேர்முகத் திகதியை உறுதிப்படுத்தவும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 20.11.2018**

**விண்ணப்ப முகவரி :- பணிப்பாளர், சிவன் அருள் இல்லம், திருக்கேதீச்சரம், மன்னார்.**

**தொடர்பு இலக்கம் :- 077 570 3955, 071 254 6815**

(IN/8271)(11)

**இல்ல முகாமையாளர்**

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சுவாம்பிள்ளை பிரான்சிஸ்**

(இராசநாயகம்)



தோற்றம் 29.07.1927

மறைவு 09.11.1993

இருபத்தி ஐந்து ஆண்டுகள் கடந்தாலும்
என்றும் எம் இதயத்தில் வாழும்
அப்பாவுக்கு எமது அஞ்சலிகள்

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு, கல்வியங்காடு.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.11.1978

மறைவு 21.10.2017

**பத்மநாதன் நாதபரன்**

உன் நினைவுகளையே எப்போதும் சுமந்திருக்கிறோம்.
எங்கேனும் சென்றுவிடவில்லை நீ.
எங்களுடனேயே இருக்கிறாய். என்றும் இருப்பாய் செல்வமே!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு வழங்குவதற்கான

### மீள் கேள்வி அறிவித்தல் - 2019

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 16.11.2018 வெள்ளிக்கிழமை பி.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 16.11.2018 வெள்ளிக்கிழமை நண்பகல் 01.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 16.11.2018 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணி

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 40,590.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல - 07 | 1,000.00 | 21,915.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 7,985.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,250.00 | 527,040.00 | 10,000.00 | 1,000.00 |
| 05 | இறால்மடம் சந்தை | | 1,000.00 | 250.00 | 250.00 |
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை கோழிக்கடை | 1,050.00 | 44,100.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தை கருவாட்டுக்கடை | பிரதேச சபையால் தீர்மானிக்கும் தொகை | 7,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கீரிமலை மரக்கறிச்சந்தை | | 19,800.00 | 1,000.00 | 1,000.00 |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 18,000.00 | 1,000.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக விபரங்களை 19.10.2018 ம் திகதி (வெள்ளிக்கிழமை) பிரசுரமான வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடவும்.

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.
தலைவர்
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை

09.11.2018

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

### ஆதனப் பெயர்மாற்றம்

41/10. பிரதான துணைவி வீதி. வட்டாரம் - 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 04 பிரதான துணைவி வீதியிலுள்ள இல : 41/10 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **பொன்னம்பலம் பரமநாதன்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சுப்பையா கதிர்காமத்தம்பி பெண் பாக்கியரத்தினம்** அவரது பேர்த்தியாரான காலஞ்சென்ற வள்ளியம்மையிடமிருந்து முதுசமாக வந்தது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.கோபாலசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 317/17.05.1982 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பையா கதிர்காமத்தம்பியும் பெண் பாக்கியரத்தினமும்** ஆகியவர்களிட மிருந்து **மருதப்பு செல்வராஜா** ஆகியவர் குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சுப்பையா காசிப்பிள்ளை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச. செல்வராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3727/30.10.1984 ஆம் இலக்க உறுதியால் குறித்த **மருதப்பு செல்வராஜா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சுப்பையா கதிர்காமத்தம்பி பெண் பாக்கியரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 992/09.06.1985 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுப்பையா காசிப்பிள்ளை** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**மாணிக்கவாசகர் விக்கேஸ்வமூர்த்தி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.தெய்வேந்திரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 832/01.05.1986 ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பையா கதிர்காமத்தம்பி பெண் பாக்கியரத்தினம் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சற்குணநாதன் கைம்பெண் பரமேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1427/08.07.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த **மாணிக்கவாசகர் விக்னேஸ்வரமூர்த்தியும் பெண் சீதாலட்சுமியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவர்.


**சற்குணநாதன் கைம்பெண் பரமேஸ்வரி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராத்த விடத்து குறித்த ஆதனமானது **சற்குணநாதன் கைம்பெண் பரமேஸ்வரி** ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(CS 21082) (14.17)

# வயிற்றுக் கொழுப்பைக் குறைக்க விதவிதமான உடற்பயிற்சி



வயிற்றுப் பகுதியில் கொழுப்பைக்குறைக்க வேண்டுமானால், குறிப்பிட்ட உணவு வகைகள் மற்றும் உடற்பயிற்சி உத்திகளைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் சீரான முறையில் உடற்பயிற்சி செய்பவராக இருந்தால், உணவுகளில் செய்யப்பட்டுள்ளஇந்த மாற்றங்களுடன் உடற்பயிற்சியையும்தொடரலாம். நீங்கள் உடற்பயிற்சி செய்யாதவராக இருந்தால், 20நிமிடங்களுக்கு நடைப்பயிற்சி போன்றமிதமானஉடற்பயிற்சிகளில் ஈடுபடலாம்.

வயிற்றைச் சுற்றியுள்ள கொழுப்பை நீக்க 'க்ரஞ்சஸ்' வகையானஉடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். உங்கள் தலைக்குப் பின்னால் கைகளை கட்டிக்கொண்டு, முட்டியை மடக்கி வைத்து, கால்களை தரையில் திடமாக ஊன்றவும். வயிற்று தசைகளை இறுக்கி, உங்கள் தோள்பட்டையை தரையில் இருந்து தூக்கவும். இதை 20 முறையாவது செய்யுங்கள்.

அதிகஅளவிலானதண்ணீரைக் குடித்துஉட்கார்ந்துஎழுந்திருக்கும் உடற்பயிற்சியையும் செய்திடுங்கள். பின்புறமாகப் படுத்து, முட்டியை மடக்கி, பாதத்தை தரையில் வைத்திடவும். கைகளைபடர்ந்துவிரித்து, விரல்களை மேற்புறம் பார்த்தவாறுவைக்கவும். மூச்சைவெளியற்றிமெதுவாகஉட்காரமுயற்சிக்கவும். மூச்சை உள்வாங்கி மீண்டும் மெதுவாக விடுங்கள். நடைப்பயிற்சி முதல் உட்கார்ந்து எழுந்திருப்பது வரை அனைத்து உடற்பயிற்சிகளையும் செய்திடுங்கள்.

★ கொழுப்பை வேகமாகக் குறைக்க வேண்டுமானால், 'க்ரஞ்சஸ்' மற்றும் உட்கார்ந்து எழுந்திருக்கும் உடற்பயிற்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும்.

மேலும் சீராகச் செய்து வரும் உடற்பயிற்சிகளுடன் நீச்சல் பயிற்சியையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

நடை பயிற்சியை 40 நிமிடங்களுக்கு அதிகரித்திடுங்கள். அனைத்து க்ரஞ்சஸ் மற்றும் உட்கார்ந்து எழுந்திருக்கும் உடற்பயிற்சிகளை தேர்ந்தெடுக்கலாம் அல்லது நீச்சல் மற்றும் ஏரோபிக்ஸ் பயிற்சியை தேர்ந்தெடுக்கலாம். விதவிதமானஉடற்பயிற்சியில்ஈடுபட முயற்சி செய்யுங்கள்.

# வங்கிக்கு சென்றவர் மயங்கி வீழ்ந்து சாவு

யாழ்ப்பாணம், நவ.9

வங்கிக்குப் பணம் எடுக்கச் சென்றவர்மயக்கமடைந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று திருநெல்வேலியில் நடந்துள்ளது.

கோப்பாய், கட்டப்பிராயைச் சேர்ந்த ஆறுமுகம் கார்த்திகேசு (வயது 65) என்பவரே உயிரழந்துள்ளார்.

இவர திருநெல்வேலியில் உள்ள வங்கி ஒன்றுக்குப் பணம் எடுக்கச் சென்றுள்ளார். அங்கு அவர் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என்று தெரிவித்தனர். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ந-8)




கைபேசிகளை நிறுத்தி வைப்பதற்கான இருக்கைகள் அறிமுகமாகியுள்ளன. இவை 280 ரூபாவுக்கு விற் பனை செய்யப்படுகின்றன.

## கலவரத்தை...

நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமத்திபால குற்றஞ்சாட்டி யுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திர ஊடக மைய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தெரிவித்ததாவது

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூடினால் நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் அரச தலைவரின் உரை மாத்திரமே இடம்பெறும். அதை மீறி எதுவும் இடம்பெற முடியாது. அவ்வாறு எதனையாவது செய்ய முயற்சித்தால் வீண் பிரச்சினையே ஏற்படும்.

அதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது. கட்சி ஆதரவாளர்களும் பிரச்சினைப்படும் பட்சத்தில் கிராமங்களிலும் பெரிய சண்டை சச்ரவிலேயே இது முடிவடையும். அதனால் சபாநாயகர் இந்த நிலை ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ந-5)

### மரண அறிவித்தல்

### வைரவப்பிள்ளை சிவராசா



கொல்லங்கலட்டி, வித்தகபுரத்தைப் பிறப்பிடமாகவும் கைதடி, நாவற்குழியை வசிப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை சிவராசா நேற்று (08.11.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிறிலவன், சிவரூபன் மற்றும் திருமகள் (கொடிகாமம்), கலைமகள் (பிரான்ஸ்), பிரகலாதன் (அமெரிக்கா), காலஞ்சென்ற சிவதாசன் மற்றும் சிவநேசன் (முகாமையாளர் - சிலிங்கோ ஆயுட்காப்புறுதி நிறுவனம், சாவகச்சேரி) ஆகியோரின் தந்தையாரும் கஜேந்திரன் (தபால் உத்தியோகத்தர் - கொடிகாமம், மிருசுவில்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), கயல்விழி (சங்கத்தானை), திலக்சினி (அமெரிக்கா), தமிழ்ச்செல்வி (ஆசிரியை - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின்மாமனாரும்கஸ்தூரி, காறாளன், கீர்த்திகன், கிருட்சிகா, விருட்சிகா, சியானா, மதுமிதா, ஆதவி, கீர்த்திகா, விஸ்னுகா, சிவபிருந்தன், பிரணவி ஆகியோரின்பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் பாலவித்தாழ்வு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## 1,199 ஏக்கர்...

தமது முக்கிய கட்டடங்கள் உள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் செயலணியின் கூட்டம் அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அதில் குடாநாட்டில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாகப் பேசப்பட்டபோதே இராணுவத்தினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் 4 ஆயிரத்து 565 ஏக்கர் காணிகள் படைத் தரப்பால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 3 ஆயிரத்து 200 ஏக்கர் காணிகள் இராணுவத்தின் பிடியிலுள்ளன. அவை தொடர்பில் ஆராயப்பட்டன. விடுவிக்கப்படும் பிரதேசத்தின் இடமாற்றங்களுக்காக இராணுவத்துக்கு 210 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்று இராணுவத்தினர் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர். அதற்கான நிதி ஒதுக்கித் தரப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டு ள்ளார்.

திக்கம் வடிசாலை தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. திக்கம் வடிசாலையை மீள ஆரம்பிக்கும் வகையிலான படிகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அமைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா தெரிவித்துள்ளார்.

அதன்போது கருத்துரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சும நந்திரன், கடந்த காலத்தில் அந்த வடிசாலையில் இருந்து அரசியல் செயற்பாட்டுக்காகப் பணம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்ட ப்பட்டுள்ள நிலையில் அந்த அரசியல்வாதியிடமே மீண்டும் அதே அமைச்சு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இது பொய். சிலவேளை அந்த அரசியல்வாதி மகேஸ்வரனாக இருக்கலாம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். கோப் அறிக்கையில் அந்த அமைச்சரின் பெயர் குறிப்பிட்டே எழுதப்பட்டுள்ளது என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

யாழ்ப்பாணம் சீமெந்துத் தொழிற்சாலையை கைத்தொழில் பேட்டையாக அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. காங்கேசன்துறை சீமெந்து ஆலையை அதே இடத்தில் இயக்க வேண்டும் என்பதே அந்தப் பகுதி மக்களின் விருப்பமாக உள்ளது. அரசியல்வாதிகளே அதை எதிர்க்கின்றனர் என்று இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரன் அந்தப் பகுதியின் நிலைமை, அங்குள்ள மக்களின் கருத்து என்பவற்றை அறிந்தே நாங்கள் கருத்து வெளியிடுகின்றோம். அங்கே சீமெந்து ஆலை அமைக்க உடன்பட முடியாது.

அங்கே முருகைக்கற்களை அகழ்ந்து சீமெந்து தொழிற்சாலையை இயக்குவது முழு குடாநாட்டின் நீர்வளத்தையும் அழித்து, மனிதர்கள் வாழ முடியாத பிரதேசமாக்க மாற்றும் என்றார்.

ஆனால் சிமெந்துக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் அங்கு சீமெந்து ஆலையை ஆரம்பிக்க வேண்டும் என்று விடாப்பி டியாக நின்றார். அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினருக்கும், பணிப்பாளருக்கும் இடையே பெரும் தர்க்கம் ஏற்பட்டது.

அங்கு போய் பார்த்தீர்களா? அங்கு என்ன இருக்கின்றது? எப்படி ஆலையை உருவாக்கப் போகிறீர்கள்? என்று வடக்கு ஆளுநரும் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார். ஆனாலும் பணிப்பாளர் தனது முடிவில் பிடிவாதமாக நின்று தர்க்கித்தார்.

ஒருகட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அரச தலைவரைப் பார்த்து, இவர் இப்படியே விதண்டவாதம் செய்து கொண்டிருந்தால், நாங்கள் இருக்க தேவையில்லை. ஒன்றில் அவர் இருக்க வேண்டும். அல்லது நாங்கள் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். அரச தலைவர் தலையிட்டு கூட்டுத்தாபனப் பணிப்பாளரின் வாதத்தை நிறுத்தினார். வடக்கு மற்றும் கிழக்கு ஆளுநர்களும் குறுக்கிட்டு அங்கு சிமெந்து ஆலையை உருவாக்க முடியாது என்று தெரிவித்தனர். இறுதியில் அங்குகைத்தொழில்பேட்டைஅமைப்பது என்றுதீர்மானிக்கப்பட்டது. (ந-105)

## 12 வயதுச்...

பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சென்ற சிறுமி மாலையாகியும் திரும்பவில்லை. அதையடுத்துப் பெற்றோர் சிறுமியைத் தேடியுள்ளனர். ஊரவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சிறுமியின் வீட்டுக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் இருந்து சிறுமி கையில் வெட்டுக்காயத்துடன் மீட்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை சிறுமியின் உறவினர்களால் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் சிறுமியை அழைத்துச் சென்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சிறுமி மீட்கப்பட்டார் என்று கூறப்படும் வீட்டில் இருந்த இளைஞரைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

தனக்குப் பாலியல் ரீதியான தொல்லை கொடுக்கப்பட்டது என்றும், கையை வெட்டிக்கொள்ளுமாறு அழுத்தம் பிரயோகிக்க ப்பட்டது என்றும் பாதிக்கப்பட்ட சிறுமி வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று தெரிவித்த பொலிஸார் முழுமையான விசாரணைகளின் பின்னரே உறுதியான தகவல்களைக் கூற முடியும் என்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் மருத்துவ பரிசோதனை அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ந-26.35)

# மறைவிலிருந்து வந்த சந்திரிக்கா

கொழும்பு, நவ.9

**இலங்கையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்ட பின்னர் முதல் தடவையாக முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்க பொது நிகழ்வொன்றில் நேற்றுக் கலந்து கொண்டார்.**

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று வணக்கத்துக்குரிய மாதுளுவாவே சேபித தேரிரின் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன. அதிலேயே முன்னாள் அரச தலைவர் கலந்து கொண்டார்.

கூட்டரசு உருவாக்கத்திலும், பொது வேட்பாளர் தெரிவிலும் முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்க பெரும் பங்காற்றியிருந்தார். தற்போது கூட்டரசில் இருந்து சுதந்திரக் கட்சி வெளியேறி, தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் நியமித்துள்ளார். இந்தக் குழப்பங்கள் ஏற்பட்ட பின்னர் முன்னாள் ஜனாதிபதி பொது நிகழ்வுகள் எதிலும் கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில், பொதுவேட்பாளரிற்கான தேவையை தனியொருநபராக மக்கள் முன்கொண்டு சென்ற மாதுளவாவே சோபித தேரரின் நினைவு நிகழ்வில் அவர் நேற்றுக் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

## வடக்கில்...

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரையில் 210 குடும்பங்களைச் சேர்ந்த 647 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேசத்தில் முன்னெச்சரிக்கையாக 80 குடும்பங்களைச் சேர்ந்த 271 பேர் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர்பிரிவின்கீழ், ஆண்டான்குளத்தை அடுத்துள்ள நித்தகைக்குளம் உடைப்பெடுத்துள்ளது. குளத்துக்கு அண்மையில் வசிக்கும் குடும்பம் வீட்டுக்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் நடவடிக்கைகளில் மாவட்ட இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களும், கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் மழையுடன் கூடிய காலநிலை தொடர்வதால் இடரை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (ற-8,105)

## மைத்திரி...

வெளிப்படுத்தும் வகையில் அவ்வாறு அப்பம் வழங்கப்பட்டது என்று பேரணியில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தைக் கூட்டிப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான ஏற்பாடுகளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தே பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

**காலி முகத்திடலில் இருந்து சுதந்திர சதுக்கம் வரை வாகனப் பேரணி சென்றது. அதில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அதன் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர்.**

**பேரணியின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரைவாகனங்கள்மூலம்பொதுமக்களுக்குச் சுடச்சுட அப்பங்கள் வழங்கப்பட்டன.** (ற-10)

## நாளையுடன்...

விலகிச் செல்கின்றது. வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் மழையுடன் கூடிய நிலமை நாளை சனிக்கிழமை முதல் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழைவீழ்ச்சி சில தினங்களுக்கு எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு, வடமத்திய மற்றும் **கிழக்கு மாகாணங்களில் ஓரளவு குளிரான வானிலை காணப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

**இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக** பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-7)

## மைத்திரிபாலவுடன்...

'த ஹிண்டு' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மைத்திரியுடன் இனியும் இணைந்து பணியாற்றத் தயாரா? என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க எனக்கு அவருடன் இணைந்து பணியாற்றுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்தக் கேள்வியை நீங்கள் அவரிடம் கேட்கவேண்டும். அரசமைப்பில் தனிப்பட்ட பாரபட்சங்களுக்கு இடமில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்த பின்னர் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்? என்ற கேள்விக்குப் புதிய அமைச்சரவையை அறிவிக்கவேண்டியிருக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.

புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்படுவதற்கு முன்பிருந்த நிலையே தொடர்கின்றது என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார். அவர்கள் தமது பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறினால் அந்த நிலையே தொடரும் என்று ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றாலும், அவரைத் தலைமை அமைச்சராக நியமிக்காமல் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேறொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிறுபான்மைக் கட்சிகளிடம் கோரியிருந்தார். (ற-5)

## விக்கியின்...

அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு மீதான நீதிமன்றின் இடைக்காலக் கட்டளை ஜுன் மாதம் 29ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. வடக்கு மாகாண அமைச்சராக பா.டெனீஸ்வரன் தொடர்கின்றார் என்று கூறப்பட்டிருந்தது.

இந்தக் கட்டளைக்கு எதிராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மூல வழக்கை விசாரித்த நீதியரசர்களில் ஒருவரான தெஹிதெனிய, முதலமைச்சரின் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் குழாமில் உள்ளடக்கப்பட்டிருந்தார். டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் அதற்கு ஆட்சேபணை வெளியிட்டிருந்தனர். அதனால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு 4 தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

**நீதியரசர்களான பிரியந்த ஜெயரத்ன, விஜித் கே மல்கொட, முருது என்.பி.பெர்னாண்டோ ஆகியோரை உள்ளடக்கிய ஆயத்தின் முன்னிலையில் வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.**

**விக்னேஸ்வரன் தரப்புச் சட்டத்தரணிகள் இந்த வழக்கு அரசமைப்பின் பொருள்கோடலுடன் சம்பந்தப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அதனை விசாரிக்கும் அதிகாரம் இல்லை என்று வ்ாதிட்டனர்.** இது பொருள்கோடலுடன் சம்பந்தப்பட்டது இல்லை. பிரயோகம் தொடர்பான விவகாரமே இது என்றும், இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டதைச் சுட்டிக்காட்டியும், உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கலாம் என்று உத்தரவிட்டதையும் டெனீஸ்வரனின் சட்டத்தரணிகள் மன்றுக்குத் தெரியப்படுத்தினர்.

சுமார் 4 மணி நேரம் இந்த வழக்கு மீதான வாதம் நடைபெற்றது. வாதங்களை கேட்ட நீதியரசர்கள், அமர்வை சுமார் 10 நிமிடங்கள் ஒத்திவைத்தனர். பின்னர் தமது தீர்ப்பை அறிவித்தனர். விக்னேஸ்வரனின் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தனர். (ற-5)

## ஊழல்வாதிகளை...

சிறிசேனவே குறுக்கே நின்றார். நிதிக் குற்ற விசாரணைப் பிரிவின் சட்டபூர்வத் தன்மை தொடர்பில் முதலில் சவால் விட்டவர் சுசில் பிரேமஜயந்தவே. அவருக்கு எதிரான ஊழல் விசாரணை ஒன்றை நிறுத்துவற்காக அரச தலைவர் தலையீடு செய்தார். இன்று அதே சுசில் பிரேம ஜயந்த மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நீதியமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

இவ்வாறு கடுமையாகச் சாடினார் பேராசியர் சரத் விஜேசூரிய.

மாதுளுவாவே சோபித தேரரின் நினைவு தின நிகழ்வு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு நினைவுப் பேருரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

**சுதந்திரத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் போராடிய மாதுளுவாவே சோபித தேரர்** தற்போது உயிருடன் இருந்திருந்தால் தான் ஆதரித்துப் பரப்புரை செய்த பொது வேட்பாளரின் நடத்தையைக் கண்டு பெரும் விரக்தியடைந்திருப்பார்.

தனது ஆலோசகராக சிறிலால் லக்திலகவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்த தினத்தில் அரச தலைவரின் அநாகரிகமான நடத்தையின் முதல் அறிகுறியை சோபித தேரர் அவதானித்தார். என்னுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்ட தேரர் அரச தலைவரின் செயலை, நன்றி கெட்ட செயல் என்று வர்ணித்தார்.

2015ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இந்த நன்றிகெட்ட குணத்தின் வெளிப்பாடுகளைப் பல தடவைகள் எம்மால் காணக் கூடியதாக இருந்தது. ஒக்ரோபர் 26ஆம் திகதி அரச தலைவர் செய்த காரியம் திடுதிடுப்பென நடந்ததல்ல. நன்கு திட்டமிட்டே அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தையும், நல்லாட்சியையும் கொண்டு வருவார் என்ற எதிர்பார்ப்பிலும், நம்பிக்கையிலும் தனக்கு வாக்களித்த அனைவரது அபிலாசைகளுக்கும் முரணான இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கான சூழ்நிலைகளை சிறிசேன மிக ஆறுதலாகத் தயார் செய்துள்ளார் என்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகின்றது.

ஜனவரி 8ஆம் திகதி வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் கிளர்ந்தெழுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் பின்னணியிலும் சிறிசேனவே இருந்தார். அவர் துரோகத்தனமான முறையிலும், பண்பற்ற முறையிலும் செயற்பட்டுத் தன்னை நாகரீமற்ற ஒருவராக நிரூபித்துள்ளார். (ற)

## இரத்தக்...

ஏற்படும் என்று தெரிகின்றது. இணக்கமான தீர்வு இல்லாதபட்சத்தில் தற்போதைய நெருக்கடி வன்முறைகளில் போய் முடியலாம். சகல குழுக்களினதும் தார்மீகத் தலையீடு ஒன்றை தற்போதைய தருணத்தில் எமக்குத் தேவை. இவ்வாறு தெரிவித்தார் நாட்டின் பிரபல அரசியல் விஞ்ஞானி பேராசிரியர் ஜெயதேவ - உயன்கொட.

**மாதுளுவாவே சோபித தேரரின் நினைவு தின நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு நினைவுப் பேருரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விகாரைகளுக்குச் சென்று வழிபட்டாலும் அவர் பாவம் இழைத்தவராகவே கருதப்படுவார். கூட்டு அரசு அமைக்கப்பட்டதும் நாம் மகிழ்ச்சியடைந்தோம். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பேன் என்று கூறிய மைத்திரிபால சிறிசேன இன்று அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி முறையற்ற விதத்தில் செயற்படுகின்றார்.

நாட்டின் அனைத்துத் துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க அனைத்து மதங்களின் தலைவர்களும், சமூகத் தலைவர்களும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும், மூத்த குடிமக்களும் தலையீடு செய்ய வேண்டும். அத்தகைய தலையீட்டின் மூலமே நாட்டை தற்போதுள்ள சகதிக்குள் இருந்து மீட்க முடியும். தற்போதைய நெருக்கடிகளுக்கு அரசியல் கட்சிகளாலும், குழுக்களாலும் மாத்திரம் தீர்வு காண முடியாது.

மாதுளுவாவே சோபித தேரர் தார்மீகத் தலையீடுகளைச் செய்யக் கூடியதாக இருந்த சிவில் சமூக இயக்கம் ஒன்றின் செயற்பாடுகளுக்காகத் தன்னை அர்ப்பணித்திருந்தார். அதேபோன்ற அணுகுமுறையே தற்போது எமக்குத் தேவைப்படுகின்றது. அத்தகைய அணுகுமுறை இல்லாது போனால் தற்போதைய நெருக்கடி பெரும் இரத்தக்களறியாக மாறும் பேராபத்து இருக்கின்றது. ஒன்றிணைந்து நெருக்கடியைக் கட்டுப்படுத்த வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும் என்றார் (ற)

## சம்பந்தன்...

**அரச தலைவர் செயலணியின் கூட்டம் அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணியிலிருந்து மதியம் வரை இடம்பெற்றது. இந்தக் கூட்டம் முடிந்த பின்னர்,** அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் உரிய வகையில் தீர்வு காணவுள்ளோம் என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்தார். இந்த விடயம் தாமதிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொண்டார். கால சூழலுக்கு ஏற்ப விரைவில் தீர்வு காணுவேன் என்று குறிப்பிட்டார். நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் செயற்படுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன் - என்றார். (ற-5)

## 'விளையாட...

உள்ளன. அவற்றை பயன்படுத்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டுமானால் அதையும் செய்வேன். விளையாட வேண்டாம் என்று நான் சம்பந்தப்பட்டவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை பத்தரமுல்லை 'அப்பே கம' வளாகத்தில் நடைபெற்றது.

அரச தலைவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்வைத்த காலை நான் பின்வைக்க மாட்டேன். பெரும்பான்மையில்லை, நாங்கள் தடுமாறுகின்றோம் என்ற கதைகள் பரவலாக வெளியிடப்பட்டு வருகின்றன. நாங்கள் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் காட்டுவோம். இந்த மாதிரியான கதைகளுக்கு காது கொடுத்து, இரவில் நித்திரை கொள்ளாமல் அலைவதை விடுத்து நிம்மதியாக நித்திரை கொள்ளுங்கள். பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் விடயத்தை நான் பார்த்துக் கொள்கின்றேன்.

நாடாளுமன்றத்தில் 2002ஆம் ஆண்டு தலைமை அமைச்சராக ரணில் இருந்த போது, அப்போதைய அரச தலைவர் சந்திரிக்கா அம்மையார் நாடாளுமன்றத்துக்கு **கைப்பையுடன் செல்ல முடியாத நிலை இருந்தது. ரணிலால் அன்றும் நாம் நெருக்கடிக்கு முகம் கொடுத்தோம். ஆனாலும், பின்னர் சந்திரிக்கா அம்மையார் தனக்கிருந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதை அவர் இன்று மறந்து செயற்படமுடியாது.** நான் எனது அதிகார வரையறைக்கு உட்பட்டுத் தான் செயற்படுகின்றேன். அரசமைப்பை நான் மீறவில்லை. சிறப்புச் சட்டநிபுணர்களுடன் பேசியே நடவடிக்கைகளை எடுக்கின்றேன்.

தலைமை அமைச்சராக மகிந்த நீடிப்பார். நான் அரச தலைவராக நானே நீடிப்பேன். இந்த அரசு தொடரும் என்றார்.

அமைச்சர் துமிந்த திசாநாயக்கா, தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. (5,31)




## விக்டோரியாவை வென்றது மட்ரிட்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து விக்டோரியா அணி மோதியது.

ஆட்டத்தின் முதல் 20 நிமிடங்களுக்கு மட்டுமே ரியல் மட்ரிட் அணிக்கு விக்டோரியாவால் ஈடுகொடுக்க முடிந்தது. 20ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்து அந்த அணியின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்தார் பென்சிமா.

23ஆவது நிமிடத்தில் காஸ்மிரோ மட்ரிடின் இரண்டாவது கோலையும், 37ஆவது நிமிடத்தில் பென்சிமா மட்ரிட்டின் மூன்றாவது கோலையும், 40ஆவது நிமிடத்தில் பேல் மட்ரிட்டின் நான்காவது கோலையும் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் அந்த அணி 4:0 என்ற கோல் கணக்கில் வலுவான ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாவது பாதியின் 67ஆவது நிமிடத்தில் குரூஸ் மட்ரிட்டின் ஐந்தாவது கோலைப் பதிவு செய்தார். முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அபார வெற்றிபெற்றது.

**முதலிடம்**

சம்பியன்ஸ் லீக் தொடரில் ஜி பிரிவில் மட்ரிட் இடம்பிடித்துள்ளது. அந்த அணி 4 ஆட்டங்களில் விளையாடி மூன்று வெற்றிகள், ஒரு தோல்வி என 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் றோமா, சி.ஏ.கே.ஏ. மொஸ்கோ, விக்டோரியா ஆகிய அணிகள் உள்ளன. (ம)




# ஸ்கந்தாவின் கால்பந்தாட்டத்தில் மானிப்பாய் இந்து சம்பியனானது

யாழ்ப்பாணம், நவ. 9

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி தீபாவளித் திருவிழாவை முன்னிட்டு நடத்திய லயன் மகாதேவா பூமாதேவி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது மானிப்பாய் இந்து. இந்தக் கோல்களை தில்லைக்காந்தன், தர்சிகன் இருவரும் பதிவுசெய்தனர். இரண்டாவது பாதியில் மேலும் ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் இந்து முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவது பாதியில் பதிவான மூன்று கோல்களில் தில்லைக்காந்தன் இரண்டு கோல்களையும், அபினேஸ் ஒரு கோலையும் பதிவுசெய்தனர். மானிப்பாய் இந்துவின் தில்லைக் காந்தன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் மகாஜனா வெற்றி பெற்றது. (ம-23)



வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து அழைக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையிலான எறிபந்தாட்ட பயிற்சி முகாம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வலிகாமம் கல்வி வலயத்தால் எறிபந்தாட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்தப் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. (ம-422)



## சரஸ்வதியின் பூப்பந்தாட்டத்தில் கிழக்கு மாகாண வீரர் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 9

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் திபாவளித் திருவிழாவை முன்னிட்டு நடத்திய பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த குணசீலன் சம்பியனானார்.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்தும் செய்து விளையாடிய நிலோயனை எதிர்த்து கிழக்கு மாகாணத்தைச் பிரதிநிதித்தும் செய்து விளையாடிய சற்குணசீலன் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம-23)



## வடக்கு மாகாண இணை பூப்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், நவ. 9

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் திபாவளித் திருவிழாவை முன்னிட்டு நடத்திய பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவு இரட்டையர் ஆட்டத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த றெமில்சன், துசாந்தன் இணை கிண்ணம் வென்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்தும் செய்து விளையாடிய நிலோஜன், சற்குணசீலன் இணையை எதிர்த்து வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்தும் செய்து விளையாடிய றெமில்சன், துசாந்தன் இணை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# பாகிஸ்தானை தோற்கடித்தது நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 47 ஓட்டங்களால் வெற்றி பெற்றது நியூசிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் 80 ஓட்டங்களையும், லாதம் 68 ஓட்டங்களையும், முன்றோ 29 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் அப்ரிடி, சடப் கான் இருவரும் தலா 4 இலக்குகளையும், இமாட் வசிம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 219 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சர்பிராஸ் அகமட் 64 ஓட்டங்களையும், இமாட் வசிம் 50 ஓட்டங்களையும், இமாம் உல் ஹக் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் போல்ட், பேர்குசன் இருவரும் தலா 3 இலக்குகளையும், கிராண்ட்ஹோம் 2 இலக்குகளையும், சவுத்தி, சொட்கி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுள்ள காரணத்தால் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே கிண்ணம் வெல்ல முடியும் என்ற நெருக்கடி பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. அதே நேரம் அடுத்த இரண்டு ஆட்டங்களில் ஏதேனும் ஓர் ஆட்டத்தில் வெற்றிபெற்றாலேயே பாகிஸ்தான் அணியால் கிண்ணம் வெல்ல முடியும்.

**போல்ட் ஹற்றிக்**

இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் போல்ட் ஹற்றிக் படைத்தார். ஆட்டத்தின் மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தை வீசிய அவர், சமன், அசாம், ஹபீஸ் ஆகியோரை 2ஆவது, 3ஆவது, 4ஆவது பந்துகளில் வீழ்த்தி ஹற்றிக் படைத்தார். (ம)



இந்திய அணி வருவதற்கு முன்பாக

# சிமித், வோர்ணர் மீதான தடையை நீக்க திட்டம்!

## ஆஸி. கிரிக்கெட் சபை தீவிர பரிசீலனை

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்வதற்கு முன்னதாக, ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தடையை திரும்பப் பெறுவதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவை அடக்கி வலுவான ஆதிக்கம் செலுத்தியது தென்னாபிரிக்க அணி. இதையடுத்து டெஸ்ட் ஆட்டமொன்றில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தும் சதியைக் கையிலெடுத்தது ஆஸ்திரேலிய அணி. உபதலைவர் வோர்ணர் திட்டம் வகுக்க, அணித் தலைவர் சிமித் அதை அனுமதிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் பந்தைச் சேதப்படுத்தினார். இவர்களின் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிமித், வோர்ணர் இருவருக்கும் தலா ஓர் ஆண்டும், பான்குரொப்ட்டுக்கு 9 மாதங்களும் தடை விதித்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை. இவர்கள், இல்லாமல் ஆஸ்திரேலிய அணி ஏகப்பட்ட தோல்விகளைச் சந்தித்துள்ளது. அடுத்ததாக இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தத் தொடரில் சிமித், வோர்ணர், பான்குரொப்ட் ஆகியோர் இல்லாவிட்டால் ஆஸ்திரலிய அணியை அதன் மண்ணில் வைத்து வீழ்த்தி இந்தியா கிண்ணம் வெல்லும் என்ற கருத்துக் கணிப்பு பொதுவாக உள்ள நிலையில் இவர்கள் மூவர் மீதான தடைகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு அழுத்தம் குவிந்தது. இதையடுத்தே இவர்கள் மூவர் மீதான தடைகளை உடன் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. (ம)

# பெல்ஜியம் முதலிடம்!

பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தது பெல்ஜியம். ஏற்கனவே முதலிடத்தில் இருந்த உலகச்சம்பியனான பிரான்ஸை அது பின்தள்ளியது.

பன்னாட்டுக் கால்பந்தாட்டச் சம்மேளனம் தனது தரவரிசைப் பட்டியலை நேற்றுப் புதுப்பித்தது. பெல்ஜியம் ஆயிரத்து 733 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. பிரான்ஸ் ஆயிரத்து 732 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பிரேசில் ஆயிரத்து 669 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும், குரோசியா ஆயிரத்து 635 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தையும், இங்கிலாந்து ஆயிரத்து 619 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்தையும் கைப்பற்றின.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே உருகுவே, போர்த்துக்கல், சுவிற்சர்லாந்து, ஸ்பெய்ன், டென்மார்க் ஆகிய அணிகள் உள்ளன. (ம)





# சமநிலை

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பார்சிலோனா இன்டர் மிலன் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியும் கோல்கள் இல்லாமல் நீண்டு சென்றது. 83ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் மல்கொம் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 87ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் மிலனின் இக்கார்டி. முடிவில் ஆட்டம் சமநிலையானது. (ம)

# தரப்படுத்தலில் விராட் கோக்லி முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது. இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளார்.

பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்ததை அடுத்து இந்தத் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது. இந்திய அணியின் தலைவர் கோக்லி 935 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். சிமித் 919 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 847 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்தின் அணித் தலைவர் ரூட் 835 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் வோர்ணர் 812 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும், உள்ளனர். ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் புஜாரா, கருணாரத்ன, சந்திமல், எல்கர், கவாயா ஆகியோர் உள்ளனர்.

இதன்படி தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் உள்ள இலங்கை வீரர்களாக சந்திமல், கருணாரத்ன ஆகியோரே உள்ளனர். இவர்களை விட குசல் மென்டிஸ் 16 ஆவது இடத்திலும், மத்தியூஸ் 24ஆவது இடத்திலும், டிக்வெல்ல 39ஆவது இடத்திலும், தனஞ்சய டி சில்வா 48ஆவது இடத்திலும், றோசன் சில்வா 70ஆவது இடத்திலும், தரங்க 73ஆவது இடத்திலும், குணதிலக 75ஆவது இடத்திலும், கௌசால் சில்வா 80ஆவது இடத்திலும், குசல் பெரேரா 89ஆவது இடத்திலும், டில்ருவான் பெரேரா 92ஆவது இடத்திலும், அசல குணரத்ன 99ஆவது இடத்திலும் உள்ளனர். (ம)



**போட்டிப் பரீட்சை கருத்தரங்கு**

**அதிபர் சேவை**
**SLPS III**
Nov-11 Sun 9.00 - 3.00 pm
விடய ஆய்வு, கல்வி முகாமைத்துவம், உளச் சார்பு, கல்வி பொது அறிவு

**விரிவுரையாளர்கள்**
S. நவநீதன்
M. அசோக்குமார்

இவ் வளவாளர்களின் விரிவுரைகள் இந் நிறுவனத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே.

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695


# கேரத் 433 இலக்குகள்

இலங்கை அணியின் அனுபவ வீரரான ரங்கன கேரத், ஒரு பந்து வீச்சாளராக நேற்றுடன் தனது கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொண்டார். அவர் ஒட்டுமொத்தமாக 433 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இங்கிலாந்துக்கு எதிராக காலியில் தற்போது நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெறுகிறார் கேரத். இங்கிலாந்தின் இரண்டாவது இன்னிங்ஸ் நேற்று முடிவுக்கு வந்தது. இதனால் கேரத் இனிப் பந்துவீச வாய்ப்பில்லை. ஒட்டுமொத்தமாக அவர் 433 டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)




**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

சுங்க திணைக்கள பரிசோதகர் அத்தியட்சகர்
சனி, ஞாயிறு
10.00 → 3.00

அலுவலக பணியாளர்
பிரதி சனி
11.00 → 3.00

ஆசிரியர் தெரிவு
சனி 11.00 மணி
ஞாயிறு 10.00 மணி

அதிபர் சேவை
பிரதி ஞாயிறு
9.30 → 3.30

SLAS
SLEAS
பிரதி சனி
9.00 → 3.00

**தொடர்புகளுக்கு**
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)



**வேலை வாய்ப்பு**


உருக்கு அலுமாரி செய்வதற்கு
அலுமாரி வேலை தெரிந்தவர்கள்,
வெல்டிங் வேலை தெரிந்தவர்கள்
தேவை.
(CS 21066) (04.17)
077 905 0186/077 226 9950


# இலங்கைக்கு இமாலய இலக்கை நிர்ணயித்து இங்கிலாந்து அதிரடி

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணிக்கு இலக்காக 462 ஓட்டங்களை நிர்ண யித்தது இங்கிலாந்து அணி.

காலியில் கடந்த 6ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 342 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. அதிகபட்சமாக போக்ஸ் 107 ஓட்டங்களையும், கரன் 48 ஓட்டங்களையும், ஜெனிங்ஸ் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 5 இலக்குகளையும், லக்மல் 3 இலக்குகளையும், தனஞ்சய, கேரத் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 203 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மத்தியூஸ் 52 ஓட்டங்களையும், சந்திமல் 33 ஓட்டங்களையும், டிக்வெல்ல 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொயின் அலி 4 இலக்குகளையும், ரசிட், லீச் இருவரும் தலா 2 இலக்குகளையும், அண்டர்சன், கரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தின இரண்டாவது நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி ஜெனிங்ஸின் அதிரடிச் சதத்தின் உதவியுடன் 6 இலக்குகள் இழப்புக்கு 322 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஜெனிங்ஸ் 146 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 62 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணிக்கு 462 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸுக்காக இலக்குச் சரிவில்லாமல் 15 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றிருந்த போது நேற்றைய நாள் முடிவுக்கு வந்தது. (ம)




**ஆங்கில வகுப்புக்கள்**

**Certificate in English**
(For Beginners)
Duration: 05 Months (60 Hours)

உங்களுடையமுன்னேற்றத்திற்கு ஆங்கிலம் ஓர் தடையாக உள்ளதா? கவலையை விடுங்கள்!!

**New Batch Starts on 10-11-2018 @ 9.00 am**

HOTLINE 077 757 0038 / 071 777 3444

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
TEL :- 021 222 8060 web : iis.edu.lk



**தென்னிந்திய யாத்திரை**

**தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை**

**ஆரம்பம் 05.12.2018 யாத்திரீகர் 10 நாள்கள் 16**

தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.


தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)

**வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.**

தொடர்புகளுக்கு:
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
**59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11.**
sriranganathan1944@gmail.com / sriranganathan2601@gmail.com
**T.P - 077 768 0102/ 077 736 2154**


**மரண அறிவித்தல்**



# சீனித்தம்பி இராசதுரை (கிளாக்கர் ஐயா)

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு களவாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சீனித்தம்பி இராசதுரை (கிளாக்கர் ஐயா) நேற்று (08.11.2018) வியாழக்கிழமை வசந்தபுரம் வசந்தநாகபூஷணி அம்பாளின் திருவடியில் பரமபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி - சிவபுரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார், கனகசபை மற்றும் சுப்பிரமணியம், சபாரட்ணம் மகேஸ்வரி, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ஜெயக்குமாரி, ஜெயக்குமார், பாஸ்கரன், பானுரேகா ஆகியோரின் தந்தையும், பாலசிங்கம், ஜெனனி, நிவேதிகா, கிருஷ்ணகுமார் ஆகியோரின் மாமனாரும், நிரோஷா, விதுஷா, ஆனந்த், இந்திரஜித், அபிஷேக், விதுஷேக், ஜெனுஷேக், பவித்திரா, வசந்த கௌரி, பிருந்தாவன், பிரியங்கா, வேணுகா, தணிகா, ஸ்வேதா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் யோகேஸ்வரி, செல்வராணி (பவி), இந்திராணி, இந்திராதேவி, ராஜ்குமார், வசந்தகுமாரி (வசந்த நாகபூஷணி அம்மன் களவாவோடை), விஜியகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடா கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்.**

**ஏழாலை தெற்கு,**
**களவாவோடை, ஏழாலை.**
(CS/21083)(11)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.